இருகிறுமம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 3 - இருக்கை 4 ஒரு பொல்லாப்புமில்லை 15-02-2009

50/-

முத்துக்குமாரின்
மரண சாசனம்

சிங்கள
ஊடகவியலாளரை
காப்பாற்றுங்கள்

காதல் ஒரு நோய்
மருந்து அவசியம்

ISSN 1800-3694

எரியும் நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரச்சனைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலாபொல" பா ஒரு ர்வை

06

எரியும் நினைவுகள்

82

74

தீங்கள் எந்த வகை?

42

காதல் ஒரு நோய்

மருந்து அவசியம்

இருக்கிறம்

வணக்கம் வாசக நெஞ்சங்களே

சுதந்திரமே ஒரு தினமாகிப் போன தேசத்தில் வாழும் தமிழ் உள்ளங்களே. ஆடம்பர மேற்குலகு காதலர் தினத்தை கொண்டாடும் காலத்தில், நாம் எதைக் கொண்டோடுவது என்ற வாழ்வின் இருப்புச் சிக்கலில் இருக்கிறோம். அழிவுகள் ஒருபுறமும், மனம் தாளாச் சோகத்திலும் கோபத்திலும் புலம் பெயர்ந்த உறவுகள் மேற்கொள்ளும் எழுச்சி மறுபுறமுமாக இருக்கிறது எமது இருப்பு. இவை எல்லாவற்றை விடவும் பேரெழுச்சிப் புயலொன்றில் சிக்கிக் கிடக்கிறது எம் தாய்த் தமிழகம்.

வெற்று அரசியல் வாய்ப் பேச்சாக இருந்த "தொப்புள் கொடி உறவு" என்ற வார்த்தையை, உயிருள்ள அர்த்த வார்த்தையாக்கி வருகிறது இன்றய தமிழகம். தமிழகத்தின் ஆறு கோடி உறவுகள் தராத ஆன்மக் கயிற்றின் நெருக்கத்தை, ஓர் ஒற்றை உயிர்த் தியாகம் தந்து சென்ற ஆச்சரியத்தில் இருந்து நாம் இன்னும் விலகவில்லை. எங்கள் முத்தெடுப்புக்காக ஓர் தாயுறவு மூச்சடக்கியதை எந்த வார்த்தைகளில் வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை.

தமிழ் ஊடகமும் தமிழருக்கான ஊடகமும் சின்னாபின்னப்பட்டிருக்கும் வேளையில், தமிழ் ஊடகவியலாளன் ஒருவனின் உயிர்த் தியாகம் நடந்திருக்கிறது. "காகிதம் செய்வோம் நல்ல ஆயுதம் செய்வோம்" என்ற பாரதியின் வரிகளுக்கான உண்மை அர்த்தத்தை புரிய வைத்து விடைபெற் றிருக்கிறான் முத்துக்குமார். அவன் கைபட செய்து தந்த அந்த காகித ஆயுதத்தை நாம் என்ன செய்ய போகிறோம்.

என்றும் அன்புடன்,

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மௌரிய வம்சத்து சாம்ராட் அசோகன். கலிங்கத்து மக்கள் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்தான். மௌரிய சாம்ராஜ்யத்தின் மேலாதிக்கத்தை நிராகரித்த கலிங்க தேசம் தனது மக்கள் எல்லோரையும் இப்போரை எதிர்ப்பதற்கு அணி திரட்டியது. கலிங்கமோ சின்னஞ்சிறிய தேசம். மௌரிய சாம்ராஜ்யத்திற்கு எதிராக நிற்க முடியுமா? ஆனாலும் போராடியது. தனது இறுதி போர் வீரன் மரணிக்கும் வரையிலும் போராடியது. ஈற்றில் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

பிறகு நடந்தது பிரசித்த வரலாறானது. போர்க்களத்தில் இறந்து கிடந்த உடல்களைப் பார்த்த அசோகன் மனம் மாறி அஹிம்சா நெறியான பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டான் என்று நாம் படித்திருக்கின்றோம். ஆனால் இந்த வரலாறு அவ்வளவு சரியானதல்ல என்பது தான் நம் வாதம். போர்க்களத்தில் அடுக்கடுக்காய் இறந்து கிடந்த உடல்களைக் கண்டு அவன் மனம் மாறவில்லை. மாறாக ஒரு உயரிய இலட்சியத்துக்காக இவ்வாறு ஆயிர மாயிரம் மக்கள் தங்கள் உயிர்களை அழிப்பதற்குத் துணிந்தார்களே யென்ற மலைப்புத்தான் அவனை அஹிம்சாவாதியாக மாற்றியிருக்க வேண்டும். அந்தப் பாரிய தியாகம் எந்தப் பெரும்படையென்றாலும் கூட அது மனித உயிர்களைத்தான் காவு கொள்ள முடியுமே தவிர விடுதலை வேட்கை கொண்ட அவர்கள் ஆன்மாக்களையல்ல என்ற உண்மை அவன் முகத்திலடித்தாற்போல் புலப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பலப்பரீட்சையில் தனது வீரர்களும் பன்மடங்காக மரித்துப் போனதையும் அறிந்தான். அப்பா! ஒருவனுடைய ஆணவத்திற்கு எத்தனை உயிர்கள் பலியாகின. கடைசியில் மக்களின் மனங்களை வெல்ல முடிந்ததா? இல்லையே. இவ்வாறு ஆயுதங்களின் பயனற்ற தன்மை கண்டு வெட்கியே அசோகன் பௌத்த மதத்தை ஏற்றிருக்கின்றான் போலும். இந்த முறையில் இந்தக் கதையைச் சொன்னால் உலகமெல்லாம் தியாகப் போராட்டங்கள் புரிய மக்கள் கிளம்பி வந்து விடுவார்களேயென்றுதான் அதை மெல்லத் திரித்து வன்முறையையும் இறப்புக்களையும் கண்டு மனம் வெதும்பிப் போனான் என்று சொன்னார்களோ. எப்பொழுதும் ஆளும் வர்க்கங்கள்தானே எங்களுக்கு எங்கள் வரலாறுகளைப் போதிக்கின்றன. அவற்றிற்கு மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் என்றுமே கசக்கும் வேம்புதான். அதனாலேயே என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும்கூட அதிகாரம் துண்டாடப்படும்போது அரசுகள் என்றுமே ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பாகவும் ஒத்தாசையாகவும் இருக்கக் காண்கின்றோம். மனித சமூகத்தின் உயிர்த்தியாகங்கள் எப்பொழுதுமே உள்ளங்களை மாற்றும் சக்தி படைத்தன. இந்த வரலாற்றினை நாம் திரும்ப எங்கள் வன்னிப் பிரதேசத்தில் கண்டு கொண்டிருக்கின்றோம். பண்டைய அசோகன் போல் இன்றைய மனிதர்களும் மனம் மாறுவதைக் காணுகின்றோம். ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் கோர்டன் வைஸின் வன்னி நிலமையைப் பற்றிய கூற்றுக்களைப் பார்த்தால் சர்வதேச சமூகமும் மனம் திரும்புகின்றது போலிருக்கின்றது. வன்னி மக்களின் அவலங்களைப் பற்றி ஆணித்தரமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற கொந்தளிப்புக்களும் சர்வதேச சமூகத்தின் மனமாற்றங்களும் எங்கள் அசோகர்களையும் உண்மையான பௌத்தர்களாக மாற்றிடுமா?

கலிங்கப் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கலாபொல” ஒரு பார்வை



இலங்கையின் மிகவும் பிரபல்யமான திறந்தவெளி ஓவிய கண்காட்சியையும் விற்பனையையும் ஒருங்கே கொண்டமைந்த ஒரு கண்காட்சிதான் கலாபொல கண்காட்சி.

வருடத்திற்கு ஒரு நாள் மட்டுமே நடைபெறும் இந்தக் கண்காட்சி இதன் முக்கிய சிறப்பாகும். ஜோர்ஜ்கீற் மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிற்கு பின்புற வீதிகளில் இடம் பெறும் இந்தக் கண்காட்சிக்கு ஜோன் கீல்ஸ் குழுமம் அனுசரணை வழங்குகின்றது. இக் கண்காட்சி ஆரம்பித்து இவ்வருடத்துடன் 16 வரு டத்தை நிறைவு செய்திருக் கின்றது.

ஆத்மார்த்தமான உணர்வுகளை விழிப்படையச்செய்யக் கூடிய ஒரு உன்னதமான வல்லமை தூரிகை களால் படைக்கப்பட்ட ஓவியங் களுக்கு உண்டு. கடந்த மாதம் 25 ஆம் திகதி கலாபொல கண்காட்சியில் அவ்வாறான தூரிகைகளின் வல்ல மைகளைக் காணக்கூடியதாக இருந்த தமை அதன் தனித்துவச் சிறப்பா கும். இவ்வாண்டு இடம்பெற்ற இக்கண்காட்சியில் சுமார் 250 இற் கும் மேற்பட்ட ஓவியர்களும் சிற்பி களும் தமது ஆக்கத்திறன்களை உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு ஓவிய ஆகியோர் தமது கைவண்ணங்களை அறிமுகப்படுத்தவும் தொழிலில் முன்னேறவும் உறுதியான வாடிக் கையாளர் தளத்தை கட்டியெழுப் பவும் பெறுமதிமிக்க ஒரு சந்தர்ப்ப மாகவுள்ளது. முன்னர் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட கலாபொல இன்று தேசிய நிகழ்வாக திகழ்கின் றது. தங்களின் கைத்திறமைகளை பல கொள்வனவாளர்களுக்கு காட் சிப்படுத்தும் வாய்ப்பைப் பெற் றுள்ள இலங்கை முழுவதுமுள்ள

ரசிகர்களுக்கு காட்சிப்படுத்தினர். சுமார் 2,000 க்கும் அதிகமான ஓவி யங்கள் கன்வஸ் துணியில் எண்ணெ ணய் வர்ணங்கள் மற்றும் தூள் வர் ணங்களால் வரையப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டன.

வசீகரமுள்ள வர்ணம், செழிப்பு, தோழமையுடனான உழைப்பு போன்றவற்றினை அடிப்படையா கக் கொண்டுள்ள கலாபொல கண் காட்சியானது ஓவியர்கள், சிற்பிகள் நூற்றுக்கணக்கான ஓவியர்கள் மற் றும் சிற்பிகளை அது கவர்ந்துள்ளது. இவர்கள் தங்களின் திறமைகளை கொழும்பிலுள்ள வழமையான கலா பவனங்களில் காட்சிப்படுத்த முடியாத நிலையிலுள்ளவர்கள். கார ணம் பெருமளவான பணம் செல வழித்தே காட்சிப்படுத்த வேண்டியி ருந்தது. ஆனால் அவ்வாறு காட் சிப்படுத்தினாலும் செலவழிக்கப் பட்ட பணத்தொகையை விட அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமான வருமானத்தை ஓவியங்களை விற்பதால் பெறமுடியுமா என்பது கேள்விக்குறியே. ஆனால் கலா பொல கண்காட்சியைப் பொறுத்த வரை குறைந்தளவு பதிவுக்கட்டணத்துடன் காட்சிப்படுத்தப்படும் ஓவியங்களின் மூலம் ஒரேநாளில் செலவுக்கு மிஞ்சிய வருமானத்தைப் பெறமுடியும் என ஒழுங்கமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

மிருந்து பல நல்ல ஐடியாக்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு படைப்புக்களுக்கும் அவற்றின் தன்மை அது கொண்டுள்ள கருப்பொருள் அதில் பிரயோகிக்கப்பட்டுள்ள வர்ணம். அற்காக பயன்படுத்தப்பட்ட கால அளவு என்பவற்றைக் கொண்டே அதற்குரிய விலையும் தீர்மானிக் கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீட மாணவன் ரோஹண குமாரசிறி "இந்தக் கண்காட்சி எனது திறமைகளை வெளிக்கொணரக் கூடியமாதிரி இருந்தது. இது எனக்கு இரண்டாவது தடவை. இலங்கையில் எல்லா இடங்களிலிருக்கும் ஓவியர்கள் இதற்கு வருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித மான ஐடியாக்கள் இருக்கும். இதனால் ஒரே இடத்தில் இவர்களிட

சுமார் 1,500 ரூபாயிலிருந்து ஏறத்தாழ 5,0000 வரை இங்குள்ள படைப்புக்கள் விற்கப்பட்டன. இங்கு தனது படைப்புக்களை காட்சிப்படுத்தியிருந்த இந்திகா ஆர்ட் கலரியைச் சேர்ந்த இந்திக பத்மநந்தா "கலாபொல கண்காட்சியின் ஆரம்பத்திலிருந்தே நான் பங்குபற்றி வருகின்றேன். இது 1992 இலேயே ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து நான் ஒவ்வொரு கலாபொல கண்காட்சியிலும் பங்குபற்றி வருகின்றேன். இவ்வாறான சந்தர்ப்பங்களின் மூலம் எமது படைப்புக்களை

வெளியில் கொண்டுவர முடிகிறது. இதனால் எம்மத்தியில் இவ்வளவு திறமையான கலைஞர்கள் இருக்கின்றார்களா என சமூதாயம் நினைக் கும். அத்துடன் இவர்களை சமுதாயத்தில் முன்னோக்கிச் செல்வதற் கான சந்தர்ப்பமாகவும் இது அமையும்" என்று கூறினார்.

ஆனால் தற்பொழுதுள்ள சூழ்நிலையில் யுத்தமும் அதன் கொடூரங்களும் கலைகளினுடாக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதேவேளை சமாதானத்தின் அவசியம் பற்றியும் வலியுறுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். ஆனால் இம்முறை ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கண் காட்சியில் யுத்தம் தொடர்பாகவோ, சமாதானம் தொடர்பாகவோ பிரதிபலிக்கின்ற எவ்வகையான காட்சிகளையும் இங்கு காட்சிப்படுத்த வேண்டா மென இதன் ஒழுங்கமைப்பாளர்கள் வேண்டு கோள் விடுத்திருந்தனர்.

இந்த கண்காட்சியில் தனது பங்களிப்புத் தொடர் பாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் அழகியற் கலைப்பீட நுண்கலைப் பட்டதாரியான கருணா நாயக்க இவ்வாறு தெரிவிக்கின்றார். "நான் ஒரு ஓவியக் கலைஞன் என்ற வகையில் எனது ஓவியங் களை விற்பனை செய்யும் எண்ணத்துடனேயே இங்கு பங்குபற்றுகிறேன். கடந்த 5 வருடங்களாக இதில் பங்குபற்றி வருகின்றேன். இங்கு யார் வேண் டுமானாலும் பங்குபற்றலாம். இங்கு சிங்களவர்கள் தமிழர்கள் என்று பிரச்சனைகள் இல்லை. இங்கு

ரோஹண குமாரசிறி

இந்திக பத்மநந்தா

கருணாநாயக்க

பிரசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற கலைஞர்களோ, பார்வையாளர்களோ அவர்கள் எதனை விரும்புகிறார்கள். எதனை எங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள் என்பவற்றை படித்துக்கொள்ள வசதியாக இந்தக்கண்காட்சி அமைந்திருக்கின்றது" என்று தெரிவித்தார்.

இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அதிகமான ஓவியங்கள் மலர்கள் ,பெண்கள், தேவதைகள் காதல், காட்டுவிலங்குகள், பறவைகள் போன்றவற்றை பிரதிபலிப்பனவாக அமைந்திருந்தன. மேலும் மனித உடலியற் கூறுகளை வெளிப்படுத்தும் ஓவியங்களும். இயற்கைக் காட்சிகளையும் கிராமிய நகர வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் காட்டும் ஓவியங்களும் மற்றும் பௌத்த ஜாதகக் கதைகளும் பௌத்த பாரம்பரிய கலை கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஓவியங்களும் அதிகமாகவே காணப்பட்டன.

ஆக ஓரிரண்டு ஓவியங்கள் மட்டுமே யுத்தம் சமாதானத்தின் தேவை தொடர்பாக வரையப்பட்டிருந்தன. ஆனாலும் ஒரே ஒரு குறை இருந்தது. அதாவது இந்தக் கண்காட்சிக்கு தமிழர்கள் எவரும் பங்குபற்றுவதில்லை என்பதே அது. இதுதொடர்பாக யாழ்பல்கலைக்கழக சித்திரமும் வடிமைப்பும் துறை பட்டதாரி மாணவனான பிரசாத் "எங்களுக்கு இங்குவந்து கண்காட்சிகளை நடத்துவதற்குரிய வசதிகளும் சூழ்நிலைகளும் தற்போது இல்லை. கண்காட்சி தொடர்பான அறிவித்தல்கள் எல்லாம் சிங்கள பத்திரிகைகளிலே வெளிவருகின்றன. ஆனால் தமிழ் ஊடகங்களில் இதுதொடர்பாக வெளிவருவதில்லை. எங்களுக்கும் நிறைய ஆசைகள் கனவுகள் இருக்குது. எங்களுடைய படைப்புக்களையும் இப்படி காட்சிப்படுத்தி விற்க ஆசையாதான் இருக்கு. ஆனால் இன்றைய சூழ்நிலையில் முடியவில்லையே. குடாநாட்டில் இதே போன்ற கண்காட்சியை நடத்தினால் எங்களுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும். எங்களுடைய படைப்புக்களுக்கும் ஒரு அங்கீகாரம் கிடைத்தது போலாகும்" என்று ஆதங்கப்பட்டார்.

உண்மைதான் இலங்கையின் கலாச்சார நாட்காட்டியில் மிகவும் முக்கிய நிகழ்வாக கலா பொல கண்காட்சி அமைந்திருக்கின்றது. பலதரப்பட்டவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதுடன் புதிய தொழில் வாய்ப்புக்களையும் ஆரம்பிப்பதற்கு ஒரு வருமானத்துக்கான காரணியாகவும் கலாபொல உள்ளது. கலைக்கான அவர்களின் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் வெற்றி பெறுவதற்கான உறுதி ஆகியன உண்மையில் உற்சாகமூட்டுவனவாக உள்ளன. சமூகத்தின் தன்மையை பாதுகாப்பதற்கு கலைகளுக்கு உற்சாகமூட்டுவது அவசியம். அத்துடன் நின்றுவிடாது இந்த நாட்டின் மற்றுமொரு சமூகமான தமிழ் மக்களையும் இணைத்து இவ்வகையான கண்காட்சிகளை நடத்துவது காலத்தின் தேவையாகவுள்ளது. இதன் மூலம் அவர்களுடைய உள்ளத்து உணர்வுகளை படைப்புக்களாக வெளிப்படுத்தி ஒரு ஜனநாயகம் மிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதில் ஐயமில்லை.

யாத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தலை காதல்

நான் ஏ.எல் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அவளுடைய பெயர் மீனா பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள் காதலிக்கவோ, இல்லை அதைப்பற்றி நினைத்துப் பார்க்கவோ கூட தெரியாத வயது அது. ஆனால் வாழ்க்கையில் காதல் இப்படித்தான் வரும் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

பார்த்த முதல் தடவையே எனக்கு காதல் வரவில்லை நிச்சயமாய் தெரியும். எங்கள் வீட்டெதிரில் அவர்கள் குடும்பம் வந்து சில மாதங்கள் இருக்கும். இதற்கு முன் என்னைப் பற்றி ஒரு சிறிய அறிமுகம். நான் அவ்வளவு அழகானவன் இல்லை எங்கள் குடும்பம் மிகவும் நடுத்தர மான குடும்பம் தான். முக்கியமாக நான் தமிழ் மீடியத்தில் படித்தேன். அவள் குடும்பம் சிறிது வசதியானது என்று நினைக்கிறேன். இன்ரநஷனல் ஸ்கூலில் படித்தாள். அவளுக்கு ஒரு அண்ணன் சரியாக என் வயது ஒத்தவன். நான் படிக்கும் அதே வகுப்பை வேறொரு பள்ளியில் படித்து வந்தான். நாங்கள் இருவரும் கிரிக்கட் விளையாடியிருக்கிறோம் ஒன்றாய். அவங்க அம்மாவுக்கு என்னை பிடிக்கும் என்று நினைக்கிறேன். பேசிய பொழுதெல்லாம் நன்றாக பேசியதாக ஞாபகம்.

அந்தக் காலத்தில் நாம் யாரை யாவது காதலித்து(அல்லது நடித்தாவது) தொலைய வேண்டியிருந்தது. இந்த நிலைமை எனக்கும் ஏற்பட்டது.அந்த ஏ.எல் வகுப்பு மாணவர்கள் மத்தியில் நானும் காதலிக்கிறேன் என்று சொல்ல நினைத்தேன். அதற்கு ஏற்றால் போல் இவளும் வந்தாள். எல்லாம் ஒரு 'சந்தர்ப்ப சூழ் நிலை தான்.

அவள் அந்த சமயத்தில் தலை முடியை பொப் கட் அடித்திருப்பாள். நான் நினைக்கிறேன். குறிப்பாக இவளிடம் அந்த உணர்ச்சியை பெற்றது இதனால் தான் என்று. ஏனென்றால் எல்லா பெண்களும் நீண்ட முடி வைத்திருந்த காலமது. அதுமட்டுமில்லாமல் அவள் ரோட்டிலோ இல்லை சாதாரணமாக வேறு இடங்களிலோ அதிகம் பேசி பார்த்ததில்லை நான். இதுவும் ஒரு காரணம். அவ்வளவுதான் நான் விழுந்துவிட்டேன்.

அவள் வீட்டிலிருந்து கிளம்பும் போது பின்னாலேயே கிளம்புவது. அவள் டியூசன் சென்டர் வரைக்கும் கொண்டு விட்டுட்டு பின்னர் அருகே உள்ள கிரவுண்டில் கிரிக்கட் விளையாடிவிட்டு அவள் வீட்டிற்கு திரும்பும் போது அவள் பின்னாலயே வந்து வீட்டிற்கு கொண்டு விடுவது. இதெல்லாம் அவளுக்கு தெரியாமலே நடந்தது.

தினமும் இப்படித்தான் இதில் கொடுமை என்னவென்றால் நான் அப்பொழுது ஏ.எல் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். வீட்டில் படிக்கிறதாவது. அப்பிடியெண்டா என்ன எண்டு கேட்டுக் கொண்டிருந்த காலமது. என் நாட்கள் இப்படியே போய்க் கொண்டிருந்தன அப்பொழுது ஒருநாள் எங்களுடைய பாடசாலையில் பிரியாவிடை நிகழ்வு ஒன்று நடந்தது. பல பாடசாலைகள் வந்திருந்தன. மீனு படிக்கும் பாடசாலையும் வந்திருந்தது. பிற கென்ன எனக்கு ஒரே திருவிழாதான்.

அப்பொழுது நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஒரு அரைமணிநேரம் இருந்தது. மேடை அறிவிப்பாளர் மைக்கில் இந்த நேரத்தை உபயோகித்து மக்களை மகிழ்விக்க யாராவது முன்வந்தால் நல்லது என்றார். நான் காத்திருந்த வாய்ப்புக் கிடைத்தது. சிறிது கூட கவலைப்படாமல் மேடையேறி திருவிளையாடல் வசனத்தை(நக்கீரன் சிவன் வாக்கு வாதம்) சொன்னேன். சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்ததும் அரங்கம் அதிரும் சத்தம்.

மேடையில் இருந்து கீழிறங்கினால் ஒரே பாராட்டு மழை நான் சுற்றி சுற்றி பார்க்கிறேன் அவள் இருக்கிறாளா? பார்த்தாளா? என்று. என் கண்ணுக்கு அகப்படவில்லை. ஒன்று தெரியுமா! அன்று எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ளாத எனக்கு ஒரு பரிசு கூடக் கொடுத்தார்கள்!.

பிறகு வீட்டிற்கு வந்து கொண்டிருந்த பொழுது எதிரில் அவள் வந்து கொண்டிருந்தாள். ஆகா இவள் பார்க்கவில்லை போலிருக்கிறது என நினைத்து வருந்தினேன். அவள் நேராக என்னிடம் வந்து நல்லாயிருந்தது என்று சொல்லிவிட்டு போய்விட்டாள்.(இது நாள் வரை அவள் என்னிடம் பேசிய ஒரே ஒரு வார்த்தை இதுதான்). அப்போழுது கூட நான் அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. பின்னாட்களில் எங்கள் வீட்டெதிரில் கிரிக்கெட் விளையாடும் பொழுது வேண்டுமென்றே பந்தை அவர்கள் வீட்டு மாடிக்கு அடித்து விட்டு அதைக் கேட்கும் சாக்கில் போயிருக்கிறேன். வீடு அழகாக இருக்கும். சுத்தமாக பளிச்சென்று.

தினமும் காலையில் 6 மணிக்கு டியூஷனுக்கு கிளம்ப வேண்டும், முடிந்ததும் பஸ் ஏறி பள்ளிக்கூடம் வந்து படிக்கவேண்டும், பிறகு மாலை இரண்டு டியூசன். (மொத்தமாக இவையெல்லாம் உபயோகமாகவில்லை என்பது வேறு விஷயம். கடைசியில் நான் என்ஜினியரிங் படிக்கவில்லை) ஆனால் தினமும் நான் ரோஜாப்பூ வாங்கிக் கொண்டு வருவேன். அவளுக்குக் கொடுக்கத்தான் ஆனால் கொடுத்ததில்லை. அக்கா அந்த ரோஜாப் பூவை விவேகானந்தருடைய புகைப்படத்துக்கு வைப்பாள். பிறகு இரவு நான் அந்தப் பூவை பத்திரமாக்கி வைக்க பெரிய புத்தகங்களின் மத்தியில் வைப்பேன். இன்றும் இப்படி பத்திரமாக்கப்பட்ட நூற்றுக் கணக்கான ரோஜாக்கள் என்னிடம் உள்ளன.(என் முதல் காதல் நினைவாய்).

நான் அவளை நிறைய தடவைப் பார்த்தது, நிறைய நேரம் பார்த்தது, எல்லாமே. அவள் ஸ்கூலில் இருந்து திரும்பி வரும்பொழுது தான். அழகாய் குதிரை மாதிரி நடந்து வருவாள்.

எப்பவுமே தனியா வரமாட்டாள். யாராவது ஒரு பெண் அவள் கூடவே வருவாள். ஆரம்ப காலங்களில் சுமார் ஆறு மாதங்களுக்கு நான் அவள் நடந்து வரும்பொழுது வீட்டின் வெளியே கதிரையொன்று போட்டு உட்கார்ந்து கொண்டு பார்ப்பேன் இல்லையென்றால் சிலசமயம் ஜன்னலில் இருந்தும் பார்ப்பேன். பிறகு சிறிது தைரியம் வளர்த்துக் கொண்டு அவள் நடந்து வரும் பொழுது நான் புத்தகத்தையோ இல்லை கிரிக்கட் மட்டையையோ எடுத்துக் கொண்டு எதிரில் நடந்து வர ஆரம்பித்தேன். சில நாட்கள் இப்படியே சென்றது. பிறகு எப்பொழுதெல்லாம் நான் அவள் எதிரில் இப்படி நடந்து வர ஆரம்பிக்கிறேனோ அப்பொழுதெல்லாம் அவளும் அவள் நண்பியும் என்னைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினார்கள்(பின்னாட்களில் தான் அவர்கள் நக்கலாகத் தான் சிரித்தார்கள் என்று உணர்ந்து கொண்டேன்). இதெல்லாம் சொர்க்க காலம். அதாவது என் காதலின் கடைசிக்காலம்.

ஏ.எல் பரீட்சையும் வந்தது. நான் படிக்கும் அறைக்கு நேர் எதிரே அவள் வீட்டு மாடி ஜன்னல். திரை போட்டுத்தான் இருக்குமென்றாலும். வெய்யில் காலங்களில் திறந்துமிருக்கும். நான் தேவதைக்காக காத்திருந்து பரீட்சையில் கோட்டை விட்டேன். (கோட்டைவிட்டேன் என்றால் பெயில் இல்லை). சரியான அடி(மனதில்). இரண்டு நாள் அப்பாவும் அம்மாவும் அக்காவும் என்னை விட்டு நகரவேயில்லை நான் எங்கே தற்கொலை செய்து கொள்வேனோ என நினைத்தார்கள்.(பின்நாட்களில் அவர்களே சொன்னது) கட்டவுட் பர வாயில்லை தானே. நல்ல மார்க்ஸ் வாங்கியிருந்தேன். என்ஜினியரிங் கூட கிடைத்திருக்கும். ஆனால் என் மாமாக்களின்(அமெரிக்க) ஆலோசனையின்(கட்டளையின்) படி. கம்ப்பியூட்டர் தான் படிக்க வேண்டும் என்று முடிவானது. ஐ.ரி படிக்க கொழும்புக்கு போனேன். ஹொஸ்டலில் தங்கினேன். அதன் பிறகு அவளை நான் பார்ப்பது சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதாக குறைந்தது (கல்லூரியில் சேர்ந்து விட்டேனே). அடுத்த வருடம் நியூயரில் அதே ஊருக்குப் போனபோது பார்த்ததாக ஞாபகம். அன்று தான் நான் அவளிடம் ஹப்பி நியுயர் சொன்னேன். அது தான் நான் அவளிடம் பேசிய கடைசி வார்த்தை. பிறகு நான் ஐ.ரி முடித்து லண்டன் கனடா என்று இரண்டு வருடம் இருந்துவிட்டு சற்று நாளைக்கு முன் ஊருக்கு சென்றிருந்தேன்.

அதே ஜன்னல் முன்னாலிருந்து சிரித்துக் கொண்டிருந்தேன். அக்கா வந்து "என்னடா தம்பி" என்றாள். நான்'மோனா மீனா எங்கண்டு தெரியுமா என்று கேட்டேன். அதற்கு அவள் 'அவங்ககுடிமாறிப்போயிட்டாங்க. ஏய்! எனக்கு அவளை இன்னமும் ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டாள். பிறகு "தெரியுமா நீ இங்கு இல்லைல்ல அவளுக்கு பல்லு கொஞ்சம் வெளியே தெரிய ஆரம்பிக்க, கிளிப்போட்டிருந்தா, அவங்கட அம்மா கூட உன்னை சில தடவை கேட்டாங்க. அண்டைக்கு அவங்கட வீட்ட கிரகப்பிரவேஷத்துக்கு அம்மா கூட போயிருந்தா, அம்மாவோட அவங்க சரியா நடக்க வில்லையாம். (நாங்க அப்ப நடுத்தர குடும்பம்) அம்மாவுக்கு கோபம் என்று ஏதேதோ சொல்லிட்டுப் போனாள் என் அக்கா.

எனக்கு அன்றைய நாட்களை நினைத்தால் சிரிப்பாக இருந்தது. சைக்கிளில் அவள் பின்னால போறதும் கதவு ஈடுக்கில புகுந்து அவள் வீட்டு மாடியை பார்க்கிறதும், அவளைப் பற்றி கவிதை எழுதியதும் அண்டைக்கு முழுக்க சிரித்துக் கொண்டே இருந்தேன். அவள் வீடு எங்கிருக்கிறது என்று தெரியும். எப்படி போறதெண்டும் தெரியும். வருடத்திற்கு இரண்டு நாட்களாவது நான் சொந்த வீட்டுக்குப் போறன். அதனால நேரமும் உண்டு. ஆனால் ஈகோ தடுக்கிறது. இப்பொழுது நாங்கள் பணக்காரர்கள். ஆனால் என்ரை அம்மாவை கிரகப்பிரவேசத்தில் ஒழுங்கா நடத்தாதது தான் இப்போ ஞாபகம் வருகுது.

இப்பவும் போய்க் கேட்கலாம். அம்மா மீனா வீட்டில போய் பொண்ணு கேளுங்க எண்டு. ஆனா வேண்டாம். ஈகோ தான் முதல் காரணம். அதிலயிருந்து வெளியிலவரை என்னால முடியல்ல.நீங்க என்ன சொல்றீங்க? சொல்லாத காதல் சுகமானதுதானே!!

—கிறுக்கன் —





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05-12-08 அன்று 'இருக்கிறம்' இதழில் உத்தம புருஷி எழுதிய புருஷன் பற்றிய புதினங்கள் என்னும் கட்டுரை பார்த்தேன். என்னைப் போன்ற மனைவிமாருக்குப் பல பயனுள்ள தகவல்கள் தரப்பட்டுள்ளன. எங்களுடைய அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளலாம் என்று எழுதியிருந்தமையால் நானும் சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். எனக்கும் கொஞ்சம் இடம் தருவீர்களா?

புருஷன் வேலை முடிந்து வீடு திரும்பும்போது நச்சரிக்காதீர்கள் என்பது போன்ற கருத்துக்கள் பழைய பஞ்சாங்க கருத்துக்களாகும். பெண்கள்தான் நச்சரிப்பதென்பதில்லை. நச்சரிக்கும் இயல்பு உள்ளவர்கள் நச்சரிப்பார்கள். மற்றவர்கள் நச்சரிக்க மாட்டார்கள். ஆண்களாயிருந்தாலென்ன பெண்களாயிருந்தாலென்ன இந்தக் கதை. முன்பு கணவன் வேலைக்குப் போகவிட்டு வீட்டில் இருந்த நடுத்தர வர்க்கப் பெண்களை நோக்கி சொல்லப்பட்ட விடயமாகும். வீட்டுக்கு வெளியே தாங்கள் செய்ய விரும்பும் எந்தக் காரியத்துக்கும் கணவனை நம்பியிருந்த நிலை அது. கணவன் ஒத்துக் கொள்ளாவிட்டால் அல்லது முக்கியமெனக் கருதாவிட்டால் தன்னுடைய ஆசை நிறைவேற நச்சரித்துத்தானே ஆக வேண்டும்? ஆனால் இன்று அப்படியில்லையே. இன்றைய சந்ததியில் வேலைக்குப் போகாத பெண்கள் மிகக்குறைவு. வீட்டிலிருக்கின்ற பெண்கள்கூட எலக்ரிசிட்டியில், பாங்க், வேலை, ஷொப்பிங் என்று தங்களுக்கு விருப்பமான மாதிரி வெளியே திரிகிறார்கள் தானே சரி, எனது விமர்சனத்தை விட்டு மனைவியின் விடயத்துக்கு வருவோம்.

கணவன் மனைவி பற்றிய புதினங்கள்

எங்களைச் சுற்றிப் பாருங்கள். எங்கும் விவாகரத்துமாக இருக்கின்றது. கல்யாணம் முடித்து சந்தோஷமாக இருக்கிறவர்கள் யார் என்று கேட்கும் அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினை. எனவே இருக்கிறம் இதழ் மனைவியருக்கு அட்வைஸ் பண்ண ஆரம்பித்திருப்பது மிகப் பொருந்தும் என்றே தோன்றுகிறது. (கணவர்மாரையும் தயவு செய்து மறக்காதீர்கள்.) அந்த அட்வைஸுக்கு மேலும் மெருகூட்ட எனது அட்வைஸும் இதோ.

ஒன்றாக டி.வி பார்ப்பது அரட்டை அடிப்பது போன்றவையெல்லாம் முக்கியந்தான். ஆனால் அதில் மிக முக்கியமான, ஒரு திருமண விழாவுக்கு அத்தியாவசியமான ஒன்றை கோட்டை விட்டு விட்டீர்களே. அதுதான் கணவன் மனைவிக் கிடையேயான செக்ஸ் வாழ்க்கையாகும். இருவருக்கிடையே அன்பு மலரவும் நிலை நிற்கவும் அடிப்படையாக அமைந்த செக்ஸ் பற்றி வெளிப்படையாக இன்னமும் பேசமுடியாத நமது பாரம்பரிய கலாசாரம் எமக்கு வாய்ப்பூட்டுப் போட்டு வைத்திருக்கிறது. இந்த நிலைமையில் எப்படி நாங்கள் நல்ல செக்ஸ் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழலாம்? இதனால்தானோ என்னவோ மனைவியரை அடக்கி வைத்திருப்பதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூலம்தான் திருமணங்களைத் தக்க வைக்கப் பார்க்கிறார்களோ வென்று தோன்றுகிறது. இருக்கிற மும் இந்த வகைக்குள் தான் அடக் கம் போலும்.

வெற்றிகரமான செக்ஸ் வாழ் க்கை அமைவது ஒரு போதும் சும்மா நிகழாது. அதற்கு மிகுந்த பிரயா சைப்படவேண்டும் என்பதுதான் நான் வாழ்க்கையில் கற்றுக் கொண்ட பாடம். எவ்வளவுதான் காதலித்துக் கல்யாணம் பண்ணக் கொண்ட ஜோடியாக இருந்தாலும், செக்ஸ் உறவு நன்றாக இருப்பதற்கு உழைத்தேயாக வேண்டும். இல்லா விட்டால் வாழ்க்கை சப்பென்று போய்விடும்.

எங்கள் உடல் தேவைகளின் தன் மையை சரிவரப் புரிந்து கொண்டு அதற்கேற்ப எங்கள் துணைவரும் (கணவனோ மனைவியோ) அவற்றை யெல்லாம் பூர்த்தி செய்ய உதவுவதுதான் நான் குறிப்பிட்ட இந்தப் பிரயா சையாகும். ஆனால் எங்க ளுடைய உடலின் தேவை களை அறிவதற்குக்கூட எங்களுக்கு எங்கள் துணை களின் உதவி தேவையாயி ருக்கின்றது.

எப்படி என்கிறீர் களா? முதலில் எங்க ளுக்குள் ஏற்படும் உணர்வுகளைப் பற்றியும் ஆசைக ளைப் பற்றியும் அவர்களுடன் கலந்துரையாட வேண்டும். பின்பு அவர்கள் அதற்கான நடவடிக்கை களை எடுக்கும் போது அவை எமது தேவைகளுக்கேற்ப பொருத்தமான நடவடிக்கைகளா என்பதை அவதா னித்து அவர்களுக்குத் தெரியப்ப டுத்த வேண்டும். இதன் மூலம் தான் எங்கள் தேவைகளை நாங்களே குறிப்பாக அறிந்து கொள்ளலாம்.

'நான் பெண்ணென்பதை இன்றுதான் உணர்ந்தேன்' என்று நாங்கள் சினிமாப் பாட்டுக்களில் கேட்டிருப்போம். முன்பெல்லாம் நான் இதைக் கேட்கும்போது அதென்ன ஒரு பொம்பிளைக்குத் தான் பொம் பிளையெண்டு



இதுவரைக்கும் தெரியேல்லை எண்டு நான் என்ன கதை விடுறாங்க என்றெல்லாம் யோசிப்பதுண்டு. புலவர்கள் கதை விடவில்லை. பெண்ணுக்குரிய உணர்வுகளை அந்தப் பெண் உணர்வதற்கு அவள் காதலன் உதவியிருக்கின்றான் என் பதுதான் அதற்குப் பொருள். அப்ப டியாக இருவரும் சேர்ந்து தங்களைத் தாங்களே அறிவதற்கு உதவும் முதல் கருவி திறந்த மனதுடனான சம்பாஷ ணையாகும்.

எம்மில் எத்தனை சோடிகள் எங் கள் செக்ஸ்பற்றி வீட்டில் சீரிய ஸாகக் கதைத்திருக்கின்றோம்? எத் தனை பேர் செக்ஸ் உறவு முடிந்தபின் அதன் சரி பிழைகளை ஆராய்ந்திருக் கின்றோம்? உனக்குத் திருப்தியா என்று எங்கள் பார்ட்னர்களிடம் வினவியிருப்போம்?

ஒரு அடக்கமான பெண் செக்ஸ் பற்றி வெளிப்படையாகக் கதைக் கப்படாது அல்லது அதில் அளவுக்கு மீறிய ஆர்வத்தைக் காட்டப்படாது என்று எமது பெண்களைச் சுற்றி சமூகம் கீறிய கோட்டினால் கட்டு ண்டு கிடக்கும் பெண்கள் அரை வாசி. ஆரோக்கியமாக செக்ஸ் பற்றி விவாதிக்காமல் கள்ளமாக நீலப்பட ங்களைப் பார்த்து வக்கிர செக்ஸ் முறைகளை உள்வாங்கி அவசரப்ப டும் ஆண்கள் அரைவாசி.

இந்த நிலைமையில் எப்படி மனம் திறந்து கதைக்கலாம்?

ஆண் என்ன மாதிரியான ஆசையை தெரிவித்தாலும் "சீய் சீய்" என்று சொல்லி உதாசீனம் செய்யாத பெண்ணும் தேவை.

உண்மையிலே சொல்லப் போனால், பூரணமான செக்ஸ் உற வுக்கும்கூட ஆணுக்கும் பெண்ணுக் குமிடையே சமத்துவம் அவசியம் தேவை. ஆளுமையுடனும் சுதந்திர மாகவும் தனது ஆசைகளைக் கூறக் கூடிய பெண்ணும், எந்தக் குறைபா ட்டைப் பற்றிக் கூறினாலும் அதனை தனது 'ஆண்மைக்கு' இழுக்காக் கருதாமல் பணிவுடன் ஏற்றுக் கொள் ளுகின்ற மனப்பக்குவம் மிகுந்த ஆணும் தேவை. அதே போல் ஒரு ஆண் என்ன மாதிரியான ஆசையை தெரிவித்தாலும் "சீய் சீய்" என்று சொல்லி உதாசீனம் செய்யாத (அப்படிச் செய்தால்தான் தம்மை ஒழுக்கமுள்ள பெண்ணாக ஆண் நினைப்பான் என்று நினைக்கின்ற பெண்கள் எத்தனை பேர் தெரியுமா) பெண்ணும் தேவை. இந்த நிலமைக ளில்தான் திறந்த மனதுடனான குல ந்துரையாடல்கள் இருக்க முடியும்.

என்னுடைய அனுபவம் போல் வாசகர்களுக்கும் இதைப்பற்றிய அனுபவங்கள் இருக்கலாம். நீங்க ளும் எழுதுங்கள், அந்த உற்சாகத்தில் நானும் தொடர்ந்து எழுதுவேன்.

mrs. காதுலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோட்டாற்றுங் கரை

பாகம் 15

உங்க பிள்ளையளுக்கு ஒண்டும் நடக்காது விதானையார். எப்படியும் இயக்கங்கள் இன்னும் கொஞ்ச நாளில சேர்ந்திடும்.

வ.ஐ.ச.ஜெயபாலன்

தாராளமாக வாருங்க என்றபோதும் அவனுக்கு உடல் புல்லரித்தது. இரண்டு பெடியளும் ஆள்ளாளுக்கு ஒவ்வொரு இயக்கத்தில் ஆமிக்குப் பயப்படுவமா? இயக்க மோதல் வந்திடுமே என்று பயப்படுவமா? பாலன் நாங்கள் பிள்ளையளைப் பெத்துப்போட்டு இருண்ட தெல்லாம் பேயெண்டு பயப்பிட்டுச் சாகிறம். வீட்டுக்கு வீடு இதுதான் தம்பி நிலமை. அண்டைக்கு மட்டும் சிங்கள ஆமி ஊருக்குள்ள வந்திருந்த முப்பது நாப்பது பிணம் விழுந்திருக்கும். நான் இப்ப நினைவு மலருக்குத் தான் கவிதை கேட்டிருக்க வேண்டி வந்திருக்கும் பரமநாதன் சொன்னதை "உண்மைதான்" என்று பாலன் ஆமோதித்தான். வீட்டவந்து ஒரு தேத்தண்ணி குடிச்சிட்டுப் போ தம்பி என்றார் விதனையார். பாலனுக்கும் அவரிடமிருந்து பாலியாத்துப் புதினங்கள் கேட்க விருப்பமாய் இருந்தது. ஆனாலும் மீனாட்சி தேடுவாள் என்பது ஞாபகம் வந்ததும் வெய்யில் மீண்டும் சுட்டது. நேரமில்லாட்டி போ. பாலன் நான் வீட்ட ஓடவேணும் நாலு மணிக்குத் தவறாமல் தமிழீழச் செய்தி கேட்கிறனான்.

அதை எங்க கேக்க விடுகிறாங்க அதைச் சிங்கள ஆமிக்காரர் குழப்பிறாங்கள். கேக்க விடுகிறாங்கள் இல்லையே விதானையார். தொடர்ந்து குழப்பிக் கொண்டல்லா இருக்கிறாங்கள் விதானையார். ஆர் சொன்னது கேட்க ஏலாதெண்டு. இப்ப தஞ்சாவூர், உரத்தநாடு, தேனியெண்டு மூண்டு இடத்தில வைச்சு ஒவ்வொரு நிமட இடைவெளியில ஒலிபரப்பிறாங்கள். ஆமிக்காறர் ஒரு மீற்றரில குாப்பினால் மற்ற மீற்றருக்கு மாத்திக் மாத்திக் கேக்கலாம். அப்படியா எங்கட பெடியள் கெட்டிக்காறர். ஒற்றுமைப் பட்டிட்டாங்கள் எண்டா இந்திரா காந்தின்ர காலத்தில் ஈழம் கிடைச்சிடும். எம்.ஜி ஆரும் கலைஞரும் சப்போட் பண்ணுவினம் எண்டு நெடுமாறன் ஐயா சொன்னவராம். ஒற்றுமைப் பட்டிட்டா எங்கட பெடியளை அமெரிக்காவும் சீனாவும் சேர்ந்து வந்தாலும் அசைக்கேலாது.

இது மீனாட்சிக்குத் தெரியாது விதானையார். இண்டைக்கொருக்கா மாத்தி மாத்திக் கேட்டுப் பாப்பம். என்றபடி சைக்கிளில் தொற்றிய விதானையாரை பாலன் ஒரு நிமிசம் என்றான்.

என்ன பாலன்?என்றார் விதானையார். உங்கட பிள்ளையளுக்கு ஒண்டும் நடக்காது விதானையார். எப்படியும் இயக்கங்கள் இன்னும் கொஞ்ச நாளில சேர்ந்திடும். அதோட மெட்டா சில நடக்கிற பேச்சுவார்த்தையள் வெற்றி பெற்ற மாதிரித்தான். ஈ.என்.டி.எல்.எப் கட்டாயம் சரிவந்திடும். "நீங்க படிச்சனீங்க சொல்லிறியள். ஆனா பட்ட எங்களுக்குத்தான் நம்பக் கஸ்டமாய் இருக்கு" என்றார் விதனையார். பின்னர் பாலனிடம் "நீ சொல்லிறது பலிச்சிட வேணும் பாலன்" என்றார். ஆறு சற்றுப் பலமாகச் சல சலத்தது. சூழலின் அமைதியின் மீது மீன் ஒன்று துளுமெனத் துள்ளி விழுந்தது. மீனின் பாச்சலில் பாலனை மூடிச் சூழ்ந்திருந்த நினைவுக் குமிழிகள் உடைந்தது. பாலி ஆறு வாயாடி. எப்போதும் போகிற போக்கில் ஓயாமல் காட்டோடும் கரையோடும் கிசுகிசு பேசிக்கொண்டே ஓடும். அந்தச் சிற்றாறு ஒரு போதும் தண்ணீரை தனக்குக்கென்று கடலுக்கு எடுத்துச் செல்வதில் குறியாக இருந்ததில்லை. பாதை நெடுக வாடி வாழ் ஆசையாய் இருக்கக்கா என்று வாடி வதங்கி நிற்கிற கரையோர உறவுகளுக்குக் கேட்டுக் கேட்டுக் கொடுப்பதிலேயே குறியாக இருக்கும். ஒரிராயிரம் ஏக்கர் சிறுபோக வயல் வெளியால் இவ்வளவு உபரி நீர் பாலிக்குள் வடிகிறது என்பதை பாலனால் நம்பமுடியவில்லை.

மேலோங்கிய சலசலப்பில் ஆற்றின் நடுவில் முழங்கால் மட்டுத் தண்ணீரா வது இருக்குமென்று தோன்றியது. ஒருவேழை சிறு போக வயலில் இருந்து வடியும் கழிவு தண்ணீருக்கு மேலதிகமாக வடக்கே வவுனியா பக்கத்தில் மழை பெய்துமிருக்கலாம். எதிர்க் கரையில் சந்தடி எழுந்தது. பாலன் அந்தப் பக்கம் யந்திர கதியில் திரும்பினான். கரையில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நின்ற மாடு ஆற்றில் குனிந்து தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. வெப்பக் காற்றில் சிறகு அகட்டிச் சறுக்கி வந்த காகமொன்று தாழ்ந்து மாட்டின் முதுகின் மேல் அமர்ந்தது. ஒருகணம் பாலன் திகைத்தான். இப்படி வாழ்வு தன் வலிமையால் எப்பவும் அவனை அசத்திவிடும். அந்தத் தருணத்திலேயே அவன் அந்த மாட்டையும் காகத்தையும் அடையாளம் கண்டு கொண்டான். அவனால் நம்ப முடியவில்லை. மாடு தேறி நல்ல நிலையில் இருந்தது. காகம் நட்போடு மாட்டில் சவாரி செய்தது. நான் இருக்கும்போதே இவ்வளவு துணிச்சலா உனக்கு? என்றபடி காகம் தன் அன்புக்குரிய மாட்டைக் கடிப்பதற்கு அலைந்த குருட்டீக்கள் மீது கோபமாகத் தாவியது.

நிதர்சனத்துக்கு மீண்டபோது பாலனுக்கு உதடுகளும் தொண்டையும் மனசும் உலர்ந்துபோய் தாகம் எடுத்தது. அவனுக்கு அந்த தேவதையைப் பார்க்க வேண்டும்.

ஒன்று இரண்டு மூன்று என்று எண்ணியபடி காகம் குருட்டீக்களை விரட்டி விரட்டிக் கொத்தித் தின்றது. இதே காகம்தான் முன்னர் மாடு விழுந்து கிடந்தபோது கண்களில் இருந்து ஆரம்பித்து முழு மாட்டையுமே தின்றுவிடுகிற கனவில் இருந்து என்பதைப் பாலனால் நம்ப முடியவில்லை. எப்பவும் எதைத் தின்னலாம் என்று அலையிற மனிசரைப் பார்த்துத்தான் காகம் கற்றுக்கொண்டிருக்க வேணும். என்று காட்டுக்குள் இருந்து யாரோ சொன்னார்கள். சொன்னது காடுதான் என்பதைப் பாலன் உணர்ந்து கொண்டான். பொய் என்றான் பாலன். காட்டுக்குள் அலைந்த காற்று கிண்டலாக ஒருத்தனை ஒருத்தன் சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே என்கிற பழைய சினிமாப் பாடலை எங்கிருந்தோ சாட்சிக்குக் கொண்டு வந்தது. ஆனாலும் அந்த மாட்டைத் தின்றுவிடக் காத்திருந்த காகம் இப்ப அதே மாட்டுக்கு நட்போடு பேன் பார்க்கிறது. பாலனுக்கு நல்ல சகுனமாகவே பட்டது. மரங்கள் காற்றுடன் கிசுகிசுத்தன. அவை தன்னைப் பற்றியே கிண்டல் பேசுவதாகப் பாலனுக்குத் தோன்றியதால் காட்டைச் சிடு சிடுப்போடு பார்த்தான். இதுதான் மனிதர்களின் பிரச்சினை என்று ஏதோ ஒரு மரம் காட்டின் கவனத்தை ஈர்த்தது. இந்த யாழ்ப்பாணத்தார் தாங்கள்தான் உலகத்தின் மையம் என்று நினைப்பார்கள். காட்டுக்கு வந்தாலும் இவங்கள் திருந்த மாட்டாங்கள். திருந்தினதா வரலாறில்லை என்றபடி காடு வெக்கைக் காற்றில் அசைத்துக் கொண்டிருந்தது. ஆத்தம் கரை போரடிக்கப்பட்ட களத்துமேடாய் உழக்கப் பட்டுக் கிடந்தது.

சென்ற முறை வந்தபோது வரட்சியிலும் உயிர்த்திருந்த புல், பூண்டுகள் இப்போ வைக்கோல் புரிகள்போல சாய்ந்து சிதறிக் கிடந்தன. அதைப் பார்த்ததும் பாலனின் நாவும் மனசும் மேலும் ஒரு படி வரண்டுபோனது. அவன் தண்ணீர் மீதும் ஐந்து காயங்களோடு வெளிப்பட்ட தேவதையின் மீதும் தாகமாக இருந்தான். தண்ணீர்ப் போத்தலை எடுத்துக்கொண்டு தோல்ப்பையைச் சைக்கிளில் மாட்டக் குனிந்தபோது காலடியில் பித்தளை வெற்றுத் தோட்டாக்கள் சிதறிக் கிடப்பதைக் கண்டான். நிமிர்ந்த போது சூரியன் கண்களில் குத்த வந்தது. ஆற்றங்கரை நீளச் சாய்ந்து கிடந்த புற்களில் பொன்னைப்போல வெற்றுத் தோட்டாக்கள் பளீச்சிட்டன. எதிர்க் கரையில் வெய்யிலில் பளபளப்பவை வெற்றுத்தோட்டாக்கள்தான் என்பதை பாலன் புரிந்துகொண்டான். வன்னியை எல்லோரும் பொன் விளையும் பூமி என்பார்கள். அந்த தீர்க்கதரிசனம் இப்படியா நிறைவேறவேணும் என்று அவனது மனசு அடித்துக் கொண்டது. தேவதை துயிலும் மருதடியில் மண் வெட்டப் பட்டிருந்ததைப் பார்த்தான். தேவதை துயிலும் மேட்டில் சல சலப்பு எழுந்தது. இந்திய மந்திரவாதியின் மகுடிகேட்டு எழுகிற தாம்புக் கயிறுபோல அகப்படுகிற குப்பை கூழங்களை வாரிச் சுருட்டிக் கொண்டு ஒரு குறுஞ் சுளிக்காற்று அந்தரத்தில் எழுந்தது. அது போல முன்பும் வயல் வெளியில் குறுங் சுளிக்காற்றுக்கள் எழுகிறதை பார்திருக்கிறான். என்னினும் அவனுக்கு ஏனோ அச்சமாக இருந்தது. தான் ஆராதிக்கிற அனுமானுச சக்தி தேவதையா பிசாசா அல்லது தேவதையும் பிசாசுமான சக மனுசியா என்பது தெரியாததால்தான் அவன் அச்சப்பட்டான். அவனுக்கு மயிர் கூச்செறிந்து உடல் நடுங்கியது. காதலும் பக்தியும் அச்சமும் அவனுக்குள் நிரம்பியது. நிமிர்ந்து பார்த்தபோது அந்தக் குறுஞ் சுளிக்காற்று உலகைச் சுழற்றிவிட்டு ஒரே பாய்ச்சலில் மறைந்து போனது. பாலன் தனது தலையுடனும் சூழும் காட்சிகளுடனும் தொடர்ந்து சுழன்றுகொண்டிருந்தான். இனம்தெரியாத போதை அவனது தலைக்குள் நிறைந்தது. ஆற்றுக்குள் துழுமென்று மீண்டும் ஒரு மீன்துள்ளி விழுந்தது.

நிதர்சனத்துக்கு மீண்டபோது பாலனுக்கு உதடுகளும் தொண்டையும் மனசும் உலர்ந்துபோய் தாகம் எடுத்தது. அவனுக்கு அந்த தேவதையைப் பார்க்க வேண்டும். இப்பவே பார்த்தாக வேண்டும். அச்சம் மனசை பற்றியபோது பாலன் இப்படிச் சொன்னான். சீதையின் மோகத்துக்கு இராவணன் விலையாக பத்துத் தலையைக் கொடுத்திருக்கிறான். என் மனசுக்கு பிடித்த தேவதைக்காக இந்த ஒரு தலை போனால் என்ன மசிர். பாலன் தன் வசமிழந்து போனான். ஆச்சரியம் என்னவென்றால் தேவதையாய் இல்லாமல் பேயாய் இருந்தால் கூட சம மதம்தான் என்கிற மட்டத்துக்கு பாலன் பித்தாக இருந்தான். ஒரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாணயத்தின் பூவும் தலையும் போல தேவதையும் பிசாசும் ஒன்றுதான் என்கிற நடுத்தர வயதுக் காரரின் பக்குவம் அவனுக்கு இந்தச் சின்ன வயதிலேயே வாய்த்திருந்தது. இப்பவே பார்க்கவேணும் என அவனது ஐம்புலன்களும் ஏங்கின.

தண்ணீர்ப் போத்தலை திறந்து ஒரு மிடறு தண்ணீர் விழுங்கியபோது தேவதை மருத மரத் தடியில் யாரோ அழைத்தார்கள். பாலனுக்கு புரை யேறி விடும்போல இருந்தது. தேவதை தண்ணீர் கேட்டு முனகியதை அவன் உணர்ந்தான். அதுவரை அமைதியாக இருந்த காடு காற்றை விலக்கிக் கோபத்தோடு முணு முணுக்கத் தொடங்கியது. கெட்ட

ஆவலோடு எதிர்பார்த்து வந்த தாகம் தாகம் என்கிற அந்த பெண்ணின் வேதனைக் குரலலை பாலன் மீண்டும் கேட்டான்.

குரிவிச்சை. தவிச்ச விடாய்க்குத் தண்ணீர் கொடுக்காத படுபாவி என்று பக்கத்தில் நின்ற மருத மரமொன்று திட்டியபோது பாலன் வெகுண்டெழுந்தான். பலான தூசணத்தால் திட்டி அந்த மருத மரத்துக்கு எட்டி உதைக்க வேணும்போல இருந்தது. இப்போது காடு குழம்பத் தொடங்கியது. பக்கதில் நின்ற காட்டா மனக்கள்செடிகளுக்குக் கோபம் வந்துவிட்டது. வெட்கம் கெட்ட குருவிச்சைத் தலையா என்று ஒரு காட்டாமனக்குக் கத்தியது. அதுவரை திரிசடைகள் போலத் தொங்கிய காய்களுடன் மௌனவிரதம் இருக்கும் சன்னியாசி யைப்போல நின்ற கொன்றை ஆளப் பாத்தா அந்துப்பூச்சி நினைப்பைப் பாத்தா

பட்டாம்பூச்சி எண்ட கதைமாதிரி யல்லா இருக்கு என்று நக்கலாய்ச் சொன்னது. பாலன் திரும்பிக் கொன்றையையைப் பார்த்தான். என்னடா பாக்கிறாய். நாங்க பூ விரிய நிப்பம் ஒருக்கா எட்டி மகரந்தம் சேர்த்திட்டுப் போகலாமெண்டு வந்தியாடா என்று கத்தியது. அக்கம் பக்கதில சின்னவயசுத் தாவரங்கள் இருக்கு தூசணம் பேசாத கொன்றை என்று கொன்றையைக் கடிந்து கொண்ட சமண்டலை பாலன் பக்கமாகச் சாய்ந்து ஏன் திட்டு வாங்கிறாய். அந்தப் பிள்ளைக்குத் தாகமாம். மனுசர் மாதிரி நிக்காம போய் கொஞ்ச தண்ணி அள்ளி ஊத்து என்று அழுத்த மாகச் சொன்னது.

பாலன் தான் அதிஸ்டசாலி என மகிழ்ந்தான். அவனைத் தெய்வங்கள் ஏமாற்றி விடவில்லை. ஆவலோடு எதிர்பார்த்து வந்த தாகம் தாகம் என் கிற அந்த பெண்ணின் வேதனைக் குரலலை பாலன் மீண்டும் கேட்டான். திடீரென வெறிகொண்டு கையில் இருந்த தண்ணீர்ப் போத்தலை வீசிவிட்டு உடல் நடுங்க அந்த

பாலன் தனது ஐந்து புலன்களும் அதிர ஆமை முட்டைகள் பொரித்த குழிபோல உயிர்த்த மணல் மேட்டைப் பார் த்துக் கொண்டுநின்றான்.

தேவதை துயிலும் மருதமரத்தை நோக்கி ஓடிச் சென்றான். காற் செருப்பின் கீழ் வெற்று ரவைகள் உருண்டு சறுக்கின. மருதமரத்துக்குப் பக்கமாக ஆற்றில் பாய்ந்தவன் ஆவேசம் வந்தவனைப்போல பட பட வென்றுகையால் நீரை கோலி தேவதை மேட்டுக்கு எற்றினான். நனைந்த தேவதை மேடு ஒரு சேற்றுக்குளியில் புதைந்துகிடக்கும் எருமைபோல அசைந்தது. முளைக்கிற அவரை வித்துப்போல ஈர மண்ணைப் புட்டுக் கொண்டு ஒரு விரல் நீண்டது..தொடர்ந்து குயவனின் சக்கரத்தில் உயரும் களிமண்போல ஈர மணல் உயர்ந்தது. பாலன் தனது ஐந்து புலன்களும் அதிர ஆமை முட்டைகள் பொரித்த குழிபோல உயிர்த்த மணல் மேட்டைப் பார்த்துக் கொண்டுநின்றான். சேற்றுக் குள் விழித்த அனக்கொண்டாப் பாம்புபோல அந்தத் தேவதைப் பெண் அசைவதைப் பாலன் பார்த்துக் கொண்டு நின்றான்.

தொடர்ந்து பாயும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எம்மை அறியாமல் சில தவறுகள் நடக்கலாம்

நேர்கண்டவர் – பஸ்லான் மொஹமட்

கிழக்குமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடு மற்றும் அவற்றின் குறைபாடு பற்றி மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி துணை ஆணையாளர் செல்வி சத்தியானந்தி துரைரட்ணம் இருக்கிறம் சஞ்சிகைக்காக வழங்கிய நேர்காணல்

கேள்வி - நீங்கள் மட்டக்களப்பு உள்ளூராட்சி துணை ஆணையாளராக பதவியேற்றதிலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்களின் விருத்திக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

பதில் - மிக அண்மைக் காலமாக இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் காணப்படவில்லை. இந்நிலையில் மக்கள் பங்கு பற்றலுடன் செயற்திட்டங்களை மேற்கொள்வது கடினமாக காணப்பட்டது. எனவே இதற்காக ஆலோசனை குழு முறைமை (Advisory gommittee System) உருவாக்கப்பட்டு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் மக்கள் பங்கு பற்றுதல்ல அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இன்றைய காலத்தை எடுத்துக் கொண்டால் நிறைய வளங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றை உரிய முறையில் உள்வாங்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தயாராக இருக்காத நிலை அன்று காணப்பட்டது. ஏனென்றால் எமது கையில் எதுவும் இருக்கவில்லை. உதாரணமாக ஆசிய நிலையம் TALC செயற்திட்டத்தை மேற்கொண்ட போது அதனை உரிய முறையில் உள்வாங்கக் கூடிய திறமை உள்ளூராட்சி மன்றங்களிடம் காணப்படவில்லை. ஒரே ஒரு உள்ளூராட்சி சபையைத் தவிர மற்ற எதுவும் இதனால் நன்மை பெறவில்லை. ஏனையவற்றுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இயலுமை கூட காணப்படவில்லை. எனவேதான் 6 உள்ளூர் நிறுவனங்களுக்கு Village Planing என்பதை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தோம். GGRC என்ற திட்டத்தினூடாக முதலீட்டாளர்களுக்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்குமிடையே இடைத் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை மேற்கொண்டோம்.

கேள்வி - கிழக்கு மாகாணத்தில், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் இடையிலான மாற்றங்கள் என்ன?

பதில் - தற்போது வீழ்ச்சி என்பது இல்லை. ஏனெனில் முன்னர் சிறிதளவு வளங்களே எமக்கு இருந்தன. தற்போது ஊருக்கு ஊர் வீதிகள் எல்லாம் கொங்ரீட் பண்ணப்படுகின்றன. அது மட்டுமல்ல பல கட்டடங்களும் நிர்மாணிக்கப்படுகின்றன. ஆரையம்பதிக்கு எல்லாம் கமநெகும திட்டத்தின் மூலம் 70 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வளவுக்கு அதிகமாக முடிக்கின்றார்களோ அவ்வளவுக்கு அந்த சபைக்கு முதலிடம் வழங்கப்படும். இவைகள் கிடைப்பதற்கு சபை வந்தது நல்ல வாய்ப்பாக இருக்கின்றது. மற்றது மக்கள் பங்குபற்றல் என்பதற்கு நாங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அங்குள்ளவர்கள் அரசியல்வாதிகள் என்பதனால் அவர்கள் மக்கள் பங்கு பற்றுதலுக்கு ஊக்கமளிக்கின்றனர்.

தற்போதைய நடவடிக்கைகளில் ஒரு வெளிப்படைத்தன்மை காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் நடைபெறுகின்ற வேலைகளில் அப்பிரதேச உறுப்பினர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். ஆரம்பத்தில் என்று சொன்னால் ஒரு குறிப்பிட்ட விடையம் தொடர்பில் அந்த குறிப்பிட்ட ஒப்பந்தக்காரற்கும் உள்ளூராட்சி மன்றத்துக்கும் மாத்திரமே தெரியும். ஆனால் தற்போது எல்லோருக்கும் தெரியக்கூடிய தன்மை காணப்படுகின்றது. எனவே ஒரு தெரிவு செய்யப்பட்ட சபையினால் நல்லதொரு வளர்ச்சியைக் காணமுடிகின்றது. இதனால் கணிசமான முறைப்பாடுகள் இல்லையென்றே கூறலாம். தனியான ஒரு அமைப்பாக இருந்தவர்களுக்கு திடிரென்று ஒரு அரசியல் சமூகம் உள் நுழையும் போது அங்கே சில முரண்பாடுகள் ஏற்படும். எனினும் முரண்பாட்டுத் தீர்வு அணுகு முறைகள் மூலம் சிறந்த முறையில் தீர்க்கப்பட்டு செயல்படுகின்றனர்.

கேள்வி - ஜனநாயத்தின் முக்கிய விடயம்தான் மக்கள் பங்குபற்றல் என்பது இதன் நிலமை இன்று எவ்வாறு மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படுகின்றது?

பதில் - இது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இல்லாவிடினும் இதற்குரிய அபிவிருத்தியின் போக்கில் முன்னேற்றகரமான தோற்றப்பாடு தெரிகின்றது.

கேள்வி - உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் வழங்குகின்ற ஆலோசனைகள் என்ன?

பதில் - சிலருக்கு சிக்கல்கள் ஏற்படும் போது அவற்றுக்கு நாம் வழிகாட்டல்களை வழங்குகின்றோம். சுனாமிக்குப் பிறகு பல்வேறு உதவி நிறுவனங்கள் பல்வேறு பிரதேசங்களில் தங்களுடைய இஷ்டப்படி வேலை செய்கின்றன. அவர்களுக்கு சரியான திட்டமிடல்கள் இல்லை. உண்மையில் ஒரு பிரதேசத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்ற திட்டமிடல் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் காணப்படுகின்றது.

கேள்வி - உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அரசியல் நோக்கமுடையவர்கள், நீங்கள் அரசாங்க உத்தியோகத்தர் என்ற விதத்தில் உங்களுடைய விதந்துரைகளை கடைப்பிடிப்பார்களா?

பதில் - நாங்கள் சொல்வதை அவர்கள் கடைப்பிடிப்பார்களா என்பதைவிட, நாங்கள் ஒரு விடையத்தையும் பிழையாகச் செய்யுமாறு கூறமாட்டோம். சில இடங்களில் நடைமுறைச் சிக்கல்கள் வரும் போது எமது அறிவுரைகளை அவர்கள் ஏற்பார்கள். எவ்வளவில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரோ, அரசாங்க உத்தியோகத்தரோ பிழை என்று வரும் போது அதற்கு பதில் அளித்துத்தான் ஆகவேண்டும். இதனால் யாவரும் வழிகாட்டல்களை பின்பற்றியே செல்ல வேண்டும். இவ்விதமாக அறிவுரைகளை ஏற்றுக் கொண்டுதான் நடக்க வேண்டும்.

கேள்வி - ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி உறுப்பினர்களைவிட இம்மாகாணத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு சில துறைகளில் பயிற்சி போதாமல் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் உங்களுடைய அலுவலகம் எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்கின்றது?

பதில் - இங்கு உள்ளூராட்சி மன்றங்கள் உருவாகியதும் அவ்வுறுப்பினர்களுக்கான பயிற்சி வழங்குவதனை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. அதன் பின்பு பல அரச சார்பற்ற நிறுவனங்களுடாகவும் பல்வேறுபட்ட பயிற்சிகள், கருத்தங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையினால் இங்குள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி இல்லை என குறிப்பிட முடியாது. புதிதாக வந்ததினால் ஆரம்பத்தில் போதாமல் இருந்திருக்கலாம். எனவே அவர்கள் இப்போது மிகவும் பயிற்சியுடையவர்கள் என்று கூறமுடியாவிட்டாலும் ஓரளவுக்கென்றே கூறமுடியும். அவர்களுக்கு இன்னும் காலம் இருக்கிறது. ஏனெனில் அவர்கள் ஆட்சிக்கு வந்து சுமார் ஒரு வருடம் மாத்திரமே ஆகின்றது.

கேள்வி - இவ் உள்ளூராட்சி சபைகளின் விருத்திக்காக நீங்கள் முன்வைக்கும் யோசனைகள் என்ன?

பதில் - இன்னமும் பழைய காலத்து ஒதுக்கீடுகளே காணப்படுகின்றன. ஊழியர்களின் பற்றாக் குறை காணப்படுகின்றது. கீழ்மட்டத்தில் இதற்கான கேள்விகள் முன்வைக்கப்பட்டாலும் உயர் மட்டத்தால் அவை புறக்கணிக்கப்படுகின்றன. அதிகாரங்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு இருந்தாலும் அவை இன்னுனொரு விதத்தில் மட்டுப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக திட்டமிடலை எடுத்துக் கொண்டால் அதற்குரிய அதிகாரம் உள்ளூராட்சி சபைகளுக்கு காணப்படும் அதே வேளை பிரதேச செயலகத்துக்கும் காணப்படுகின்றது. இதனால் இவை இரண்டுக்குமிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஆகவே இதற்கு அரசியலைப்பு ரீதியாக வழங்கப்பட்ட அதிகாரங்களையும் அமுல்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

கேள்வி - ஆக அரசியல் யாப்பு ரீதியான மாற்றங்கள் தேவைப்படுகின்றதா?

பதில் - ஆம் நிச்சயமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். நாம் உள்ளூராட்சி மன்றங்களை " குட்டி அரசாங்கம்" என்று சொல்கிறோம். ஆனால் குட்டி அரசாங்கத்துக்கான அதிகாரங்களோ அல்லது கௌரவமோ வழங்கப்படவில்லை. ஆக சும்மா குட்டி அரசாங்கம் என்றுதான் சொல்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்ர நண்பர் ஒருத்தர் ரெஸ்ரோரன்ட் ஒண்டுக்குச் சென்றாராம். அங்க வெயிற்றரை கூப்பிட்டு தனக்கு முழுக்கோழி ரோஸ்ட் ஒண்டு தேவை எண்டு ஓடர்பண்ணியிருக்கிறார். அதற்கு வெயிற்ரர் சரியெண்டு சொல்லிச் செல்ல முயன்ற போது அங்க வந்த வெள்ளைக்காரன் ஒருத்தன் எனக்கும் அதில ஒண்டு தாங்கோ என்றானாம். சரியென தலையாட்டி உள்ளே சென்ற வெயிற்றர் இவர்களை பார்த்து ஒன்றுதான் இருக்கிறது என்ன செய்ய எண்டு கேட்க இரு வரும் தமக்குதான் வேணும் எண்டு பிடிவாதமாக இருந்திச்சினமாம்.

அதனால முன்னுரிமை அடிப்படையில் அவன் நம்மாளிடம் குடுத்துட்டு போய்ட்டான். இதனால் கோபம் கொண்ட வெள்ளைக்காரன் நம்மாளிட்ட போய் நீ இந்தக் கோழிக்கு என்ன செய்யிறியோ? அதை நான் உனக்கு செய்வன் என்றானாம். (காலை உடைத்து சாப்பிட்டால் காலை முறிப்பான் கைளை உடைத்து சாப்பிட்டால் கையை முறிப்பான் எண்டு யோசியுங்கோ)

நம்மட ஆள் நல்லா வெருண்டு போய்? ஆளைப்பார்க்க கராட்டியில பிளெக் பெல்ட் வாங்கின மாதிரியும் கிடக்கு என்ன செய்வது எண்டு யோசிச்ச போதுதான் பொறிதட்டிச்சாம். உடனே கோழியின் மலவாசலுக்குள்ள தன்ர விரலை விட்டு எடுத்து நக்கி பார்த்திட்டு ஓ..குட் ரேஸ்ட் என்றாராம். வெள்ளைக்காரனுக்கு முகத்தில ஈயாடவில்லையாம். நம்மட ஆள் என்ன சும்மாவே என்ர நண்பனெல்லோ...

பித்தன்

தொழில்நுட்பத்தின் அரசியல் : காப்புரிமை எவர் உரிமை?

"DRM" இன்று தகவல் தொழில்நுட்ப உலகில் பரவலாக உரத்த குரலில் பேசப்படும் சொல். இதன் விரிவு Digital Rights Management. அதாவது, எண்முறை (டிஜிடல்) உரிமைகள் முகாமைத்துவம்.

அதென்ன எண்முறை உரிமைகள்?

இப்போதெல்லாம் பாடல்கள், திரைப்படங்கள், புத்தகங்கள் போன்றன எண்முறை (டிஜிடல்) வடிவத்திலேயே பெரிதும் விநியோகிக்கப்படுகின்றன. இவை இணையத்தில் பரிமாறப்படுவதோடு கணினிகளிலும் அவற்றுக்கென வடிவமைக்கப்பட்ட கருவிகளிலும் பயன்படுத்தப்படக்கூடியனவாயிருக்கின்றன.

இவ்வாறு எண்முறையில் பரிமாறப்படும்போது புதிய பிரச்சினை ஒன்று எழுகிறது.

எண்முறை வடிவங்களை இலகுவாக நகலெடுத்து தேவையானளவு நகல்களை உருவாக்கி விநியோகிக்க முடியும். நகலெடுப்பதற்கான செலவு மிகவும் குறைவானது. அத்தோடு நகலின் தரமும் அச்சொட்டாக மூலத்தை ஒத்தே இருக்கும்.

நாங்கள் தெருவோரங்களில் காணும் நீண்ட இறுவட்டுக்(cd) கடைகள், நூறு ரூபாய்க்கும் குறைந்த விலையில் பெறக்கூடியதாயிருக்கும் திரைப்பட, பாடல், மென்பொருள் வட்டுக்கள் எல்லாம் இதற்கான சாட்சிகள்.

-மு.மயூரன்

சட்டரீதியாக திரைப்படங்கள், பாடல் பேழைகள், புத்தகங்கள், மென்பொருட்கள் அனைத்தும் காப்புரிமைச்சட்டத்தின் கீழ் / புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றை நகலெடுப்பதையும் விநியோகிப்பதையும் இந்தக் காப்புரிமைச்சட்டம் கடுமையாகத் தடுக்கிறது.

தற்போது இலங்கையில் புலமைச்சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் இவ்வாறு காப்புரிமையை மீறி மென்பொருள் விற்பவர்களின் கடைகள் காவல்துறையினரால் இனம் காணப்பட்டு கடை உரிமையாளர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டு வருகிறது.

மைக்ரோசொஃப்ட், அடோப், நிறுவனங்களின் மென்பொருள் உற்பத்திகளை தற்போது சட்டப்படி விலைகொடுத்தே வாங்கிப்பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கணினிகளை விற்கும் நிறுவனங்கள் கூட தற்போது தாம் நிறுவி வழங்கும் வின்டோஸ் இயங்குதளங்களின் உண்மையான விலையினை வாடிக்கையாளர்களிடம் பெற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

(இவ்வளவுக்கும், இம் மென்பொருட்களை தயாரித்த நிறுவனங்களே அவற்றை அடிமட்ட விலைக்கு இங்கே விற்பதை ஊக்குவித்தன ஒருகாலத்தில். இலவசமாக சிகரெற் வழங்குவதைப்போன்று, எம்மை குறித்த உற்பத்திகளுக்கு இலகுவில் அடிமையாக்கும் நோக்கமே அது)

அடுத்தடுத்து திரைப்படங்கள், இசை வட்டுக்களுக்கும் இந்நிலை இலங்கையில் வரக்கூடும்.

எண்முறை வடிவத்தில் திரைப்படம், இசை, மென்பொருள் போன்ற பண்டங்களை உருவாக்கி இணையத்திலும் இறுவட்டுக்களாகவும் உலகம் முழுவதும் விநியோகித்து, விற்று பொருளீட்டிவரும் வர்த்தகம் இன்று மிகப்பெரிதாக வளர்ந்திருக்கிறது. பெரும் பன்னாட்டு நிறுவனங்கள் இவ்வர்த்தகத்தை நம்பி வளர்ந்து வியாபித்திருக்கின்றன.

Piracy என்று அவர்களால் அழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கப்படும் காப்புரிமை மீறல், அடி மட்ட விலைக்கு அவர்களது பண் டங்களின் நகல்களைத் தெருவில் விற்கும் நிலை, அவர்களது இலா பத்தின் பெரும் பகுதிக்கு அச்சுறுத் தலாக அமைகிறது.

ஏறத்தாழ 1500 ரூபாய் பெறு மதியான ஐங்கரன் இன்டர்நஷனல் நிறுவனத்தின் தமிழ்த் திரைப்பட இறுவட்டு ஒன்றின் அச்சொட்டான நகல் தெருவில் 80 ரூபாய்க்கு வாங் கப்பட முடியும் என்ற நிலை. 25,000 ரூபாய் பெறுமதியான Windows XP இயங்குதளத்தின் நகல் 50 ரூபாவுக்கு தெருவில் வாங்கப்படக்கூடிய நிலை.

இவ்வாறு தமது இலாபத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தடுக்க இப்பெரும் நிறுவனங்கள் காப்பு ரிமை /புலமைச்சொத்துரிமைச் சட் டங்களைக் கடுமையாக நடைமு றைப்படுத்தும்படி அரசாங்கங்களை நெருக்குகின்றன. நெகிழ்வான புல மைச்சொத்துரிமைச் சட்டங்களைக் கொண்டிருக்கும் நாடுகளில் சட்டங் களை கடுமையானதாக மாற்றும் படி அரசியல் ரீதியில் அச்சுறுத்தல் விடுக்கின்றன.

இவ்வாறான நெருக்குவாரங்க ளின் பெறுபேறே நாம் தற்போது காணும் காவல்த் துறையினரின் கண் டிப்பான நடைமுறைகள்.

ஆனால் இப்படி விற்பனை நிலையங்களை இனங்கண்டு தண் டிப்பதும், பெருமளவான காவல்த் துறையினரை ஈடுபடுத்திக் கண்கா ணிப்பதும் செலவும், வீண்விரயமும் கூடிய நடைமுறைகள்.

திட்டம் போட்டு திருடுற கூட் டம் திருடிக்கொண்டே இருக்க, அதைச் சட்டம்போட்டு தடுக்கிற கூட்டம் சைரன்கள், கக்கிச்சடைகள், ஆயுதங்கள் சகிதம் தடுத்துக் கொ ண்டே இருக்கவேண்டியதாகிறது. திருடராய்ப்பார்த்து திருந்தலாம் என்றால் அதற்கும் வாய்ப்பற்ற அர சியல் பொருளாதார அமைப்பு.. என்ன செய்வது?

எனவே இதை வேறு வகையில் தடுக்க வேண்டும் என பன்னாட்டுக் பகாகம்பனிகள் சிந்தித்தன.

அவர்களுக்குத் தொழில்நுட்பம் கைகொடுத்தது. இப்பன்னாட்டு கம் பனிகளின் முதலாளிகளின் இலாபத் தைக் காக்க வந்த தெய்வத்தின் மென் பொருள் அவதாரமாக DRM அவத ரித்தது. DRM இனது செயற்பாடுகள் மிகவும் சிக்கலானது. அதை மிக எளிமைப்படுத்தி ஒரு எடுத்துக்காட் டின் மூலம் விளங்கிக்கொள்ள முயல்வோம்.

ஏ. ஆர். ரஹ்மானின் இசைத் தொகுப்பொன்றை Sony நிறுவனம் வெளியிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த இசைத்தொ குப்பு அடங்கிய இறுவட்டின் ஒவ் வொரு பாடல் கோப்பினுள்ளும் DRM நிரற் துண்டினை Sony நிறுவனம் பொதிந்து வெளியிடும்.

நமது தெரு முனையில் கடை வைத்திருப்பவர் தனது வீட்டுக் கணினியில் அந்த இசைத்தொகுப் பினை சட்டத்துக்குப்புறமாக நக லெடுத்து ஒரு நூறு நகல்கள் தயார் செய்து 50 ரூபாய்க்கு விற்கி றார்.நீங்கள் அதை வாங்கிக் கொண் டுவந்து உங்கள் கணினியில் போட்டு இயக்க முயல்கிறீர்கள்.

ஏன் அவ்வளவு? உங்கள் நண் பியிடமிருந்து அவ்வட்டினது நகல் ஒன்றை பெற்றுக்கொண்டு வருகி றீர்கள் என்று வைத்துக்கொள் வோமே.. DRM பொதியப்பட்ட அக்கோப்புக்கள் குறித்த மென்பொ ருள் இருந்தால் மட்டுமே இயக்கப் பட முடியும். அதற்கான மென்பொ ருளில் நீங்கள் இயக்குகிறீர்கள்.

அம்மென்பொருள் உங்கள் கணினியில் இணைய இணைப்பு உண்டா என்று பார்க்கும். இல்லா விட்டால் கோப்பினை இசைக்க முடியாதென்று சொல்லிவிடும். இணைய இணைப்பு இருந்தால், எந்தக்கணினியில், எந்த நாட்டில், எந்த வீதியிலிருந்து எத்தனை மணி க்கு இக்கோப்பினை இசைக்கிறீர்கள் என்ற தகவலை இணையம் வழியாக Sony நிறுவனத்துக்கு பொதியப் பட்ட DRM நிரற்துண்டு அறிவித்து விடும். கூடவே அந்த குறித்த கோப் பிற்குரிய சுட்டெண்ணையும் அறி வித்துவிடும்.

இத்தனை தகவல்களையும் வைத்துக்கொண்டு Sony நிறுவனத் தின் வழங்கி தன்னியக்கமாகவே நீங் கள் இசைக்கும் வட்டு சட்டத்துக்குப் புறம்பானது என்று கண்டறிந்து உங் களை இசைக்க முடியாமற் செய்து விடுவதோடு உங்களைப்பற்றிய தகவல்களையும் காவல்த் துறைக்கு அறிவித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கணினியின் மென்பொருட்கள் மட்டுமல்ல, வானொலி, இறுவட்டு இயக்கிகள் DVD இயக்கிகள், தொலைபேசி iPod போன்றனவெல்லாம் DRM வசதி பொதியப்பட்டு சந்தைக்கு வந்துவிட்டன.

DRM மக்களின் தோழமைச் சக்தி என்றும், காப்புரிமையைக் காக்கவந்த காவல் தெய்வம் என்றும் தூக்கிக் கொண்டாடப்படுகிறது.

கட்டற்ற மென்பொருள் அமையம் (fsf) போன்ற அமைப்புக்கள் இந்த DRM இனை போர் முனைப் போடு எதிர்த்து வருகின்றன.

காப்புரிமை நல்ல விசயம் தானே? அதை எதிர்ப்பானேன்?

புலமைச் சொத்துரிமை/ காப்புரிமை போன்ற வார்த்தைகளை நாம், ஓர் ஆக்கத்தினை ஆக்குவோரது, இயற்றுவோரது உரிமை என்றவாறே விளங்கி வைத்திருக்கிறோம்.

ஓர் ஆக்கத்தினை இயற்றும் தனிநபருக்குத் தானே உரிமைகள் போய்ச் சேரவேண்டும்? அவரின் வருமானத்தை வீழ்த்தும் Piracy இனை ஒழிக்கத்தானே வேண்டும்? இதற்கு உதவி செய்யும் DRM நல்லது தானே என்றவாறாக நாம் சிந்திக்கத் தொடங்கி விடுகிறோம்.

ஆனால் உண்மை வணிக உலகின் முகம் வேறு மாதிரியானதாக இருக்கிறது.

புத்தக எழுத்தாளர்களாக இருக்கட்டும், இசையமைப்பாளர்களாக, திரைப்பட இயக்குநர்களாக இருக்கட்டும் மிகவும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே தமது படைப்புக்களைத் தாமே சந்தைப்படுத்தி இலாபம் பார்ப்பதற்கான மூலதன பலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் மலினமான கலைப்படைப்புகளை விற்று காசு பார்ப்பவர்களே, ஏனையவர்கள், தரமான கலை யுழைப்பைச் செலுத்திப் படைப்பவர்கள் வருமானத்தில் பின்தங்கிய சராசரி நிலையிலேயே வாழ்கிறார்கள்.

பெரிய நிறுவனங்கள், இவ்வாறு சந்தைப்படுத்த, விநியோகிக்க வசதியற்ற கலைஞர்களின். படைப்பை அடிமட்ட விலைக்கு வாங்கிக் கொள்கின்றன. வாங்கி, அப்படைப்பினை விநியோகிக்கும், வெளியிடும் மொத்த உரிமையையும் தமதாக்கிக்கொள்கின்றன. இப்போது காப்புரிமையானது அந்த நிறுவனத்துக்கே போய்ச் சேருகிறது. உண்மையாக கலையுழைப்பைச் செலுத்திய கலைஞர் பிச்சைக்காசைப்பெற, மூலதனம் இருந்த ஒரே காரணத்தால் அப்படைப்பினை வாங்கிய நிறுவனம் மொத்த லாபத்தியும் தனதாக்கப்போகிறது.

இதற்கே உண்மையில் புலமைச் சொத்துரிமைச்சட்டங்களும், காப்புரிமைச்சட்டங்களும் சேவகம் செய்கின்றன.

இதனாலேயே பெரிய முதலாளிகளால் வழிநடத்தப்படுகிற பெரிய அரசாங்கங்கள் உலக அரசுகளை நெருக்கியும். மிரட்டியும் புலமைச் சொத்துரிமைச்சட்டங்களை இறுக்கமாக்கும்படி செய்கின்றன.

இதனால் கலைப்படைப்பு ஒன்று அதை உருவாக்கியவருக்கோ, வாங்கிப்பயன்படுத்துபவருக்கோ அல்லாது இடைத்தரகர்களுக்கே பெரும் இலாபத்தினை ஈட்டித்தரும் விற்பனைச்சரக்காக மாற்றப்படுகிறது.

மலினமான படைப்புக்களைத் தரும் வியாபாரக்கலைஞர்களை விட தரமான கலைப்படைப்பை உருவாக்கும் சீரிய கலைஞர்களையே இப்போக்கு அதிகமதிகம் சுரண்டுகிறது.

இதனை நன்றாகப் புரிந்து கொண்டாலேதான், புலமைச்சொத்துரிமை என்ற அழகான சொல், மனித குலத்துக்கு எதிரானதாக மாற்றப்பட்டிருப்பதை புரிந்துகொள்ள முடியும்.

இந்த இலாபப்பெருக்க வேட்கையானது எவ்வளவு தூரம் தனிமனிதர்களைத் தீவிரமாகப் பலி கொள்கிறது என்பதற்கு இந்த DRM மிகப்பிந்திய் எடுத்துக்காட்டு. ஒவ்வொருவருக்கும் தனிமனித சுதந்திரம் எனும் உரிமை உண்டு. அந்தரங்கங்களைக் காக்கும் உரிமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு தெரியாமல் இயங்கும் நிரல் ஒன்று, உங்களைப்பற்றிய தகவல்களை, நீங்கள் எத்தகைய படைப்புக்களை அடிக்கடி பயன்படுத்துகிறீர்கள் என்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த தகவல் தொடக்கம், உங்கள் கணினியிலிருந்து திரட்டக்கூடிய உங்கள் சொந்த தனிப்பட்ட தகவல்கள் வரை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்குகிறதென்றால் அது தனி மனித உரிமைகளை மதிக்காத குற்றம் இல்லையா?

ஓர் இசைதட்டை நீங்கள் வாங்கினால் அதை இன்னொருவருக்குக் கொடுக்க முடியாதென்று தடுப்பதும், இன்னொரு கருவியில் இசைக்க முடியாதென்று மறுப்பதும் நியாயமானதா?

இது ஒரு சர்வாதிகாரப் போக்கில்லையா?

ஒரு கலைப்படைப்பினைக் காசு கொடுத்து மட்டுமே வாங்க வேண்டும் என்றும், அதை உங்கள் கணினியில் மட்டுமே இயக்க முடியுமென்றும், உங்கள் சொந்தத் தகவல்கள் உளவுபார்க்க வழங்க வேண்டுமென்றும் அதை நீங்கள் வேறெவருக்குக் கொடுக்கக்கூடாதென்றும் உங்கள் கைகளை சட்டத்தினால் கட்டி வைப்பது மனிதகுலத்துக்கு எதிரானதில்லையா?

புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டால் அதை வசதிஉள்ளவர்கள் வாங்கிப்படித்து, அதை வசதியற்றவருக்குப்படிக்கக்கொடுக்கும், நூலகங்களில் பலரது பயன்பட்டுக்கும் பொதுவில் வழங்கும் , அறிவைப்பகிரும் அழகான, ஆரோக்கியமான சமூக அசைவியக்கமே, இலாபபெருக்கத்துக்காக குழிதோண்டிப் புதைக்கப்படுவதை அனுமதிக்க மறுப்பவர்கள் தற்போது DRM இற்கெதிராக போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள்.

ஆனால் DRM வந்துவிட்டது. தற்போது வெளிவரும் மென்பொருட்கள் பலவும், DVD Players, iPod, Blue-ray disk போன்றனவும் DRM பொதியப்பட்டே வருகின்றன.

இன்று இணையத்தைப் பெறுவதற்கான செலவு குறைக்கப்பட்டுவருவதும், இணையம் கிராமம் கிராமமாக பரவலாக்கப்பட்டு வருவதும் இந்த வியாபார நலன்களுக்கு வசதி செய்துகொடுக்கதான் போலிருக்கிறது.

இந்தப் புலமைச்சொத்துரிமை, காப்புரிமை போன்ற அழகான, நியாயமானவையாகத் தோற்றம் காட்டும் சொற்களில் நாம் மயங்கி விடாமல் சரியான பார்வையினைப் பெற்று அநியாயங்களை இனம் காணக்கூடியவர்களாக மாறிக் கொள்ள வெண்டும் அல்லது எமது ஆரோக்கியமான வாழ்க்கைமுறையையே சிதைக்கும் தொழிநுட்பங்களை அழகான சொற்களைப் போட்டு எம் தலையில் கட்டி விடுவார்கள்.

தொழிநுட்பம் என்பது தனது கவர்ச்சிகரமான விளம்பரங்களுக்குப்பின்னல் பெரும் தந்திரங்களையும் பொறிகளையுமே பொதிந்து வைத்திருக்கிறது. இதுவே தொழிநுட்பத்தின் அரசியல்.

திறந்த மூலம், கட்டற்ற மென்பொருட்கள், திறந்த புலமைச்சொத்துக்கள், அளிப்புரிமை போன்ற மாற்றுத் தொழிநுட்பங்களின் பால் நாம் சார்ந்துகொள்வதே பாதுகாப்பானது என்று தோன்றுகிறது.

உண்மையான கலையுழைப்பைச் செலுத்தும் கலைஞரை ஊக்குவிக்காதவரை, நசிவுப்பண்டங்களை ஒதுக்கி தரமான படைப்புக்கள் வருவதை உறுதிப்படுத்தாதவரை, ஆபாசப்பண்டங்கள் உண்மையான கலைப்படைப்புக்களை ஒதுக்கிதள்ளும் நிலையை மாற்ற முடியாத வரை, படைப்பொன்றின் மொத்த பயனும் படைப்பாளிக்கும், மக்களுக்கும் ஆரோக்கியமான முறையில் பகிர்ந்தளிக்கப்படாதவரை எந்தவொரு காப்புரிமையும், புலமைச்சொத்துரிமையும் பெரு முதலாளிகளின் உரிமைகளாக மட்டுமே இருக்கும்.

காப்புரிமை, புலமைச்சொத்து, (DRM) Digital Rights Management பற்றிய மாற்று அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் ஒரு நோய்

மருந்து அவசியம்

காதல் ஒரு நோய் போன்றது மட்டுமன்றி குருட்டுத்தனமாகவும் செயற்படத் தூண்டுகிறது என்கின்றன அறிவியல் ஆய்வுகள்.

காதல் ஆணைப் பெண்ணாக்கிறது. பெண்ணை ஆணாக்கிறது. காதல் ஏற்பட்ட ஆண்களுக்கு ஆணியல்புக்குரிய ரெஸ்ரொஸ்ரெறோன் (testosterone) ஓமோனின் அளவு இயல்பை விடக் குறைவடைய அவனிடம் பெண்ணியல்பு அதிகரிக்கப் பெறுவதாகவும் பெண்களில் ஓமோனின் அளவு அதிகரிப்பதால் ஆணியல்பு அதிகரிக்கப் பெறுவதாகவும் இத்தாலிய University of Pisa வைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதனால் தான் என்னவோ தற்போதெல்லாம் காதலித்த பின்னும் திருமணம் ஆன பின்னும் ஆண்கள் பெண்களுக்கு இலகுவாக அடங்கிப் போய் விடுறாங்களோ என்னவோ..?!

Uversity College London இல் இடம்பெற்ற பிறிதொரு ஆய்வின் பிரகாரம் காதல் குருட்டுத்தனமானதே என்றும் விஞ்ஞானிகள்-சொல்கின்றனர். தமிழில் எப்பவோ சொல் லிட்டார்கள். ஆனால் விஞ்ஞானிகள் இப்போது தான் சமீபத்திய ஆண்டில் இதைக் கண்டறிந்துள்ளனர்.

காதல் வயப்பட்டவர்களின் மூளையின் நடுநிலைச் சுற்றுடன் தொடர்புடைய சில முக்கிய செயற்பாடுகள் பின் தங்கி விடுவதால் இவர்கள் தீவிரமாக சிந்தித்து முடிவெடுக்க முடியாத நிலைக்கு ஆளாகி விடுகின்றனர். இதனால் தான் காதல் வயப்பட்டவர்கள் இலகுவாக ஏமாற்றப்படும் அளவுக்கு தமது இணையின் தவறுகளைக் கண்டும் காணாமலும் இருந்து விடுகின்றனராம்.

இந்த இரண்டு ஆய்வுகளும் காதல் உடலில் சில ஆபத்தான விளைவுகளை உருவாக்கிறது என்பதை காட்டி நிற்கின்றன என்கின்றனர் உயிரியல் விஞ்ஞானிகள்.

இதைவிட இவற்றுக்கு முன்னர் செய்யப்பட்ட ஒரு ஆய்வில் இருந்து காதல் வயப்பட்டவர்களில் செறோரொனின் (serotonin) அளவு குறைவடைந்து இருப்பதுடன் இது obsessive compulsive disorder உள்ளவர்களில் உள்ள செறோரொனின் அளவை ஒத்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் தான் காதலர்கள் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் துணை பற்றி obsess ஆக இருக்கின்றனரோ என்றும் விஞ்ஞானிகள் சந்தேகிக்கின்றனர்.

எதிர்காலத்தில் மேலே கூறிய படிக்கும் இன்னும் பல பாதக விளைவுகளையும் உண்டு பண்ணும் காதலுக்கு மருந்து அல்லது சிகிச்சை முறையை அறிமுகப்படுத்துவது என்பது நிராகரிக்கப்பட முடியாதது என்கிறார் பேராரிசியர் கறீத் லெங் (professor Gareth Leng (University of Edinburgh).)

காதல் வயப்பட்ட பலரும் தங்கள் இணையுடனான உறவுப்பாலத்தையிட்டு திருப்தி இல்லாமல் இருப்பதுடன் பாலியல் ரீதியாகவும் திருப்தி அற்றவர்களாகக் காணப்படுகின்றனராம்.

எனவே இந்தக் காதல் நோய்க்கு எப்படியாவது மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை இப்போது விஞ்ஞானிகளுக்கு எழுந்துள்ளது.

இதனால் தான் என்னவோ நம் முன்னோர் எப்பவோ "காதல் கிறுக்கு", "காதல் குருடு" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த கலைஞர்கள்...

மயில்வாகனம்
சர்வானந்தா

சகலகலாவல்லவன்

சங்கரதாஸ் சுவாமிகளின் தத்துவ மீனலோசினி வித்வ பால சபா, நாடகங்களை நடத்த புதுக்கோட்டைக்கு வந்த போது எட்டு வயது சிறுவன் சின்னத்தம்பி இதில் நடிகனாகச் சேர்ந்து கொண்டான். முதன் முதலில் சின்னச்சாமி நடித்த நாடகம் இராஜாம்பாள். இராஜாம்பாள் நாடகத்தில் துப்பறியும் கோவிந்தனை அடிக்கும் ரவுடிகளில் ஒருவனாக சின்னச்சாமிக்கு வேடம் கிடைத்தது. பின்னர் சாவித்திரி, புண்ய புருஷன் நாடகங்களில் சின்னச் சின்ன வேடங்களில் நடிக்க சின்னச்சாமிக்கு பிடிக்கவில்லை. ஆறுமாதங்களின் பின்னர் புதுக்கோட்டைக்கு மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பனி வந்தது. நாடகங்களை நடிக்கத் தொடங்கியது.

இதில் சின்னச் சாமி இணைந்து நடிக்கத் தொடங்கினான். பாட வேண்டும் என்பது சின்னச்சாமியின் ஆசை. பாடி நடிப்பதற்கான வேடங்களையே அவன் மனம் நாடியது. ஆனால் கிடைக்கவில்லை. ஒரு நாள் நாடக கம்பனியில் தனித்து இருந்து சதி அனுசூயா பாடல்களை பலமாகப் பாடிக் கொண்டிருந்தான். கம்பனி முதலாளி சச்சிதானந்த பிள்ளையின் காதுக்கு இது எட்டியது. மனம் மகிழ்ந்து போன முதலாளி சின்னச்சாமிக்கு எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் கொடுத்து பதவியுயர்த்தினார். மேடை நாடகங்களில் பாடி, நடிக்கும் வாய்ப்பு சின்னச்சாமிக்கு பின்னர் கிடைத்தது.

பி.யு.சின்னப்பா

அனேகமான நாடகங்களில் சின்னச் சாமி கதாநாயகனாகவும் , எம்.ஜி.ஆர். பெண்வேடத்தில் கதாநாயகியாகவும் நடித்தனர். அப்போது நாடகக் கம்பனியிலிருந்த எனைய நடிகர்கள் எம்.கே.ராதா, கே.ஆர். ராமசாமி, எம்.ஜி.சக்கரபாணி, காளி, என்.ரத்தினம் ஆகியோர். சின்னச்சாமியின் பாடல்களை ரசிகர்கள் விரும்பிக் கேட்கும் காலம் வந்தது. 'பக்தி கொண்டாடுவோம்' பாடல் ரசிகர்களிடையே மிகவும் பிரபலமாகியது. நாடகமேடையில் ஸ்வரம், சங்கதிகள் போட்டு இப்பாடலை பாட ஆரம்பித்தால் முடிவதற்கு முப்பது நிமிடங்களாவது ஆகுமாம். அதற்குள் once more கேட்பார்கள் ரசிகர்கள் என பத்திரிகைகள் கூறுகின்றன. நடிப்பிலும் பாட்டிலும் நாடக மேடையில், உச்ச நிலையில் இருந்த போது சின்னச்சாமிக்கு மகாக்கட்டு ஏற்பட்டது. இது என்ன மகாக்கட்டு? டி.கே. சண்முகம் அவர்கள் எழுதியதை அப்படியே தருகிறேன். பெண்கள் மங்கைப் பருவம் அடையும் போது உடலிலே மாற்றம் ஏற்படுவதுபோல, ஆண்களின் பருவ வளர்ச்சியை காட்டுவதற்குரிய அறிகுறிதான் 'மகரக்கட்டு' என்பது. பதினைந்து, பதினாறு வயதில் இந்த மகரக்கட்டு தோன்றும். இனிமையான குரல் மாறி கனமான குரல் ஏற்படும். இந்த இடைக்காலம் அந்த நாள் நடிகர்களுக்கு மிகவும் பயங்கரமான காலமென்று சொல்லலாம். குரல் நாம் நினைக்கிறபடி கட்டுப்படாமல் பிசிர் அடிக்கும். அதன் போக்கில் நம்மை இழுத்துப்போகும். பாட்டுக்கு முதன்மை இருந்த காலமாதலால் பெரும்பாலான நடிகர்களின் இந்தக் காலகட்டத்தை தாண்டி வருவது கஷ்டம். இந்த மகரக்கட்டு வரும் சமயத்தில் பெரும்பாலும் நடிகர்கள் மதிப்பிழந்து விடுவார்கள். குரலிலே கோளாறு ஏற்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரிந்ததும் அவருடைய வேடங்கள் எல்லாம் உடனடியாக மாற்றப்படும் என்று பிரபல நாடக ஆசிரியரும் நடிகருமான டி.கே. சண் முகம் அவர்களது குறிப்புக் கூறுகி றது.

தனது குரல் கரகரக்கத் தொடங்கி யதும் தொடர்ந்து இழுத்தால் மரியாதை கெட்டுவிடும் என்று தெரி ந்த சின்னச்சாமி கம்பனியிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் சென்று விட்டான். புதுக்கோட்டைக்கு திரு ம்பிய சின்னச்சாமி ஸ்பெஷல் நாடக ங்களில் நடித்தார். சங்கீத தீட்சை பெற்று உருப்படிகளை பாடம் பண் ணினார். புதுக்கோட்டை தால்மி யான் கொட்டடியில் சேர்ந்து வாத்தி யார் ராமநாத ஆசாரியிடம் பாணாத்

தடி வீசுதல், கவண் எறிதல், கத்திச்ச ண்டை, சுருள் பட்டா வீசுதல் என பல்வேறு சாகசக் கலைகளைப் பயி ன்று தேர்ந்து, வெயிற் லிஃப்டிங் கிலும் மாஸ்ரரானார். இத்தனை வித் தைகளையும் பின்னாளில் திரையில் செய்து காட்டி பலரையும் திகைக்க வைத்தார்.

பின்னர் புளியம்பட்டிக் கம்பனி யில் சேர்ந்து 'ராஜாம்பாள்' சத்திரகா ந்தா நாடகங்களில் சாகசக் கதாநாயக னாக சின்னச்சாமி புகழ் பெற்றார். இந்தப்புகழே சின்னச்சாமியை திரை யுலகுக்கு இழுத்துவந்தது.

ஜிபிடர் பிக்சர்ஸ் 'சந்திரகாந்தா' நாடகத்தை சினிமாவாகத் தயாரித்த போது, நாடக ஹீரோ சின்னச்சா மியையே ஒப்பந் தம் செய்து கொண் டார்கள். சந்திரகா ந்தா படம் 1936 இல் வெளிவந்தது. இதில் சின்னச் சாமி, புதுக்கோ ட்டை பி.யு. சின்ன ப்பா என்ற பெய ரில் சந்திரகாந் கொடி பறக்குது. சகல உலக நீதி யாவையும் கொடு க்குது' என்ற TIT LE SONG பாடிய படி சினிமாவுக்கு கண்டூர் இளவரசனாக அறிமுக மானார். இதனைத் தொடர்ந்து பஞ் சாப்கேசரி, ராஜமோகன், அனா தைப்பெண், யயாதி, மாத்ருபூமி, ஆகிய படங்களில் நடித்தார். இவர் இரட்டை வேடங்களில் நடித்து மாபெரும் வெற்றி பெற்ற படம் 'உத் தம புத்திரன்' இது 1940 இல் வெளி வந்தது. நல்லவனாகவும், தீயவனா கவும் அண்ணன், தம்பியாக உத்தமபு த்திரன் படத்தில் சின்னப்பா அட்ட

காசமாக நடித்தார். அண்ணன் சின்ன ப்பா ஒரு காட்சியில் பாரதியின் 'செந்த மிழ் நா டெனும் போதினிலே' பாட லைப் பாடினார். அதன் பின்னர் வெளி வந்த தயாளன், பிருதி விராஜன் பட ங்களிலும் சின்ன ப்பா பாரதியார் பாடல்களைப் பாடி னார். பிருதிவிராஜன் 1942 இல் வெளிவந்தது. இதில் சின்னப்பா - பிரிதி விராஜனாகவும், சம்யுக்தையாக ஏ. சகுந்தலாவும் நடி த்தனர். ஆர்யமாலா மனோன்மணி போன்ற படங்கள் சின்னப்பாவை சூப்பர்ஸ்ரார் ஆக்கியது. தெளிவான வசன உச்சரிப்பு இனிய குரலில் பாட ல்கள், வீரசாகசச் சண்டைகள் இவற் றோடு நடிப்பில் பிறர் பின்பற்ற முடியாத தனியானதொரு பாணி.

1942 இல் கண்ணகி வெளிவந் தது. சின்னப்பாவின் புகழ் மகுடத் தில் மேலும் ஒரு மணியைச் சேர்த் தது. சின்னப்பா பாடிய அனைத்து பாடல்களும் ஹிட்டாகின. குபேர குசேலாவில் சின்னப்பா பாடிய நடையலங்காரம் கண்டேன். பாடல் பட்டி தொட்டியெங்கும் ஒலித்தது. சின்னப்பாவின் குரலில் ரசிகர்கள் அனைவரும் மயங்கினர். 1944 இல் வெளிவந்த ஜகதலப் பிரதாபன் பட த்தில் ஒரு காட்சியில் எட்டு சின்னப் பாக்கள் தோன்றி எட்டு வித இசைக்கருவிகளை வாசித்து, பாடி பிரமிக்க வைத்தனர். மகாமாயா, அர்த்தநாரி, பங்கஜவ ல்லி, விகடயோகி என் பன தொடர்ந்து வந்த படங்கள்.

1946 இல் வந்த விகடயோகியே சின் னப்பா நடித்த ஒரே ஒரு சமூகப்ப டம், டைரக் சன் கே.சுப்பிரமணியம் கிருஷ்ணபக்தியில் ஆசாடபூதியாக சின்னப்பா நடித்தார்.

'சாரஸம்
வசீகரக்கண்கள் சீர்தரும்
முகம் சந்திரபிம்பம்...' எல் லோர் மனதையும் நிறைத்த பாடல் சுதர்ஸன், மங்கையர்க்கரசி, வனசுந் தரி, ரத்னகுமார் என்பன இவரின் ஏனைய படங்கள். ரத்னகுமாரில் சின்னப்பாவுடன் எம்.ஜி. ஆரும் நடி த்தார். வயோதிபம் அடையாமல், வறுமையில் வாடாமல் புகழே ணியின் உச்சியில் இருக்கும் போது சின்னப்பா திடீரென மரணம டைந்தார்.

இயற் பெயர் :- சின்னச்சாமி
பிறப்பு :- மே.05,1916
புதுகோட்டை
இந்தியா.
இறப்பு :- 23-09-1951
புதுகோட்டை
இந்தியா.
துணைவி :- ஏ.சகுந்தலா

தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையன் : நான் பெரிய பணக்காரன் கிடையாது, அல்லது என்ர பிரண்ட் கோபி மாதிரி என்னட்ட பெரிய காரோ வீடோ கிடையாது, ஆனா நான் உன்ன லவ் பண்றேன்

பெண் : நானும்தான், ஆனா உன்ர பிரண்ட் கோபியெண்டு யாரையோ சொன்னீயே அவர் எங்க இருக்கார்?

காதலன் : டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன்ர மனசில வேற யாராவது இருக்காங்களா?

காதலி : ஓமோம் டியர், எனக்கெண்டு ஒருத்தன் பிறக்காமலா இருப்பான்?

காதலி : ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?

காதலன் : நிச்சயமா நீதான், ஏனென்டா நேற்றுத்தான் லிஸ்ட்ட செக் பண்ணினன்

காதல்.com

பெண் : நாங்க ரெண்டு பேரும் கலியாணம் செஞ்சா, உங்களோட துக்கம், பிரச்சனை எல்லாத்திலும் நானும் சம பங்கு எடுப்பேன்.

ஆண் : எனக்கு துக்கம், பிரச்சனை எதுவும் இல்லையே

பெண் : அவசரப்படாதீங்க, நாமதான் இன்னும் கலியாணம் செய்ய வேயில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை விதி

நான் ஏதோவொரு கனவுவெளியில் சஞ்சரித்து இருந்ததைப் போல இருந்தது. என் கால்கள் நிலத்தில் பரவியிருந்தும் நான் கனத்துப் போய்விட்டதாய் எனக்குத் தோன்றிற்று.

திரும்பவும் அவனைப் பார்த்தேன். அவன் ஏதோ ஒன்றைச் சொல்லும் அந்தரத்தோடு இறந்ததைப் போன்ற பாவனை அவனின் வாயில் தெரிந்தது.

இலையான்கள் பறந்து பறந்து அவனையே மொய்த்துக் கொண்டிருந்தன. அவன் கண்கள் இலையான்களை வெறித்துப் பார்ப்பதைப் போல இருந்தன.

யாரோ சனம் எல்லாம் றோட்டில் எட்டிப் பார்ப்பதும் போவதுமாய் நின்றார்கள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. இரண்டு கைவிரல்களையும் ஒன்றாகக் கோர்த்துப் பிடித்தேன்.

கால்கள் மடங்கி முறிந்து விடும் போல இருந்தது. நான் கனத்துப் போனதை உணர்கிறேன். என் தலையில் இடைவெளி விடாமல் ஒவ்வொரு திசையிலும் ஆணி அடிக்கப் படுவதாய்....

நான் அந்தப் போஸ்ற்றோடு சாய்ந்து இருந்துவிட்டேன். வெயில் முகத்தில் படும் சிறு சுரணையை உணர்ந்தேன். சப்பாத்துக் கால்களின் ஓசை செவிப்பறையைத் தொடுகின்றது. வாகன சத்தங்கள் காதை அடைக்கிறது.

நான் சிறிது முயற்சி செய்து எழுந்தேன். "இனந்தெரியாதோரால் சுடப்பட்ட இளைஞனின் சடலம் போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டு உறவினரிடம் கையளிக்கப்பட்டது என நாளை பேப்பரில் வரும்" நான் தாறுமாறான யோசனைகளோடு 'அவனைச் சூழ நின்ற சப்பாத்துக் கால்களை அண்மித்தேன். அவனின் கால்களைக் கண்ணில் ஒற்றியபடி சுமதி குழறிக் கொண்டிருந்தாள். இரண்டு வயது பெண் குழந்தை எதுவுமே நடக்காதது போல தன் சட்டையின் நாடவை வாயுக்குள் வைத்து நன்னிக் கொண்டிருந்தது.

குழந்தை 'தத்தக்க பித்தக்கா' என்று நடந்து அங்கு இங்கென்று வேடிக்கை பார்த்துக் கொண்டே நின்றது. திடீரெனத் தடுக்கி விழுந்து அழத் தொடங்கியது. யாருமே அந்தக் குழந்தையைத் தூக்கவும் இல்லை பார்க்கவும் இல்லை.

அழுகை மட்டும் இன்னும் இன்னும் கூடியது. எனது ஆண் மார்பில் ஏதோ ஒரு சுரப்பு நிகழ்வதைப் போன்ற அருட்டுணர்வு. கண்கள் பனிக்கின்றன. நான் குழந்தையைத் தொட்டுத் தூக்குகிறேன். அது என்னில் இருந்து, இந்தா பார் நழுவுகிறேன் என்பதாய் திமிறி அழத் தொடங்கியது.

நான் என் தலைக்கு மேல் தூக்கி அதற்கு விளையாட்டுக் காட்டினேன். மூத்திர வாசம் மூக்கை நெருடியது. குழந்தையின் முகத்தில் ஒரு சிரிப்பு மலர்ந்தது. பாவம் சிவா, இதனை எப்போது ஆசை தீரத் தூக்கி இருப்பானோ? அவனின் மூச்சுக் காற்றுக் கரைகையில் தான் தன் மனைவியோடு மகிழ்வாய் இருந்த கடைசி நாளை.... குழந்தையைத் தூக்கி முத்த மழை பொழிந்த நாளை ..... எதை அவன் நினைத்திருக்க கூடும்? வேதனையில் என் கண்கள் அலைக்கழிந்தன.

"தம்பி, தகரக் கொட்டில் போட வேணுமா? கதிரைகளுக்குச் சொல்ல வேணுமே?" இல்லை இல்லை அது ஒண்டும் வேண்டாம் சனம் ஒண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிசா வராது எண்டு உங்களுக்குத் தெரியாதோ?

ஆர்சுட்டது?
ஏன்சுட்டது?
யாரோடு தொடர்பு?
ஏதும் பிரச்சினையில் லாமல் சுடுவாங்களோ? நாங்கள் போய் ஏன் எங்க ளைக் காட்டிக் கொடுப் பான்?

என்றெல்லாம் எங்கட சனம் கதைச்சு முடியுறதுக் குள்ள சிவாவின்ர அந்தி யேட்டியும் முடிஞ்சு போ கும். " நீங்கள் கிரியைக்கு அலுவல் பாருங்கோ" அவ ர் மறு பேச்சுப் பேசாமல் அங்காலே போனார்.

சிவா இந்த ஊரில் போகாத செத்த வீடொ ன்று ஏதும் இருக்குமோ என்று என்னால கண்டுபிடி க்க முடியவில்லை. ஆஸ் பத்திரியில் இருந்து 'பொடி யை' கொண்டு வந்த போது காரில் இருந்து இற க்குவதற்கு பட்டபாடு, அப்பப்பா....

நான் சுமதியைப் பார் த்தேன் தலைமயிர் கலைந்து விய ர்வை முகத்தில் ஒட்டுப்பட்டுக் கிடந் தது. கண்கள் வீங்கி முகம் விகா ரமாய் இருந்தது.

கொஞ்ச நேரத்தில் கொதிக்கும் தார் றோட்டில் நாங்கள் கொஞ்சப் பேர் சேர்ந்து நடக்கத் தொடங்கியி ருந்தோம்.

கார் கொஞ்சம் முன்னால் போ ய்க்கொண்டிருந்தது. கொள்ளிக் குட



த்தோடு சிவாவின் தம்பி நடந்து கொண்டிருந்தார். அரசடிப் பள்ளி க்கூடத்தைத் தாண்டும் போது என் கண் கலங்கியது. நானும் அவனும் பள்ளிக்கூடத்துக்கு நடந்து வந்து படி த்த நினைவுகள் குமிழிட்டன. கந்த ப்பன் வீட்டுக் கள்ளு என்னைச் சுவ ரோடு மோதச் செய்தது....

என ஆள் ஆளுக்குச் சொல்லி மோதியபடி றோட்டில பெரும்

களேபரம் செய்து படித்த நினை வுகள்....

என்னால் முடியவில்லை. நினைவுகளின் அணிவகுப்பு என் னைத் தடுமாற வைத்தது. சுடலை க்கு போக வேண்டாம் என்று மனஞ் சொல்லியது. என்னால் நடக்கவே முடியவில்லை. றோட்டில் வந்து கொண்டிருந்த ஒரு தெரிந்தவனை மறித்து சிவா வீட்டை நோக்கிச் சென்றேன். சுடலையில் அவன் எரி வதை எப்படி நான் பார்க்க முடியும்? கண்கள் குளமாகிக் கொண்டிரு ந்தன.

சுமதி முழந்தாள்களுக்குள் முகத்தைக் கொடுத்திருந் தாள். அங்கொன்று இங் கொன்றாய் சில பெண் கள்..... அவர்களும் கலைந்து கொண்டி ருந்தார்கள். மாமா என்று கூப்பிட்ட படி குழந்தை அருகில் வந்தது.

"மா..மா நீங் க ள் அ ப் பா வோ ட போகேல்லோயோ? அப்பா தனி யவே போறார். ஒவ்வொரு நாளும் கொண்டு போற பேர்ஸை இண்டை க்கு விட்டிட்டுப் போட்டார் நீங்கள் குடுத்து விடுறியளோ மாமா...."

நான் ஒன்றும் குழந்தையைத் தூக்கி முகமெங்கும் எச்சில் நனைத் தேன் தாணை குஞ்சு நான் அப்பா ட்டக் குடக்கிறன்.

"அச்சா மாமா...
நான் அப்பாவுக்கும் செல்லம்
உங்களுக்கும் செல்லம்"
நான் ஒன்றும் பேசாமல் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக அங்கிருந்து வெளியேறினேன்.

வீதியிலே அங்கு இங்கென்று யார் யாருடையதோ கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள்... ஒட்டப் பட்டு... அரைவாசி கிழிபட்டு.... அதில் புதிதாய் சிவாவும்!

என் அடிவயிற்றிலிருந்து ஏதோ ஒரு பாறை திருமாலைப் போலத் திரும்பிப் படுப்பதாய் உணர்வு கெம்ப கண்களில் நோ எடுத்தது.

மிக வேகமாக நடக்கத் தொடங்கினேன். வழியில் கண்ட கல்லொன்றைக் காலால் எத்தினேன். நகம் பியந்து இரத் தம் சொட்டத் தொடங்கியது. மண்ணுக்குள் விரலைப் புதைத்து எடுத்து விட்டு ஒன்றும் நடக்காதது போல நடக்கத் தொடங்கினேன். காற்றுக்கு எழும்பி ஏதோ ஒரு பேப் பர் என்னை நோக்கி பறந்து வந்தது.

சுட்டுக் கொலைகள் , சரண் அடைந்தவர்கள், காணாமல் போனவர்கள், உருத்தெரியாத உடல்கள் ... என பல உபதலைப்புகள் நிறைந்த பேப்பரின் பக்கம் அது.

நான் அதை ஏதோ வொரு ஆவேசத் தோடு கிழித்து கால்களில் இருந்து பெருகிய இரத் தத்தை 'ஒற்றி ஒற்றி' எடுத்து கசக்கி எறியத் தொடங்கினேன்.

என் இரத்தம் துடைத்த சின்ன பேப்பர்த்துண்டுகளை காற்று உருட்டத் தொடங்கி யது. நான் அதை உற்றுப் பார்க் கத் தொடங்கினேன்.

கவிநேசன்

வாசிப்பு மாதம் 2008

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி துணை ஆணையாளர் அலுவலகத்தினால் வாசிப்பு மாத நிகழ்வுகள் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது ஆரையம்பதி, செங்கலடி, வாகரை ஆகிய பிரதேசங்களில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இதன் நோக்கம் குறிப்பாக மாணவர்கள் மத்தியிலும், வாசகர் மத்தியிலும் வாசிப்பு பழக்கத்தைத் தூண்டுவதாகும். இதற்காக மாணவர்கள் மத்தியில் கருத்தரங்குகள், சிறந்த வாசகர்களை கௌரவித்தல், பேச்சுப்போட்டி, கவிதை கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்பட்டன. மேலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள நூலகங்களிலும் வாசிப்பு ஊக்குவிப்பு நடிவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு அப்பிரதேச மக்களின் மாணவர்களுடைய பெற்றோர்களின் ஒத்துழைப்பு காணப்பட்டது. இந்நிகழ்வுக்கு விழுது நிறுவனத்தின் வாசகர் வட்டங்கள் பெருமளவில் தமது ஒத்தாசைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளூராட்சி துணை ஆணையாளர் அலுவலகம் மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"பெயருக்கு பிரதம மந்திரி"

நெருநல் நினைவுகள்

கவிஞர் திமிலைத் துமிலன்

அப்ப ஆசிரியர் கலாசாலையில பராளுமன்ற நடைமுறையிருந்திச்சி. பிரதம மந்திரி துவக்கம் தேவையான மந்திரிகளையெல்லாம் ஒரு கூட்டத்தில் ஆசிரிய மாணவர்களே தெரிவு செய்வாங்க. கலாசாலையில எல்லாச் செயற்பாடுகளுக்கும் அவங்கதான் பொறுப்பு. பிரதம மந்திரிக்குக் கீழ மந்திரிமார் இயங்குவாங்க. 1958 ஆம் ஆண்டு புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்படல்ல. ஏன் தெரியுமா? விரிவுரையாளர் மாணவருக்கிடையில் ரெண்டு கட்சி, லடாயாலாதான் பிரதம மந்திரிய மாத்திரம் அதிபர் நியமித்தார். மற்றெல்லா மந்திரிமாரும் பழைய ஆக்கள்தான். அதுவும் விடுதி மேற்பார்வையாளர் ராசதுரையிட சொற்படிதான் எண்டு கதையடிபட்டிச்சி.

விடுதி மாணவரிட உணவுக்குப் பொறுப்பு உணவு மந்திரி, கல்விச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பு கல்விமந்திரி எண்டு இப்படி ஒழுங்கு இருந்திச்சி. பிரதம மந்திரி எல்லாத்துக்கும் பொறுப்பு.

நான் ஒரு அமைதியான பேர்வழி. எல்லாருக்கும் தெரியும். ஒரு நாள் அதிபர் என்னைக் கூப்பிட்டு பிரதம மந்திரி பொறுப்பை ஏற்கச் சொன்னார். மறுத்துப் பழக்கமில்ல. நான் தயங்கினன்.

"ஏன் விருப்பமில்லையா?" அதிபர் கேட்டார்

"ஓம்"

ஏன்?

பிரச்சினைகளை என்னால சமாளிக்க ஏலாது" என்டன்.

"ஒரு பிரச்சினையும் வராது. எல்லாம் நாங்க பாத்துக் கொள்ளுவம்." என்டார் அருகில நிண்ட ராசதுரை. அப்பவே எனக்கு விளங்கிப் போச்சி. நான் பேருக்குப் பிரதம மந்திரி. எல்லாத்தையும் அவங்க நடத்துவாங்க. அதுக்குப்புறகும் எல்லாம் அப்படித்தான் நடந்திச்சி. என்னை நியமிச்சதை எதிர்த்து மாணவர்கள், வரிவுரையாளர்கள் எதிர்ப்புக் காட்டலாம் ஆனா அப்படியொண்டும் நடக்கல்ல. காரணம் என்ட குணத்துக் காகத்தான் எண்டு நினைக்கிறன்.

இரவு ஒரு ஒம்பதே முக்கால் முக்கால் இரிக்கும். ராசதுரையர் வந்தவர். அறைக்கதவில நிண்டு நோட்டமிட்டார்.

ஒரு இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ரெண்டாம் சுயகற்றல் வேளை வடிவேல் என்னிட்ட வந்து குசுகுசுத்தான், பகவான் நாங்க ரெண்டாம் சோவுக்குப் போறம் நீயும் வாறியா? "நான் வரல்ல"

"எச்.எஸ் சிட்ட சொல்லிப் போடாத வந்து கேட்டா சமாளிச்சுக்கோ" நான் ஒண்டும் பேசல்ல அவன் போயிட்டான். எனக்குள்ள ஒரே உறுத்தலாக இருந்திச்சி. வந்து கேட்டா என்ன சொல்லறது?

வடிவேல் கல்லாத்துப் பொடியன் சித்திரத்தில திறமைசாலி, குழப்படிக்காறன், ஆனா நல்லவன்.

என்னோட சோலி சொறட்டு ஒண்டுமேயில்ல. அவன் என்னை 'பகவான்' எண்டுதான் கூப்பிடுவான். மற்றெல்லாரும் "கிருஷ்ணா" எண்டுதான் கூப்பிடுவாங்க.

இரவு ஒரு ஒம்பதே முக்கால் முக்கால் இரிக்கும். ராசதுரையர் வந்தவர். அறைக்கதவில நிண்டு நோட்டமிட்டார். "கிருஷ்ணா எங்க சில ஆக்களக் காணல்ல? படுக்கிறனுகளா?" நான் வாய் திறக்கல்ல. விடுதிக்குள்ள போய்ப் பாத்தார். திரும்பி வந்தார். "ஒருத்தரையும் காணல்லையே எங்க ஆக்கள்?" "தெரியல்ல...." எண்டன்

நீர் பிரதம மந்திரி உமக்குத் தெரியாமா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் நான் அண்டைக்கே சொன்னேனே" எண்டு மெதுவாக நான் சொன்னது அவருக்குக் கேட்டிருக்க வேணும்.

" சரி, சரி. ஆக்கள் வந்தும் என்னை வந்து காணச் சொல்லும்

அடுத்த நாள் விடியமுதலே ராசதுரையார் வந்து விசாரணைக்காக அவனுகளைக் கூட்டிப் போனார். அவருட அலுவலகத்துக்குள்ள சத்தம் போட்டுக் கேட்டிச்சி. கொஞ்சம் நேரத்துல அவனுகள் சிரிச்சுக் கொண்டே வந்தானுகள்.

எண்டு போட்டுப் போய்த்தார். சுயகற்றல் முடிஞ்சி போய்ப்படுத்தம். எனக்கு நித்திரையே வரல்ல. ஒரு பன்னிரெண்டு மணியிருக்கும். சினிமாவுக்குப் போன வடிவேல் கோஸ்டி வந்திச்சி.

"பகவான் என்ன'எச் எஸ்' வந்தாரா? வாச்சர் கதவைப் பூட்டிப் போட்டுப் படுத்துத்தான் மதிலால பாஞ்சி வாறம்."

"தேவைதானா?" எண்டு கேட்ட நான், விடுதி மேற்பார்வையாளர் தன்னை வந்து காணச் சொன்னதையும் சொன்னன். அதைப்பத்தி அவனுகள் கவலையே படல்ல. படுத்துக் குறட்டை விடத் துவங்கித் தானுகள்.

அடுத்த நாள் விடிய முதலே ராசதுரையார் வந்து விசாரணைக்காக அவனுகளைக் கூட்டிப் போனார். அவருட அலுவலகத்துக்குள்ள சத்தம் போட்டுக் கேட்டிச்சி. கொஞ்சம் நேரத்துல அவனுகள் சிரிச்சுக் கொண்டே வந்தானுகள்.

என்ன நடந்திரிக்கும்? ஊகிக்க முடிகிறதா?

வடிவேலுக்கு மாத்திரம் நான் 'பகவான்' மத்த எல்லாருக்கும் நான் "கிருஷ்ணா" உடற்பயிற்சியாளர் தியாக ராசாவருக்கு நான் ஆர் தெரியுமா? அவருக்கு நான் 'புலவர்'. புலவர், புலவர் எண்டு தான் அவர் என்னைக் கூப்பிடுவார். அவர் மட்டுமில்ல. அப்ப ராஜா ஸ்ரூடியோ வச்சிருந்த நடராசாவரும் என்னைப் புலவர் எண்டு தான் கூப்பிடுவார். நான் ஆசிரியர் கலாசாலைக்குப் போகமுதலே மாணவப் பருவத்திலேயே கவிதை எழுதினவன். அதினால அவர்களுக்கு நான் புலவன் என்ட கவிதைகள் வீரகேசரி, சுதந்திரன் எல்லாத்திலயும் அடிக்கடி வந்துகொண்டேயிருக்கும். தியாகராசாவருக்கு என்னோட நல்ல விருப்பம். அதுக்கு மற்றொரு காரணம் யோகாசனப் பயிற்சி எனக்குத் தெரிஞ்சதுதான். எல்லாருக்கும் என்னை யோகாசனம் பழக்க விடுவார். பொடியனுகளுக்கு யோகாசனம் பழகிறதென்டால் பெரும் பாடு. பத்மாசனம் பழகவே பாடுபடுவானுகள். சிரசாசனமாமென்டா எப்பிடியிருக்கும்? கொழுத்த ஆக்கள் திடுதிடுமெண்டு விழுவானுகள். ஆனாலும் அவர் ஒருத்தரையும் உடமாட்டார். எப்படியும் பழகித்தான் ஆகவேணும். அடுத்தது மத்தளம் அடிக்க எனக்கு மட்டுந்தான் தெரியுமெண்டது. தியாகராசா மாஸ்டர் உடற்பயிற்சியோட மட்டும் நிற்கிறவரில்ல. நாட்டுக்கூத்து வசந்தன் கூத்து எல்லாத்திலயும் ஈடுபாடு கொண்டவர். அதனால வசந்தன் கூத்துப் பழக்கிறதுக்கு நான்தான் அண்ணாவியார்.

வசந்தன் கூத்தில பலவகையிரிக்கி. அதுல ஒண்டுதான் "முயிற்று வசந்தன்." ஒவ்வொரு வசந்தனுக்கும் ஒவ்வொரு தருவிருக்குது. முயிற்று வசந்தன் கரு

"தனந்தனாதன தானா -தன
தந்தனாதன தானன தான
தனந்தனதன தான..." என்டு வரும்.

அண்டம் உலா விய மாவில் -ஏறி
அங்குறு கனிகளை ஆய்ந்திடப் போனேன்.
சென்றேதிர் வருகுது முயிறு -என்
சிரசைத் துடையடி சேயிழை யாரே
தனந்த.....

வம்பவிழ் சம்புவில் ஏறி - அங்கு
வயங்கிய கனிகளை ஆய்ந்திடப் போனேன்.
கம்பி போல் வருகுது முயிறு -என்
கண்ணைத் துடையடி காரிகை யாரே
தனந்த.....

மந்தினெம்படி சென்றே - நல்ல
முந்திரி கைக்கனி ஆய்ந்திடப் போனேன்.
பந்தியாய் வருகுது முயிறு - என்
பழுவைத் துடையடி பைந்தொடியாரே
தனந்த....

அடுத்த நாள் விடிய முதலே ராசதுரையார் வந்து விசாரணைக்காக அவனுகளைக் கூட்டிப் போனார். அவருட அலுவலகத்துக்குள்ள சத்தம் போட்டுக் கேட்டிச்சி. கொஞ்சம் நேரத்துல அவனுகள் சிரிச்சுக் கொண்டே வந்தானுகள்.

எண்டு இப்படி பாட்டுப் போகும். கருவுக்கு ஏத்தபடி மத்தள அடி விழும். அதுக்கேத்தபடி ஆட்டம் நடக்கும். பாக்கச் சந்தோசமாயிரிக்கும். பாட்டக் கேக்கக் கேக்க நல்ல முசப் பாத்தி. இப்பிடிப் பல வசந்தன் வகைகளையும் பழக்கிறதில தியாகராசா மாஸ்டருக்கு நல்ல ஈடுபாடு. இப்படி ஆடக்க எடுத்த படமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிட்ட இருந்திச்சி. 1978 காத்திகை மாதம் வீசின சூறாவளியால எல்லாம் அழிஞ்சி போச்சி.

அந்த நாளில்ல பாட ரீதியான தனித்தனியாக சிறப்புப் பயிற்சி இல்ல. பொதுப்பயிற்சிதான். ஒரு தவனையில ஒரு மாதம் முழுக்க கற்பித்தல் பயிற்சி நடக்கும். பயிற்சிக் கால ரெண்டு வரிசமும் ஆறுதவணை தவணைக்கு ஒரு மாதம் அப்படியெண்டா ரெண்டு வரிசத்துக்கும் ஆறுமாதம் பள்ளிகளுக்குப் போய் படிப்பிக்க வேணும். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு வகுப்பையெடுத்து முழுப்பாடமும் ஒரு மாதம் முழுக்க படிப்பிக்க வேணும். இடைக்கிடை விரிவுரையாளர்கள் வந்து பாப்பாங்க. மாதம் முடிய, படிப்பிச்ச வகுப் பாசிரியரிடமிருந்து படிப்பித்தல் பற்றிய அறிக்கை ஒண்டும் வாங்கிப் போக வேணும். இந்தப் பயிற்சி மாத்திரமா? மாதிரிக் கற்பித்தலும் ஒரு தவணைக்கு ரெண்டுதடவை நடத்திக் காட்ட வேணும். அதுக்கெண்டு நகரத்துப் பாடசாலைகளில் இருந்து புள்ளைகளைக் கூட்டி வாறதும் திரும்பக் கொண்டுபோய் விடுறதும் கல்வி மந்திரியிட பொறுப்பு.

ஒரு பயிற்சி மாணவன் மாதிரிக் கற்பித்தல் நடத்தக்குள்ள ஏனைய பயிற்சி மாணவர்களும் விரிவுரையாளர்களும் பார்வையாளர்களாக இருந்து பாப்பாங்க. படிப்பித்தல் முடிஞ்சதும் குறைநிறைகளை ஏனைய பயிற்சி மாணவர்கள் சொல்லுவாங்க. படிப்பிச்ச மாணவன் அதுக்குப் பதில் சொல்ல வேணும். இறுதியில அந்தப் பாடத்துக்குரிய விரிவுரையாளர் நிறைவுரை நடத்துவார். வகுப்பு முடிவடையும். இப்படி நான் படிப்பிச்ச ரெண்டு பாடம் இப்பயும் நினைவிரிக்கி. ஒண்டு வரலாற்றுப் பாடத்தில கப்பலின் வளர்ச்சி அடுத்தது இலக்கியத்துல பாரதியாருட "காவென்று கத்திடும் காக்கை பாடல்"

நான் ஆனைப்பந்திப் பாடசாலையில கற்பித்துக்கொண்டிருந்த போது ஏற்பட்ட அதிர்ச்சி தரும் அனுபவம் அறிய ஆவலா?

நினைவு மலரும்...

இது புதுசு

புத்தாண்டின் புதிய இதழாக வளர்ச்சிபெற்று நிற்கும் எமது சஞ்சிகைக்கு வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. "இருக்கிறம்" சஞ்சிகை பற்றிய உங்கள் கருத்துக்களையும் வரவேற்கின்றோம். இலைமறைகாயாகவுள்ள எழுத்தாளர்களே!! எமது சமூகத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையிலமைந்த உங்கள் ஆக்கங்களையும் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமான மற்றும் ஏனைய வெளியீடுகளில் வெளிவராத உங்கள் சொந்த ஆக்கங்களை "இருக்கிறம்" நிச்சயம் வரவேற்கும்.

-ஆசிரியர்-

என்னைப் போன்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சி தொடர்பான விடயங்கள் சிறந்த பயனைத் தருகின்றன. இருக்கிறம் சஞ்சிகையில் உள்ளூராட்சி தொடர்பான விடையங்கள் வெளிவருவதையிட்டு நாங்கள் சந்தோஷமடைகிறோம்.

விஜயகுமார்
வாழைச்சேனை

இன்றைய சூழ்நிலைகளில் எங்களுடைய இருப்பு என்பதே கேள்விக் குறியாக இருக்கின்றது. அந்த வகையில் நாடளுமன்ற உறுப்பினர் சந்திர காந்தனின் நேர்காணல்கள் எங்களை சிந்திக்க வைத்தது. தகுந்த சமயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினருடைய நேர்காணலைப் போட்டு அசத்தி விட்டீர்கள். தொடர்ந்தும் இவ்வாறான சூடான பேட்டிகளை எதிர்பார்க்கின்றேன்.

மயில்வாகனம்
சாய்ந்தமருது

கிட்னி வியாபாரம் தொடர்பான கட்டுரை அதிர்ச்சியளித்தது. உண்மைகளை வெளிக் கொணந்தமைக்கு நன்றி. அத்துடன் நவீன தொழில் நுட்பத்தின் வளர்ச்சி தொடர்பான தகவல்கள் மிகப் பிரயோசனமாக இருக்கின்றன. இருக்கிறம் தொடர்ந்து இவ்வாறான ஆக்கங்களை பிரசுரிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

மாலினி
கொழும்பு

இன, மத, பேதமின்றி ஊடகவியலாளர் இந்நாட்டில் கொல்லப்பட்ட சகோதர மொழி ஊடகவியலாளர் ஒருவருக்காக இருக்கிறம் தனது நினைவுப் பகிர்வை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டமைக்கு துணிச்சலான பாராட்டுக்கள். தொடர்ந்தும் மெருகேறிவரும் இருக்கிறம் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதே எனது அவா.

தவசீலன்
யாழ் பல்கலைக்கழகம்

இப்படிச் சொல்லினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கம்!

ஒரு தமிழ்த் தாயின்

தீவிரமடையும் போர். தொடரும் இழப்புகள். பதிவு செய்யப்படும் அவலங்கள். இத்தனையையும் தாங்கும் எங்கள் மனம். தொடரும் இழப்புக்கள் எங்களை வேதனைப்படுத்துகின்றன. செய்வதறியாது திகைக்க வைக்கின்றன. ஆனாலும் நாம் உயிருடன் இருக்கின்றோம். இதுவே பெரும் தண்டனையாகிப் போன சூழலில்.

எங்களுக்குத் தான் அரசியல் தெரியாது. உப்புப் புளி பார்க்க மட்டும் தெரியும். ஆனால் சுற்றி நிகழும் அவலங்கள் கேட்டு பதைபதைப்பதற்கு எங்கள் மனதிற்கு எல்லையில்லை. சமாதானம் அமைதி எல்லாம் எங்கேயோ கேட்ட குரல்களாக மறைந்து கிடக்க எங்களுக்கான அவலங்கள் மட்டும் அப்படியே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

வேலைக்கு செல்லும் கணவர் பள்ளிக்கு செல்லும் பிள்ளைகள் திரும்பி பத்திரமாக வீடு சேர்ந்தால் மனம் மகிழ்கின்றது. குண்டுச் சத்தம் விமானச் சத்தம் கேட்டால் மனம் பீதியடைகின்றது. ஏன் வெடிச் சத்தத்திற்கும் அப்படித் தான். நித்தம் வரும் இறப்புச் செய்திகள் எங்களை

நிலை குலையச் செய்கின்றன. ஏன் எங்களுக்கு என்று இப்படியொரு மனம்?

இரும்பு மனம் என்ற ஒன்று உள்ளதாம். எதையும் தாங்கிக் கொள்ளுமாம். ஏன் எங்களுக்கு அப்படி விதிக்கப்படவில்லை? நாய்களை விட கேவலமாகும் மனிதனின் நிலையில் எப்படி மனதைத் தேற்றிக் கொள்ள முடிகின்றது சிலரால்?

போர் அங்கு நடந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் இங்கு தவிக்கின்றோம். எந்த நேரம் எதுவும் நடக்கலாம் என்ற அச்சம் எங்களை வாட்டுகின்றது. கருணாநிதியினால் சமாதானம் வராதா என்று என்னைப் பார்த்து ஒரு சிங்களத்தாய் கேட்டார் ஏக்கத்துடன். சிங்களவர்களின் புரிந்த அரசியலில் புரியாத ஆச்சரியமாக இருந்தது அந்த அப்பாவி தாயின் கேள்வி. போர்ப் புலத்தில் சண்டையிடுகிறார் அந்த தாயின் மகன். எந்த நேரம் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடன் அந்தத் தாய் இருக்கிறார்.

நம்பிக்கையை ஏற்படுத்தியவர்கள் கைவிட்டு விட்டார்கள். மீறி பேசிக்குரல் கொடுத்தவர்கள் முகவரியின்றி இருக்கின்றார்கள்.

எங்களுக்கு சமாதானம் வேண்டும் என்று குரல் கொடுக்க எங்களில் எவருக்கும் துணிவில்லை. துணிவைக் காட்டுவதற்கான அரசியல் சூழலும் இங்கில்லை. அப்படியான சூழல் இருப்பின் நாங்களே இங்கு ஏதாவது செய்திருக்கலாம்? ஏனெனில், வேதனைகளும் சோதனைகளும் எங்களுக்கே தெரிந்திருக்கின்றன. ஒரு உயிரின் மதிப்பினை எங்களை அன்றி வேறு யார் நன்கு அறிவார்?

எல்லா இடங்களிலும் மௌனம். அமைதி. மயான அமைதி. உரத்துக் குரல் கொடுத்தவர்கள் எல்லோரும் அமைதியை தழுவிக் கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கையை ஏற்படுத்தியவர்கள் கைவிட்டு விட்டார்கள். மீறி பேசிக் குரல் கொடுத்தவர்கள் முகவரியின்றி இருக்கின்றார்கள். நினைக்கவே ஏதோ ஓர் அச்ச நிலை. ஏதோ எல்லோரும் வாய்க்கு பூட்டுப் போட்டுக் கொண்டார்கள். ஆனால் எங்கள் அவலங்களைப் பேசுவது யார்?

மரத்திற்கு அடியில் கொட்டும் மழையில் குழந்தைகளை அணைத்துக் கொண்டு மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் எங்கள் பயங்கரங்கள் பற்றி யார் பேசுவார்கள். காயப்பட்ட வலியையும் மீறி தன் குழந்தையைப் பாதுகாக்க தலைத் தெறிக்க ஓடும் எங்களைப் பற்றி யார் பேசுவார்கள்? அல்லல் படும் எங்களைப் பற்றி பேசுவார்கள் என்பது சரியான எண்ண ஓட்டமா? தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வேளை உணவு காயத்திற்கு மருந்து, மானம் காக்க உடை, இவைக்கும் கையேந்தும் எங்கள் நிலை? கையேந்தி நிற்கும் நாங்கள் இவற்றைக் கேட்பது எங்களுக்காக அல்லவே? கடல் தாண்டி நிவாரணம் வரப் போகின்றதாம்? நிவாரணங்களுடன் உணர்வலைகளும் எங்களை நோக்கி வருகின்றன. எம்மைப் பற்றியும் கவலைப்பட இருக்கின்றார்கள் என்று மனம் சற்று ஆறுதல் அடைகின்றது. பரவாயில்லை.

வல்லரசில் புதிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. எங்கள் அவலங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை. இருப்பினும் நம்பிக்கைகள் வீணான வரலாறு எங்களுடையது என்பதை நாம் மறக்கவில்லை. பத்திரிகைச் செய்திகளில் ஏதேதோ வெளிவருகின்றன. கணிப்பீடுகள் அனேகம். முடிவுகள் விபரீதமாகாமல் இருக்க பிரார்த்திப்பதனைத் தவிர வேறு என்ன இருக்க முடியும். எங்கள் பிள்ளைகளை நாங்கள் காவு கொடுக்க விரும்பவில்லை. யுத்தத்தினை வழி நடத்துவோரே நீங்கள் உங்கள் பிள்ளைகளை கொடுங்கள்! நாட்டிற்காக தியாகம் செய்யக் கோரும் முக்கியஸ்தர்களே நீங்கள் என்ன தியாகம் செய்திருக்கின்றீர்கள்? தேசத்தைக் காக்கத் தான் இத்தனை முயற்சிகளும் என்று கூறுவோரே நீங்கள் அதற்காக என்ன செய்திருக்கின்றீர்கள்? செலவுகள் குறைத்து வசதிகளைக் குறைத்து உணவினைக் குறைத்து நாட்டிற்கு சேவை செய்யுங்கள் என்று கூறும் நாட்டுப் பற்றாளர்களே நீங்கள் அதற்காக என்ன செய்திருக்கின்றீர்கள்? இப்படி பல கேள்விகள் எங்களுக்குள் எழுந்தாலும் கொல்லும் திறன் அற்று இருக்கின்றோம். சொல்லியவர்களும் தற்போது இல்லை. எவ்வாறாயினும் எங்கள் கேள்விகளுக்கு வாய்ப்பு இரண்டாம் பட்சம் அல்லவா?

மூன்று வேளை உணவு என்பது அரிதாகி விட்டது. பாடசாலைகளில் மாணவர்கள் இல்லாத நிலை. பிள்ளையைக் காவுக் கொடுப்போருக்குத் தான் சலுகைகள். உணவு கேட்டு அழும் பிள்ளைகளைத் தேற்றும் தாய்மார்கள். தொடரும் அவலங்கள் அனைத்தும் எங்களுக்கானதாக இருக்கையில் வாழ்வது என்பதே பெரும் தண்டனையாகிக் கொண்டிருக்கின்றது.

-பிரியதர்ஷினி-

இஞ்சி பிஸ்கட்

தேவையான பொருட்கள்

கோதுமை மா - 1/4 kg
சீனி- 100g
மாஜரீன் - 100g
முட்டை- 1
கொக்கோ- 2.மே.கரண்டி
வேர்க்கொம்புத்தூள்- 2.மே.க
பேக்கிங் பவுடர்- 1 மே.க
சாதிக்காய் பவுடர்- 1/2 தே.க
வனிலா- 1 மே.க
பெரிய சீனி- 2 மே.க

செய்முறை

மாவுடன் பேக்கிங்பவுடர், கொக்கோபவுடர், வேர்க்கொம்பு தூள் என்பவற்றை சேர்த்து ஐந்து முறை அரித்துக் கொள்ள வேண்டும். பின்னர் பாத்திரத்தில் மாஜரினை போட்டு சீனியையும் சேர்த்து நன்றாக அடிக்க வேண்டும். அடித்த மாஜரின் கலவையில் முட்டையை ஊற்றி வனிலா, சாதிக்காய் தூள் என்பவற்றை சேர்த்து அடித்துக் கொண்டு அரித்த கோதுமை மாவை சிறிது சிறிதாகத் தூவி, கையில் ஒட்டாத பதத்திற்கு அடித்து பிசைய வேண்டும். பின்பு மாக்கலவையை தேசிக்காயளவு உருண்டைகளாக உருட்ட வேண்டும். பின்பு ஒவ்வொரு உருண்டையையும் வட்ட வடிவில் தட்டி மாஜரின் பூசிய தட்டில் இடை வெளிவிட்டு அடுக்கி ஒவ்வொரு பிஸ்கட்டின் மேற் புறத்திற்கும் பெரிய சீனியை தூவி, மெதுவாக சீனி பதியும் வண்ணம் கையால் அழுத்திக் கொள்ள வேண்டும். பின்பு பேக் செய்து, ஆறிய பின் பரிமாறினால் மிகவும் சுவையாக இருக்கும்.

சாப்பிட நல்லாயிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரத்து சிறு நண்பன்!

- மட்டுநில் குரங்குமாரன் -

கால்களைத் தழுவிய கடல் அலையின் ஈரம் மூலைவரையும் சென்று குளிர் ஏற்ற, முகிலெடுத்து வந்து ஒத்தடம் கொடுத்தது மாலைக்காற்று. கரையோரத்திலே கட்டியிருந்த படகொன்று அலையின் தாளத்துக் கேற்ப அபிநயம் பிடித்தது. தனது நான்கு வயது மகனோடு கடற்கரையோரமாக உலாப் போய்க் கொண்டிருந்தான் வசீகரன். வெளிச்ச வீட்டுக்கு முன்பாகவிருந்த ஹோட்டல் மணலில் இருந்தபடி சூரியன் மறைவதை விதம் விதமாக படம் பிடித்துக் கொண்டிருந்த வெள்ளைக்கார உல்லாசப் பயணிகளில் ஒருத்தி வருணனையும் தனது புகைப்படக் கருவிக்குள்ளே வாரிக் கொண்டாள்.

தகப்பனின் கைகளைப் பிடித்திருந்த வருணன் அவனது கைகளில் இருந்து விடுபட்டு கரையோரத்திலே குவிந்திருந்த சிப்பிகளை சேகரிக்கத் தொடங்கினான். எதிர்ப் பக்கமிருந்து கிழிந்த சட்டையோடு சிறுவன் ஒருவன் இவனிடம் வந்து கையை நீட்டினான். என்ன என்றான் வசீகரன்.. காசு குடுங்க அண்ணே என்றபடி தலையைச் சொறிந்து கொண்டு நின்றவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு என்னட்டை சில்லறை இல்லை என்றபடி அலட்சியமாக அவனை விட்டு விலகிச் சென்றான். அப்படி அவன் சொன்னதுக்கு ஒரு காரணமும் இருந்தது. இவனை மாதிரிப் பெடியளுகள் கடற்கரைக்கு வாற ஆக்களிடம் காசு வாங்கிக் கொள்ளுறதுக்காக ஏதாவது பொய் சொல்லுவாங்கள். பிறகு கையிலை கிடைக்கிற காசிலை பீடி சிகரெட் எண்டு வாங்கி சின்ன வயசிலையே கெட்டுப்போடுவாங்கள். இப்பிடி ஒரு சின்னப் பெடியன் கெட்டுப் போயிட ஏன் நானும் ஒரு காலாக வேணும் என்பதே இவன் வாதம்.

தும்பு மிட்டாயை வித்தபடிக்கு தூரத்திலே ஒரு வயோதிபர் கடற்கரை ஓரமாக வந்து கொண்டிருந்தார். கைகளிலே இருந்த மிட்டாய்ப் பெட்டியைக் கண்டவுடன் அவரை நோக்கி ஓடினான் வருணன். அந்த மனிதரது முகத்திலே முதுமை தனது முகவரியைப் பதித்து விட்டிருந்தது. இந்த வயசு போன நேரத்திலும் உழைத்துச் சாப்பிட வேணும் எனும் அவரது வைராக்கியத்தை பார்க்கையிலே அவனது தகப்பனின் பிடிவாத குணமே நினைவுக்கு வந்தது.

ஏனப்பா இன்னும் வேலைக்குப் போறீங்கள் என்று கேட்டால் "சுத்தும் வரை தான் தம்பி பூமி, உழைக்கும் வரை தான் மனிசன். சொந்த உழைப்பிலே சோறுண்ணும் சுகம் தான் சுகம்" என்று பெரிமிதம் கொள்வார்.

சரி அப்பா அதுக்குத்தானே அரசாங்கம் உங்களுக்குப் பென்சன் தருதே என்றால் பதில் பேசாது சிரித்துச் சமாளிப்பார்.அந்த வயோதிப மிட்டாய்க்காரனைப் பார்த்ததும் அவனது அப்பாவின் கொள்கைப் பிரகடனமே நினைவுக்கு வந்தது. மிட்டாய் வாங்கித் தருமாறு கையைச் சுரண்டினான், மகன். கைகளால் மிட்டாய்க் காரனைப் பார்த்ததும் அழைத்தான். முறுவல் ஒன்றை உதிர்த்தபடி அருகிலே வந்தவரிடம். என்னவிலை என்றான். பத்துக்கும் இருக்கு இருபது ரூபாய்க்கும் இருக்கு அவனது பதிலுக்காக முகத்தைப் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்து ரூபாவுக்கு ஒண்டு தாங்கோ ஐயா"

தும்பு மிட்டாய் பெட்டியில் இருந்து சிறிதளவை எடுத்து மடித்து மகனிடம் கொடுத்தார்.

தம்பிக்கு எந்த இடம் ..? காசை வாங்கிக் கொண்டே அவனிடம் கேட்டார் அந்தப் பெரியவர்.

யாழ்ப்பாணம் அய்யா. எப்பிடி வியாபாரம் நானா..? அவர் அணிந்திருந்த தொப்பி அவரை அவனுக்கு அடையாளங் காட்டியது. எங்கை தம்பி யாவாரம் முன்னைய மாதிரி இல்லை எல்லாம் படுத்திட்டுது. தமிழரும் முஸ்லிம்களும் வாழமுடியாத சூழல் வேறு யாருக்கும் கேட்டுவிடாத படிக்கு குரலைத் தாழ்த்திப் பேசினார்.

என் மகனுக்கு தும்பு மிட்டாய் எண்டா சரியான விருப்பம் ஐயா உங்களுக்கும் பிள்ளையள் இருக்கினமோ? தனது தந்தையைப் போல இருந்த படியினாலேயே அதைக் கேட்டான்.

இரண்டு பெண்ணுகளும் ஒரு பையனும், ஒரு பெண்ணைக் கட்டிக் கொடுத்திட்டன். ம் பாப்பம் அல்லா வழிவிடுவான். சரி நான் போய்த்து வாறன். ஏன்றபடி மிட்டாய் பெட்டியோடு கடற்கரை ஓரம் போய்க் கொண்டிருந்தார்.

இப்பொழுதெல்லாம் சனி ஞாயிறென்றால் மகனோடு கடற்கரைக்குப் போய் விடுகிறான் வாகீசன். மகனையும் கூடவே அழைத்துப் போவதற்கு இரண்டு கார்ணம் உண்டு 'ஒன்று' அவனது மகனுக்கு கடல் என்றால் பிடிக்கும். மற்றையது மகனோடு வெளியே சென்றால் பக்கத் துணையும் பாதுகாப்பும் அதிகமாகக் கிடைக்கும் என்பதும். இன்று விடுமுறை தினம் ஆனாலும் சனக்கூட்டம் குறைவாகவே இருந்தது. காரணம் எங்கோ நடந்த ஏதோ ஒரு அரசியல் அசம்பாவிதம். ஒரு கதவடைப்பு நாள் போல ஆரவாரமின்றி இருந்தது கடற்கரை. ஏங்கும் ஒருவரை மற்றவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்கள் இங்கே. பேரூந்திலும் தொடரூந்திலும் கடைத் தெருவிலும் இது தான் இப்போதைய இலங்கை நிலவரம். தட்டுத் தடுமாறி வேட்டி சட்டை வீபூதி, பூ, பொட்டோடு ஒருவர் வந்தால் அவர் கதை கூண்டோடு கைலாயம் போக வேண்டியதுதான்.

கடற்கரையோடு ஒட்டிய அந்த பாறையின் ஒரு பகுதி கடலுக்குள் மூழ்கி இருந்தது. பாறைக்கு அந்தப் பக்கம் மீன் பிடிப்படகுகள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. சிறுவன் ஒருவன் எந்தவித தயக்கமும் இன்றி இயற்கைக் கடனை கழித்துக் கொண்டிருந்தான்.

யாரோ பின்பக்கமாக சுரண்டவே திரும்பிப் பார்த்தான் அன்றொரு நாள் பிச்சை கேட்ட அதே சிறுவன் தான் இன்றும். கிழிந்த சட்டையோடு கலைந்த கேசத்துடன் காட்சி தந்தான். இம்முறை அவனைப் பார்க்கையிலே ஒரு அனுதாபம் ஏற்பட்டது. எதையோ சொல்வதற்காக அலைந்து கொண்டிருக்கிற அழகான அந்த அலையைப் போலவே அந்த சிறுவனின் முகத்திலும் ஏதோ கவலை புதைந்து போயிருக்கிறது என்பதை அவன் கண்களுக்குள் வசீகரன் கண்டு கொண்டான். அவனோடு பேச வேணும் போல ஒரு ஆர்வம் பிறந்தது. ஏன் தம்பி உன்னுடைய அம்மா அப்பா எங்கே? அவனுடைய கண்களை ஊடுருவினேன்.

அம்மா செத்துட்டா அப்பாவுக்கு இழுப்பு. சாப்பாட்டுக்கே கஷ்டமண்ணே! என்றவன் கண்களிலே கண்ணீர் துளிர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி உன்னோடை வீடு எங்கையிருக்கு சேரிப்பக்கமிருந்த திசையைச் சுட்டினான். வா வீட்டுக்குப் போய் வருவம் என்றபோது தயங்கினான். வில்லங்கமாக அவனையும் என் மகனை இழுத்துக் கொண்டு அந்தச் சேரியை நோக்கிப் போனேன். மூக்கைப் பொத்திக் கொண்டான் வருணன். பூவரசு மரத்துக்குக் கீழே படங்கால் போடப்பட்ட பந்தலுக்குக் கீழே இருமியபடி படுத்திருந்தான் ஒருவன். நோயால் அனுங்கிக் கொண்டிருந்தான். எலும்புக்கு மேலால் தோல் போர்த்தியிருப்பது போலவே அவனைப்பார்க்கத் தெரிந்தது. இவருதான் எங்கய்யா என்றபடி தகப்பனின் தலையைத் தடவினான் அவன்.

அய்யா. அய்யா என்று தகப்பனைத் தட்டி எழுப்பினான். அவரால் எழுந்திருக்க முடியாது இருந்தது. தலையை உயர்த்திப் பார்த்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான். என் மகனளவிலே ஒரு சிறுமியைக் காட்டி அவளைத் தங்கை என்றான். காலையிலே பேப்பர் பொறுக்கி வித்தாத்தான் மத்தியானம் வயிறு நிறையும். பின்னேரம் யாராச்சு பாவப்பட்டு ஏதாவது குடுத்தாத்தான் உண்டு. வெக்கம் வந்ததோ தெரியவில்லை குனிந்த படியே பேசினான். அப்ப பள்ளிக் கூடம். போய்க் கனகாலம் பேசைத்திறந்து உள்ள பணத்தை எல்லாம் கொடுத்துவிட்டு விடை பெற்றேன். பேசினதும் மனசினதும் பாரம் குறைந்து போயிற்று.

அதென்ன யுத்தக் கறையானுக்கு தமிழ்ச் சமுதாயம் மட்டும் தான் உணவாகிப் போனதோ...? வினாக்கள் பல எழுந்து வந்து அவன் உடலைச் சுற்றிக் கொண்டன.

ஒரு சில வருடங்களுக்குப் பின்னதாக அந்த இடத்திலே அவனது கால்கள் மிதக்கின்றேன். ஆமாம் இறந்து போன தாய் இழுப்பு வந்தே இழைத்துப்போன தகப்பனோடு அந்த சிறுவன் வசித்த அதே கடற்கரை தான். இப்போ நிறைய மாற்றங்களை உள்வாங்கி இருந்தது. எவ்வளவு சிரமப்பட்டு எங்கு தேடியும் கூட அந்தச் சிறுவனையோ அவனிருந்த குடிசை வீட்டையோ கண்டு பிடிக்க முடியவில்லை. அங்கிருந்து சுண்டல் விற்ற ஒருவனிடம் விசாரித்துப் பார்த்ததில் அந்த இடத்தைச் சுனாமி தின்று விட்டதாகவே சொன்னான். ஏமாற்றமாகவே இருந்தது. அந்த இடத்தினைக் கடந்து இப்போது போனாலும் கூட அந்தச் சிறுவன் எங்காவது தென்படுகிறானா என்றே வசீகரனின் கண்கள் அவனைத் தேடிப் பார்க்கும்.

முற்றும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நட்பே அன்பின் அத்திவாரம்

பெற்றோர்கள் தான் உலகம் என நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு, இந்த எல்லையைத் தாண்டி பறக்க சிறகுகளைக் தருபவர்கள் தான் நண்பர்கள். அவர்கள் தான் நம் உயரத்தை அளக்கும் அளவு கோலாக இருக்கிறார்கள். உள்ளங்களைப் புரிந்து கொள்ள எம்மை உவகையுடன் ஊக்குவிக்கிறார்கள். வாழ்வின் வெற்றி என்பது, நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலேயே தங்கியிருக்கின்றது. வாழ்வின் வெற்றி கூட அதுவாக இருக்கலாம். இந்தத் தேடல் எல்லோருக்கும் வெற்றியளிப்பதில்லை. எமது ஒவ்வொரு ஏற்றங்களுக்கும் தாமே ஏணியாக தம்மை அர்ப்பணிப்பவர்கள் தடம் மாறி தவறி விழும் போது கூட மண்ணில் விழ விடாது தமது கரங்களில் ஏந்திக் கொள்கிறார்கள். மீண்டும் தடம் பதிக்க தட்டிக் கொடுக்கிறார்கள். பூமியின் மீது புன்னகைப் பூக்களைப் படரவிட்ட அனைவருமே நல்ல நண்பர்களைப் பெற்றிருந்தார்கள். தவறான நண்பர்கள் கிடைத்தால் அந்த நிலமையைச் சொல்ல என் பேனா முனை தயங்குகிறது.

எல்லா உறவுகளும் நட்பில் முடிவதே, உறவுகளின் கடைசி அத்தியாயம். நாம் நல்ல உள்ளங்களைத் தேர்ந்த எடுத்து இதயத்தின் பள்ளங்களை இனிமையாக நிரப்ப முற்பட வேண்டும். தங்களை தங்களே நேசிப்பவர்கள் தங்கள் நண்பர்களை கண்ணாடியாகவே தேர்ந்தெடுக்கிறார்கள். காரணம் தாங்களே விம்பமாகப் பிரதிபலிக்கக் கண்டு மகிழ்கிறார்கள். அதாவது உங்கள் நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். கண்ணாடியைப் போல் வெளிப்படையாகவும் தூய்மையான அன்புடனும் இருக்க வேண்டும். உயர்ந்தவற்றை நேசிக்க வேண்டும்.

இவ்வாறு நேசிப்பவர்கள் தங்கள் நண்பர்களை ஓவியமாக நேசிக்கின்றார்கள். அவர்களிடம் தம்மை அனுசரிப்பதற்காக சிற்பமாகச் செதுக்கின்றார்கள். "வைராக்கியத்தை"க் கற்றுத் தரும் நட்பு வாய்க்கப்பெற்றவர்கள் விடா முயற்சியுடன் வீரமாய் வாழ்கையில் போராடுகிறார்கள். நாம் பழகுகின்றவர்கள் எல்லோரும் தோழர்களாக முடியாது. வசதியைப் பார்த்து நட்பு வரக் கூடாது. பொருளுக்காக உண்டாகும் போகம் அல்ல நட்பு. அன்பின் அஸ்திவாரம் எழுப்பப் படும் கோபுரம் தான் நட்பு. உண்மையான நண்பர்களானால் நாம் பூவாகும் போது நண்பர்கள் மெல்ல வருடும் தென்றலாக வேண்டும். அவர்கள் தீயாகும் போது நாம் குளிர் ஓடையாக வேண்டும். இவ்வாறான பண்புகளே மீண்டும் நட்பை உயிர் பெறச்செய்து வாழ வைக்கிறது இப்பூமியிலே.....



நண்பர்கள் நம் உலகத்தை வித்தியாசப்படுத்தி புது வரவாக எம்மை உலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும். ஆனால் ஒன்று அவர்களே உலகமாகக் கூடாது. நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்போம். பகிர்தலும், பரிமாறுதலும், பரவசங்களும் பழக்கங்களாகட்டும்.

எனது நட்பை
கடற்கரையில் எழுதினேன்
அலை அடித்துச்
செல்லவில்லை
படித்துச் சென்றது நான் தயார்!
நண்பர்களே!
நீங்கள் எப்படி...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல்... காதல்... என எங்கே எப்போது பார்த்தாலும் காதல் இருந்து கொண்டே இருக்கிறது. காதலின் துடிப்பு தான் பூமிப்பந்தை இயங்க வைக்கிறது. சினிமா, தொலைக்காட்சி, நாவல், பத்திரிகை என்று அனைத்து ஊடகங்களையும் இயங்க வைக்கும் அடிப்படைக் காரணியாக இது அமைகிறது. காதல் என்பது இன்றைய நவீன யுகத்திலும் இளைஞர்களை இயக்கும் தாரக மந்திரம் என்பது மறுப்பதற்கில்லை.

சரி காதல் என்றால் என்ன? விஞ்ஞான ரீதியாக நோக்கினால் உடலில் ஏற்படும் ஹோமோன் மாற்றங்களின் செயல்பாடுகள் தான். இது ஈஸியான பதில் கூட வேறு சிலரோ " வேறு வேலையில்லாத் தொழில்" என்பார்கள். உண்மையில் காதல் என்பது நம்பிக்கை. அன்பு, நட்பு, பொறுப்பு, புரிந்துணர்வு என்ற ஐந்து தூண்களின் மீது அமைக்கப்பட்ட அழகிய பளிங்கு மாளிகை காதலில் பொறாமை, நம்பிக்கையீனம், சுயநலம் போன்ற வியாதிகள் இருக்காது.

காதல் என்பது உங்கள் இதயத்தை அப்படியே மற்றவரிடம் எவ்வித நிபந்தனையும் இல்லாது தூக்கிக் கொடுப்பதாகும். இதயம் அங்கே பத்திரப்படுத்தப்படும் என உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். காதலில் இருப்பவர்கள் சந்தோஷமாக ஆணித்தரமான நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால் காமத்தில் விழுந்தவர்கள் தங்களைப் பார்ப்பதற்கு கூட அருவருப்பார்கள். இதுவே யதார்த்தம். காதல் எதையும் கேட்காது, கேட்காமலே எதையும் கொடுக்கத் துணியும்.

மனதிலும் உள்ளத்திலும் புது அழகு தேங்கிக் கிடந்து தேடிக்கொண்டிருக்கும் எதை எதையோ யெல்லாம் அப்போது கண்ணுக்கு தெரிவதெல்லாம் அழகாகவும் வர்ணிப்பதற்குரியனவாகவும் தோன்றும். அனைத்தும் உங்களுக்கே உரித்தானது நான் அதை செய்தாலோ எடுத்தாலோ என்ன? என்ற எண்ணம் கூட உள்ளத்தில் உருளும் மிகவும் உற்சாகமானதும் அதே வேளை இக்கட்டான சூழ் நிலையிலும் மாட்டிவிடும் காலகட்டப் பருவம். காதலில் மிகவும் அவதானம் தேவை.

ஸ்கூல், கம்பஸ், அலுவலகங்களில் ஆண்கள், பெண்கள் இருவரும் நட்புக்கொள்வார்கள். இந்த நட்பில் நல்ல நம்பிக்கை வேரூன்றியிருக்கும்

நீங்கள் எந்த வகை?

இதில் எல்லோரும் காமத்துடன் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இங்கு அன்பும் இருக்கும் பொறுப்பும் இருக்கும் ஆனால் இது உண்மைக்காதல் இல்லை எனலாம். அதிதீவிரமாகக் காதலில் இறங்குபவர்களும்உண்டு. இவர்களுக்கு சமூகம் பற்றி அக்கறை இல்லை. முழு நேரத்தையும் காதலுக்காகவே

முதல் பார்வையில் காதல் என்பது பெரும்பாலும் டீன் ஏஜ்வயதில் ஏற்படும். இது முக்கியப்படுத்துவது முக அழகையும் எதிர்பாலாரின் செயற்பாடுகளையும் தான். பருவமடைந்த காலங்களில்

"நவநாகரீக உலகில் காதல் என்ற போர்வையில் வணிகம் செய்யாதீர் வாலிபத்தை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிடுவார்கள். இங்கு காமமும் இல்லை. எதிர்கால நோக்கும் இல்லை. அப்போது இது உண்மைக் காதலாகவும் இருக்காது. சிலர் பொழுது போக்கிற்காக காதலிப் பவர்கள். காரணம் தன்னைப் பற்றி சுற்றத்தில் உள்ளவர்கள் பெருமை யாகக் கதைப்பார்கள் என நினைத்து போலி முகமூடி அணிவார்கள் காத லுக்காக இங்கு பொறுப்பு என்ற சொல்லுக்கு இடமே இல்லை. உண் மைக்காதல் துளிர்விட சாத்திய மில்லை.

முட்டாள் தனமாகக் காதலிப் பவர்களும் இருக்கிறார்கள். அதா வது எவ்விடத்திலும் பொருந்தாக் காதல். பெரிய ஸ்டார்களை விளை யாட்டு வீரர்களை,சுப்பர்மான்களை அதிதீவிரமாகக் காதலிப்பார்கள். பலர் தமது காதலை சொல்லாமலே மனதில் பூட்டிக் கொள்கிறார்கள். இது ஒரு வகையான குருட்டுத்தன மான காதல் தான் என்றுமே நிஜமா காது நினைவிலிருக்கட்டும். இங்கு உண்மைக்காதலுக்கு இட மில்லை.

உறவுகளுக்குள் சிலர் மீது காதல் இருக்கும். இங்கே பொறுப்பும் சேர் ந்தே இருக்கும், விசுவாசம் இருக்கும் அத்துடன் நம்பிக்கையின் உச்சக்கட் டத்தைப் பார்க்க முடியும். ஆனால் காமத்திற்கான வாசல் நிரந்தரமா கவே அடைக்கப்பட்டிருக்கும். இதனை அன்பு என்றுதான் வரை யறுக்கலாம். காதல் எனப் பொருள் பட முடியாது.

இயைபான காதல் முதலில் நம்பிக்கையுடன் தான் தொடங்கும். பொறுப்புணர்வு தான் அச்சாணி யாக இருக்கும். அதன் பின்னரே காமத்திற்கான சாரல் தூறத் தொட ங்கும். இக்குணங்களும் சமவிகிதத் தில் கலக்கப்படுமானால் இங்கு நிச்ச யமாக உண்மைக்காதலுக்கான கரு உருவாகிறது. காதலுக்கும் காமத்திற் கும் பெரிய அளவில் தொடர் பில்லை.



நட்பும் காதலும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் எங்கு வேறு படுகிறதென்றால் எந்தப்புள்ளியில் பொறுப்பு அதிகமாகிறதோ அந்தப் புள்ளி காதல் எனும் தொடர் கதையை வரைகிறது. ஆனால் இர ண்டுக்கும் இடையில் வித்தியாசம் மயிரிழைதான்.

முதல் பார்வையில் காதல் வர வேண்டும் என்பது விதி அல்ல ஆரம் பத்தில் பிடிக்காதவர்கள் கூட பழ கும் சூழ்நிலைகளினால் காதலர்கள் ஆகக்கூடும். அழகான இருவருக்குத் தான் காதல் வரும் என்றில்லை. இது எவருக்குள்ளும் நுழையக்கூடும் ஏதோ ஒரு வழியாக வந்தபின் தான் தன்னை வெளிப்படுத்திக் கொள் ளும். அது வரை உயிரைப் படாத பாடு படுத்தும். முதல் பிரசவத்தை விட வலியானது ஆனால் அதை விட சந்தோஷமானது. அடிக்கடி சந் திக்காதவர்களிடம் காதல் தோன்று வதற்கு சாத்தியம் குறைவாகவே உள்ளது. எப்போதும் ஏதோ விதத் தில் சந்தித்து கொள்பவரிடம் ஏதோ விதத்தில் காதல் உள்ளிறங்கத் தொட ங்குவதற்கான சாயல் காணப் படுகிறது. ஆனால் இன்றைய அவசர உலகத்தில் இருந்து சாப்பிடக்கூட நேரமில்லாத போது காதலும் அந்த நிலையில் தானே இருக்கும். கண்ட தும் காதல்.. என்ற போக்கில் பொழுது போக்கிற்காகவே போகி றது. இது இறுதியில் உண்மையாகா விடில் உயிரைத் திருடி விடுகிறது. இது மிகவும் நகரங்களில் தனது



வித்தையை இளைஞர் உள்ளங்களில் வதைத்த வண்ணம் இருக்கிறது. அதற்கேற்றபடி சிந்திக்காத இளை ஞர்களும் சிந்தனைகளை தொலை த்து தம்மை அதற்கே அடிமையா குகிறார்கள். இப்படியான காதல் மெல்ல மெல்ல கிராமங்களையும் தனக்கேற்றபடி கிள்ளிப் பார்க்க நினைக்கிறது. இதுவே நிதர்சன உண்மை.

இப்போது சொல்லுங்கள் உங் கள் காதலின் நிலை எனது எந்த வரிக ளில் வந்து சேர்கிறது???

ஸ்தமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலைக்கு தூண்டும் தொலைக்காட்சித் தொடர்கள்

ஒரு நாள் மாலை நேரமிருக்கும் நான் ஒரு விருந்தினர் வீட்டை போயிருந்தேன். அப்போது அவர் கள் T.V ஐ தரிசனம் செய்து கொண் டிருந்தார்கள். பார்த்தேன் T.V யில் மெகா சீரியல் போய்க் கொண்டிருக் கிறது. ஒரு நிமிடத்திற்குள் எனக்கு தேநீர் தந்து விட்டு மீண்டும் உட் கார்ந்து விட்டார். அப்போது அவரு டைய மகள் ரியூசனுக்கு சென்றி ருந்தார். நான் வெளிக்கிடும் நேரம் வந்துவிட்டது. நான் மெல்ல எழு ம்ப, வீட்டு calling bell அடித் தது.கதவை திறக்கும் போது அவரின் மகள் ரீயூசனால் வந்து -கேட்ட கேள்வி " செல்வியில் என்ன நடந் தது? இன்றைக்கு வேளைக்கு விடு வார் என நினைத்து Early ஆக எல்லாம் செய்து முடித்ததும் மனுசன் டைமுக்குத்தான் விட்டது. எனக்கு கோபம் தான் Master மேலே வந் தது. இண்டைக்கு Missed செல்வி என் றாள். 8 ஆம் ஆண்டு படி க்கும் அந்த சின்னப்பெண் அந்தக் கணம் தான் உணர்ந்தேன். இந்த நாடகங்கள் இவ்வளவுக்கு போதை யூட்டுவன வாக இருக்கிறதே என்று ஹேரோ யின், கஞ்சாவை விட மோசமா னவை!!

நாடகங்கள் திரைப்படங்கள் தயாரித்து வெளியிடுவதன் பரந்த நோக்கம் சமூக சீர்கேடுகளைக் குறைப்பதும், சமூகத்தை நல்வழிப் படுத்த தீயவற்றைக் கழைவதுதான். ஆனால் இன்று அப்படியா? இல் லவே இல்லை. இப்படியான ஒரு குறிக்கோள் எந்த ஒரு நாடகத்தி லும் காண வில் லை . இன்று வரை இன் றை ய மெகா சீரியல்கள் சமூகக் கட்டுக் கோப்புகளை நடிப்பு வேடத்தால் அ வி ழ் த் து இ தை ப் பு ரி யா து திணறுகிறது இன்றைய சமூகம். இந்த நாடகங்களில் யார்தான் மோகம் கொள்ளவில்லை. சிறியவர்முதல் பாட்டிமார் வரை இது தான் கதை. செல்வியில் அவள் இப்படி செய்தாள் லஷ்மியில் அவன் 2ம் கலியாணம் பண்ணி விட்டான். இப்படியான நாடகங்கள் எப்படி ஆழமாக வேரூன்றின் என்று கேள்வி எழுப் பினல் இது தான் விடையாகிறது.

நாடகங்களில் வரும் வக்கிரமான சம்பவங்களை உங்கள் மூளைக்கும் இதயத்திற்கும் எடுத்துச் செல்லாதீர்

இன்று எல்லோரும் தங்கள் வேலைகளை அரைகுறையாக முடி த்து விட்டு செய்த பாதி செய்யாத பாதியில் ஓடி வந்து time க்கு t.v முன்னால் வந்து அதற்கு முக்கியத் துவம் கொடுத்து உட்காருவதுதான் மாபெரும் தவறு ஒரு விஷயத்துக்கு நாம் எவ்வளவு க்கு எவ்வளவு முக் கியத்துவம் கொடு க்கிறமோ அதுவே எம்மை அடிமைப் படுத்திவிடும். ஒரு விதத்தில் அடி மைத்தளம் கூட இதற்குக் காரண மாகிறது எனலாம். நடைமுறைக்கு புறம்பானவற்றையெல்லாம் நாட கங்களில் காட்டும் போது போலி எது என அறியாது ஏமாறுகிறது இன் றைய சமூகம். நினைக்கவே வேத னையாக உள்ளது.

நாடக நடிகர்கள் தமது வருமா னத்துக்காகவும் பொழுது போக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவும் இவ்வாறு நடிக்கிறார்கள். ஆனால் அதனைப் பார்ப்பவர்கள் வெறும் பொழுது போக்காக பார்த்து விட்டு செல்வதில்லை அதற்கு உயிர் கொடுத்து உண்மை போல அதற்கு உருவம் கொடுக்கிறார்கள். தமது வாழ்க்கையில் நடப்பது போல் உணர்கிறார்கள். இவர்களுக்கு எவ்வாறு பாடம் புகட்டுவது?

நாடகங்களில் பயன்படுத்தும் தந்திரமுறைகள், சூழ்ச்சி முறைகள், கொடுமையான சூழ்நிலைகள் இவற்றையெல்லாம் தயாரிப்பாளர் தயாரித்து வழங்குவதன் நோக்கம் நாடகத்தை சுவாரசியமாகக் கொண்டு செல்வதற்கான உபாய முறை ஆகும் ஆனால் சிலர் இவற் றையெல்லாம் பார்த்துவிட்டு தமது குடும்ப உறவுகளில் இவற்றையெல் லாம் செய்யப் பார்க்கிறார்கள். இதனால் சிலரின் குடும்பங்கள் பிரச்சினைகள் பிரிவுகளை எதிர்நோக்குகின்றன. உறவுகள் சின்னாபின்னாமாக சிதறுகின்றன.

நாடகங்களில் வரும் சில கொடுமையான, சோகமான காட்சிகள் சிலரை தற்கொலை செய்யக் கூடத் தூண்டுகிறது. பார்த்தீர்களா! மெகா சீரியல் உங்களின் வாழ்க்கையை வளப்படுத்தாது உங்களை வாழ விடாமல் செய்து விடுகிறது. நாடகங்கள் மீது உள்ள மோகத்தைக் குறைப்பதற்கான வழி முதலில் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதை மெது மெதுவாக குறைக்க வேண்டும். தொடர் நாடகங்களை பார்ப்பதை தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நாடகங்களைப் பார்ப்பதால் வீட்டில் உள்ள சிறியவர்களும் சேர்ந்து உட்கார்வார்கள். அவர்களை " போய்ப் படி என்று விரட்டாதீர்கள்" முதலில் நீங்கள் பார்ப்பதை குறையுங்கள். சிறியவர்களின் படிப்பும் நாடக வெறியால் பாழடைகிறது. பெரியவர்கள் தவிர்க்கும் போது சிறியவர்களும் நாடகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். நடிப்பு, நாடகத்தை பார்ப்பது வெறும் பொழுது போக்காகவே கருதுங்கள்.

நடிப்புக்கு உயிர் கொடுக்காதீர்கள். நாடகத்தை பார்த்து விட்டு கண்ணோடு கழற்றி விடுங்கள். மூளைக்கும் இதயத்துக்கும் எடுத்து செல்லாதீர்கள். அன்பான நாடகப் பிரியர்களே!!!

•ரொஷானி•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நினைவின் பதிவு...

கு.முத்துக்குமார்

மகனே!
நெருப்பெரியும் தேசத்தை எண்ணி
நெருப்பில் எரிந்தவனே!
உன் மேனியில் மூண்ட நெருப்பு
உன்னை எரித்ததாய் சொல்லுகின்றார்
நீ எரிந்தவன் அல்லன், விரிந்தவன்.
சின்ன அக்கினிக்குஞ்சே!
உன் நெஞ்சிலிருந்த நெருப்பால் எரிந்தாய்
அந்தச்சோதிப் பெருவெளிச்சம்
எமக்குச்சக்தி தரும்
வையவாசலை எமக்காகத் திறக்கச்செய்யும்.
உன் இறுதி மூச்சு
புயலாகித் தமிழ்நாட்டைப் போட்டுலுப்பும்.
எல்லோருக்கும் சாவு வாழ்வின் இறுதி
உனக்கு மட்டுமே சாவு தொடக்கமானது.

நன்றி : தாயகத் தமிழ்

எரியும் நினைவுகள்

தென்னாசியாவின் சிறந்த நூலகமாகப் போற்றப்பட்டு ஆவணங்களின் தொகுப் பாய் பேணிப் பாதுகாக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு 28 வருடங்கள் உருண்டோடிவிட்டன. யாழ்நூலக எரிப்பு பற்றி சோமிதரன் என்ற இளைஞனின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் எரியும் நினைவுகள் என்ற விவரணப் படம். ஆவணப்படுத்தலின் அவசியம் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெறுகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறது.

'இருக்கிறம்' சஞ்சிகைக்காக இந்தியாவிலிருந்து சோமிதரன் வழங்கிய நேர்காணல் இது.

திரைப்பட உலகத்துக்குள் உங்களுடைய பிரவேசம் பற்றி கூறுங்கள்?

இந்த யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்படுறத்துக்கு பத்தொன்பது நாளைக்கு முதல் தான் நான் பிறந்தேன். ஆகவே போரிற்குள் பிறந்த தலைமுறை நான். அதற்குப்பிறகு யாழ்ப்பாணத்தில் பிரச்சனை அதிகரிக்கவும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பிற்கு போனோம். மட்டக்களப்பிற்கு போனதன் பிறகு மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு வந்தோம். கொழும்பில் ஊடகவியலாளராகனேன். பத்திரிகையில் வேலை செய்தன். அதன் பிறகு ஆவணப்படம் மீதான ஒரு visual media visual revoluation வந்துட்டுது. visual revoluation வந்ததற்கு பிறகு Print இலிருந்து visual க்கு வரோணும் என்று visual media படிக்கிறத்துக்காக அதற்கு முதல் bbc சில ஆவணப் படங்களோட வேலை செய்தேன். வேலை பண்ணிட்டு அங்கிருந்து தமிழ்நாட்டில் இந்த media Cologe இல் visual Cominication படிக்க ஆரம் பிச்சன்.



ஆவணப் படம் எடுக்கவேண்டும் என்ற சிந்தனை உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

உண்மையில் இலங்கையில் இன்றைக்கு வந்த போரினால் பல்வேறு விடையங்கள் ஆவணப்படுத்தாமலே போய்க்கொண்டு இருக்கு. முதல் வேளை ஒவ்வொரு விடயத்தையும் ஆவணப்படுத்தி ஆகணும். அது போர் சம்பந்தமான விஷயமாக இருந்தாலும் சரி எங்களுடைய பண்பாடு கலை தொடர்பான விடையமாக இருந்தாலும் சரி எங்களுடைய சூழலாக இருந்தாலும் எந்தவொரு விஷயமுமே ஆவணப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற ஒரு விஷயம் நாளைக்கு இல்லை. சில விஷயங்களில் இருந்து தான் எனக்கு ஆவணப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் வந்தது.

இங்க வந்ததற்கு பிறகு எனக்கு cinema film documentary என்ற பல் வகைப்பட்ட திரைப்படம் குறித்த கல்வியை கற்கக்கூடிய மாதிரி இருந்தது. அதே நேரம் பலதரப்பட்ட ஆளுமைகளையும் சந்திக்க கூடிய மாதிரி இருந்தது. இதெல்லாம் சேர்ந்து ஆவணப்படத்தை இயக்குவதற்கான ஒரு வழிகாட்டுதல். சினிமா படம் எடுக்காம ஒரு ஆவணப்படம் எடுக்கோனும் என்ற தேவை என்னென்றால் என்னுடைய மண் என்னுடைய நாட்டுக்கு தேவையான விடயம் சினிமா இல்லை. உடனடியா ஆவணப்படம் நம்மட ஒவ்வொரு விடயத்தையும் ஆவணப்படுத்தி ஆகனும். அதுதான் நமக்கு தேவை. அப்ப ஒரு திரைப்படத்தையோ அல்லது குறம்படத்தையோ வந்து ஒரு 10 வருடத்துக்கு பிறகு எடுக்கலாம். 20 வருடத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு எடுக்கலாம். அனால் ஒரு ஆவ ணப்படத்தை இன்றைக்கு எடுக்க வில்லை என்றால் இந்த அவணப் படத்தை நாம் என்றைக்கும் எடுக்க முடியாது.

எரியும் நினைவுகள் என்ற இந்த ஆவணப் படம் பற்றி கூறுங்கள்?

யாழ்ப்பாண நூலகத்தினுடைய எரிப்பு என்பது தான் இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போரினுடைய முதல் பெரும் சம்பவமாக இருக்கி ன்றது. தமிழர்களுக்கும் சிங்களவர்க ளுக்கும் இடையிலான ஒரு பிரிவை இனமுரண்பாட்டை வெளிச்சம் போட்டுக்காட்டக்கூடிய முதல் சம்ப வமாக இருக்கின்றது. மற்றது வன் முறை எந்த இடத்தில் உருவாகின் றது என்று பார்த்தால் இன்னொருவ ருடைய வரலாற்றை அல்லது எங்க ளுக்கும் உங்களுக்கும் சொந்தமான ஒரு பொதுமையான விடயத்தை அளித்தலின் மூலமே ஆரம்பிக்கின் றது. இலங்கையிலிருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் ஒரு பொதுமை படுத்தப்பட்ட நூலகம். என்னுடைய படத்தில் வந்து அதை நான் தெளி வாக சொல்றன். அதில் பேசுறவங்க கூட சொல்றாங்க. தமிழர்களாகட் டும் சிங்களவர்களாகட்டும் முஸ்லிம் களாகட்டும் எல்லோருமே நூலகத் தைப்பற்றி அதன் எரிப்பினுடைய வலியைப்பற்றி பேசுகிறார்கள். ஆகவே நூலக என்பது ஒரு நீண்ட போரினுடைய ஆரம்பத்தில் நிகழ்ந்த நூலக எரிப்பு என்பது ஒரு நீண்ட போரினுடைய அழிவுக்கான ஒரு கட்டியம் குரலாக அமையும். ஆகவே இந்த சமாதானம் பற்றி பேசக்கூடிய இந்த நிலையில் போர் அதிகமடைந்து அழிவுகள் உச்சமிருக் கக்கூடிய நிலையில் வந்து நாங்க எங் கட அடிப்படையான விஷயத்தைப் பற்றி பேசணும் என்று நினைச்சன். ஆகவே நாங்க எந்த ஒரு மோசமான அழிவிலே நாங்க இந்த போரை ஆரம்பிச்சிருக்கம் என்பதை இலங் கையர் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நூலகம் வந்து தனி ஒரு நப ருக்கு சொந்தமானதல்ல. அது இலங் கையருடைய அடையாளம். அது எரிக்கப்படுகின்ற போது தென்கிழக் காசியாவின் மிகப்பெரிய நூலகங்க ளுள் ஒரு நூலகமாக இருந்தது. ஆகவே தென்கிழக்காசியாவில் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக இருக்கின்றது என்பது இலங்கையினு டைய பெறுமதியை காட்டுகின்ற ஒரு விடயம். இலங்கையினுடைய அடையாளங்களில் ஒன்று. அப்ப நமது போரில் இதைப்போன்ற எத்த னையோ அடையாளங்கள் அழிக் கப்பட்டுக் கொண்டு வருகிறது. அப்ப இந்த நூலக எரிப்பென்பது முதல் அழிக்கப்பட்ட ஒரு அடை யாளம். இலங்கையில் நீங்கள் இருந் தபொழுது ஏனைய இனத்தவர்களு டனான உறவு எப்படியிருந்தது? இப் பொழுதும் அவர்களுடன் உறவு களைப் பேணிவருகின்றீர்களா?

நானும் என்னுடைய சிங்கள நண்பர்களும் சாவகாசமாக கொழு ம்பு வீதிகளில் பேசுவதற்கான சூழல் இல்லை. ஒரு இடைப்பட்ட சமா தான காலத்தில் அந்த வாய்ப்பு இருந் தது. கொழும்பில் இருக்கக்கூடிய நானும் என்னுடைய சிங்கள நண் பர்களும் வீதிகளில் சுதந்திரமாக நட ந்து திரிந்தம். கொழும்பினுடைய பல தேநீர்க்கடைகளில் நாங்க ஒன் றாக சாப்பிட்டம். என்னுடைய முஸ்லிம் நண்பர் வீட்டுக்கு நானும் என்னுடைய சிங்கள நண்பரும் ஒன்றாக போயிட்டு வந்தம். ஒரு சொற்பமான சமாதானம் நடந்த காலத்தில் இவ்வளவு விஷயம் நாங்க அனுபவிக்கிறம் என்று சொன் னால் ஒரு போர் எவ்வளவு விஷயங் களை எங்களிடம் இருந்து பறிச்சி ருக்கு. இது ஒரு தமிழராக எனக்கு மட்டும் நிகழுகின்ற விஷயம் இல்லை. முழு

இலங்கையருக்கும் எல்லோருக்கும் நடக்கிற விஷயம் தான். தமிழருக்கு மோசமாக இருக் கும். யுத்தம் தான் நானும் என்னுடைய தலைமுறை யும் என் னுடைய பண்பாட்டையும் என்னுடைய மண்ணையும் என்னு டைய நிலத்தையும் என்னுடைய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் சூழலையும் விட்டு எங்கெங்கோ ஓட வச்சுகொண்டிருக்கு. இந்தப்போரால சிங்கள திரைப்பட இயக்குனரோட சேர்ந்து எங்களுக்கு வேலை செய்ய முடியாமலிருக்கு. அங்க போய் நான் படம் பண்ண வேண்டும் என்று நினைக்கிறேன். என்னுடைய மண்ணை என்னுடைய மக்களை படம் பிடிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எங்க முடியுது.

இப்பொழுது நடைபெற்று வருகின்ற யுத்தம் உங்களுடைய கலைத்துறையில் எவ்வகையான தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கின்றது?

என்னால் போய் வந்து நுவரெலியாவில் ஒரு படத்தை கொடுக்க முடியுமா? இந்தியாவிலிருக்கின்ற பல்வேறு இடங்களுக்கு நாங்கள் போறம். அங்க இருக்கின்ற மக்களுடைய பிரச்சனைகளை பற்றியெல்லாம் பேசுறம். அங்க இருக்கிற சூால்களின் பிரச்சனைகள் பற்றி பேசுறம்.ஆனால் இலங்கையிலிருக்கின்ற சூழ்நிலை பிரச்சனை பற்றி பேச முடியுமா? இந்தியாவில் பல்வேறு வளங்கள் இல்லையென்பதை பற்றி நாங்கள் ஆவணப்படம் எடுத்து கொண்டிருக்கம். நானும் இன்னொரு நண்பரும் ஆனால் இன்று நுவரெலியாவிற்கு வரக்கூடிய சூழலில் மாசுக்களை உள்ளடக்கக்கூடிய பல்வேறு இரசாயன நிறுவனங்கள் நுவரெலியா பக்கமும் கண்டி பக்கமும் போறாங்க. அங்க இருக்கிற வளம் காலியா போய் கொண்டு இருக்கு. இதை நாங்க படம் பண்ண முடியுமா? ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து போயிருக்கிற மக்கள் அனல்மின் நிலையத்தால் ஒட்டுமொத்தமாக அந்த மண்ணினை விட்டு ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். இதைப் பற்றி பேச முடியுமா? போரைப் பற்றி பேசவேண்டும் என்று சொல்லவில்லை. போர்தவிர்ந்த இன்னும் பல விஷயங்கள் இருக்கு. இதைக் கூட பேசமுடியாத சூழ்நிலையில் எது உருவாகியிருந்தது என்றால் போர். எதைப்பற்றி பேசினாலும் அது போராக தொடர்புடையதாக காணப்படக்கூடிய சூழல் இருக்கு. ஆகவே ஒரு சுதந்திரமான இயங்கு

நிலைக்கு என்னையும் சார்ந்த நண்பர்களையும் போர் வேலை செய்ய விடவில்லை. உண்மைதான் பிரசித்தி பெற்ற பழம் பெருமை வாய்ந்த யாழ் நூலகம் எரிக்கப்பட்டது பலருக்கும் வேதனை கொடுத்த ஒரு நிகழ்வு. பழைய நூலகம் இருந்த அதே இடத்தில் நூலகம் எரிக்கப்பட்டதற்கான அடையாளங்களை முற்றிலும் மறைத்து புதிய நூலகத்தை கட்டி எழுப்பியதன் மூலம் வரலாற்று சாட்சியம் ஒன்றை அழித்து விட்டார்கள் என்பது பலரது ஆதங்கம். ஆனால் சோமிதரன் தனது இந்த விவரணப் படம் மூலம் அந்த சாட்சிக்கு உயிர் கொடுத்திருக்கிறார்.

நேரடியாகவும் மறைமுகமாகவும் நாம் எமது அடையாளங்களையும் வரலாற்று சின்னங்களை அழிந்துகொண்டிருக்கிறோம். இந்த யுத்தத்தின் முடிவில் நாம் வரலாற்றினை இழந்த ஒரு மனித சமூகமாக நிர்க்கதியாய் தவிக்கப்போகிறோம் என்பது எமது கண் முன்னால் புலப்படுகின்ற உண்மை. ஏனெனில் வரலாற்றினை இழந்த ஒரு சமூகம் நிச்சயமாய் முன்னேற்ற பாதையில் நடைபோடாது என்பதனை காலம் எமக்கு கற்றுத்தந்துள்ளது. தமது வரலாற்றினை அழிக்கின்ற அழிவுப்பாதையில் நகர்ந்து கொண்டிருக்கும் இலங்கைச் சமூகம் என்றுதான் யதார்த்தம் அறிந்து அபிவிருத்திப்பாதையில் முன்னேருமோ!!

—ஷாஹிர—

ஒரு பொல்லாப்புமில்லை

இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 03 - இருக்கை 04

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com

ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் /ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
க. பிரணவன்
பஸ்லான் மொஹமட்

கௌரவ ஓவியர் :
ஆசை இராசையா

ஓவியர் :
சஞ்ஜீத்

முதன்மை வடிவமைப்பு :
முஜீன்நாத்

வடிவமைப்பு :
க. பிரணவன்
சோ.விபுலன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதிஸ்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காதலர் தினம் சிறப்பு

என்



மரக்கிளையில் கூடு கட்டி
விளையாடிய – மாங்
கிளி நா(தா)ன்
மனக்கிளையில் கூடு
கட்டியதுதான் தவறா?
மரத்தடி நிழலில் உறங்கிய – என்
மனதிற்கு
உன் மனத்தடியில் – ஓர்
இடம் தேடியதும் தவறா?

வயிற்றினில் மழை சுமக்கும்
மேகங்கூட – என்னோடு
மழலை மொழி பேசுமடி!
என் மனதினில் – உன்னை
மழலையாய் சுமக்கின்றேன்
மனம் விட்டுப் பேச
என்ன தயக்கமடி!
சேற்றினில் விழுந்தது – செந்
தாமரை என்றாலும்
என் நெஞ்சம் வலிக்குமடி!
நேற்றிதைச் சொன்னேன் – உன்

நெஞ்சம் திறக்கவில்லை
நெருப்பாக – என்
சுவாசமடி!

வழிந்தோடும் – என்
விழி நீரைக் கண்டு
விரைந்தோடும் – நதி
நீரும் சிவக்கின்றது
கரைந்தோடும் – என்
கண்ணீரில்
உன் கனவுகளின் சாயலடி
விரைந்தோடி – நீ
வருவாயா?
என் விழி நீரும் – உன்னை
விரும்பியே அழைக்குதடி

அழைக்கின்றேன் – உன்னை இதழால்
அல்ல
என் இதயத்தால்
அனைக்கின்றேன் – உன்னை
உடலால் அல்ல
என் உள்ளத்தால்

காதலியே

த.றமணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சோடு நான்கு நாளிருந்தால்

செங்கை ஆழியானின்

காலை 10 மணிக்கு மேல் இருக்கும். அன்று காலையும் மழைத் தூறல் துளிகள் மண்ணில் இறங்கியதால் முருகேசர் வயலைப் பார்க்கச் சென்று விட்டார். தங்கைகள் மலரும் மாலதியும் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். மதியச் சமையலுக்கு நேரமிருந்ததால் புலிகளின் வானொலியை மைதிலி கேட்டுக் கொண்டிருந்தாள். முற்றத்தில் கோழிகள் மேய்ந்தன. நிலத்தைக்கிளறி எதையோ தேடின. அவர்கள் வீட்டு நாய் மல்லிகைச் செடிக்கு அருகில் சுருண்டு படுத்திருந்தது. கோழிகளுக்கு வெறுந்தரையில் என்ன கிடைத்து விடப் போகின்றது? உள்ளே சென்று கொஞ்சம் நெல் மணிகளை எடுத்துவந்து போடலாம் என்ற எண்ணத்துடன் மைதிலி வாங்கிலிருந்து எழுந்தபோது படலையடியில் ஜீப் ஒன்று வந்து நின்றது. அண்ணனாக்கும்.. என்று மைதிலி நினைத்தபடி படலையைப் பார்க்க அதனைத் திறந்தபடி மணிசேகரன் வந்தான். உள்ளே வரலாமா? ஐயா வயலுக்குப் போட்டார். அதனாலென்ன வாருங்கோ. அண்ணை வரவில்லையா? மாணிக்கராசா எஞ்சினியரின் ஜீப்பில் வவுனியாவுக்குப் போட்டான். நான் வேறை வரோட வந்தனான். அவன் உள்ளே வந்தான். அவனை இருக்கச்சொல்ல மைதிலி விரும்பினாள். அதனைச் சொல்ல மறந்துபோய் வியப்புடன் அவனைப் பார்த்தபடி நின்றாள். வாறவையை இருக்கச் சொல்ல மாட்டியளோ? அவளை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தபடி மணிசேகரன் கேட்டான். மைதிலி தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். அவன் தன்னிடம் பேசத் தான் இந்த நேரத்தில் வந்திருக்க வேண்டும் என அவள் மனம் சொன்னது. இப்படி இருங்கோ. வாங்கில் அமர்ந்து கொண்டபடி அவளைப் பார்த்தான். நடுவானில் குரல் எழுப்பியபடி நீர்க் காக்கைள் விரைந்தன. மழைபெய்யத் தொடங்கிவிட்டது. இனிக் குளத்துக்குத் தண்ணீர் வரத்தொடங்கி விடும். அவற்றுக்குக் கொண்டாட்டம் தான். நீர்க்கம்பிகளாகத் தூறிய மழை சற்றுப்பலக்கத் தொடங்கியது. மழை நல்லாப் பொழியுது. நீங்கள் சமைக்கவில்லையா? என்பார் மைதிலி. என்றாள் அவள் தன்னை அறியாமல். மணிசேகரன் வியப்புடன் அவளை ஏறிட்டபடி மத்தியானம் சாப்பிட வரட்டுமா? வேண்டாம் வேண்டாம். பயந்து போகாதையுங்க. நான் இண்டைக்குக் கனநேரம் தங்கமாட்டன். மன்னாருக்குப் போய்ச் சாப்பிடுகிறம். நீங்க கேட்டாலும் இண்டைக்குச் சாப்பாடு இல்லை. ஐயா இன்னமும் வரவில்லை மரக்கறி தான் உங்களுக்குப் பிடிக்காது. மரக்கறி எனக்குப் பிடிக்காதெண்டு ஆர் சொன்னது. பட்டினத்தாக்களுக்குப் பிடிக்காது எண்டு நினைச்சன். வேறொண்டுமில்லை ஆம்புளையள் இல்லாத வீட்டுக்கு வந்து சாப்பாடு போடுறியா எண்டு கேக்கிறது சரியில்லை. அவள் சிரித்தாள். அந்தச்சிரிப்பில் அவன் கரைந்து போனான். அப்ப எப்ப கேக்க வேணும்? முறையாகக் கேக்கவேணும். அப்படியெண்டால்? அவள் தலையைக் குனிந்து நிலத்தைப் பெருவிரலால் கோலமிட்டாள். இருவருக்குமிடையில் சம்பாசனையில் சகசநிலை ஏற்பட்டதும் அவள் கேட்டாள். அடம்பன்குள சேர்வ்வேக்கு எங்கை காம்ப் போடுறியள்? ஐயா மறுத்தது உங்களுக்குப் பிடிச்சிருக்காது தானே? அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லை மைதிலி. என்றான் அவன். அவள் பெயரை முதன் முதலாக அவன் அழுத்தி உச்சரித்தான். அவள் அதனைப் புரிந்து கொண்டாள். அவரில தவறில்லை. அவர் எடுத்த முடிவு சரி. நாங்க இப்ப சேர்வே முகாமை அடம்பன்குளத்துக் குடிமனையில் போடுறம். தன் தென்னந் தோட்டத்தை முதலாளி மயில்வாகனத்தார் அதுக்குத் தந்திருக்கிறார். அடம்பன்குளம் முறிப்பத் திருத்திறதால எல்லாரிலும் பார்க்க அவருக்குத் தான் நன்மை என்பது எங்களுக்குத் தெரியும். நாங்க என்ன செய்யிறது? தன்ரை பங்கைப் பிரித்துப் பல பங்காளர் பேரில எழுதி வைச்சிருக்கிறார் புத்திசாலி. மைதிலி உங்கட ஐயாவும் பங்காளர்களும் பெட்டிசம் அனுப்பி வைச்சிருக்கினம். எஞ்சினியர் விசாரித்து முடிவெடுத்துச் செய்ய விரும்பினாலும் தாமதப்படுத்தாது அடம்பன்குள அளவீட்டைச் செய்யும்படி பொடியள் கேட்டிருக்கினம். அதுக்கு அப்பீல் இல்லை. வெள்ளாங்குள ஆக்களும் இதை விடமாட்டினம். அவர்களின் முழு வாழ்க்கையும் வெள்ளாங்குளத்து நீர்வரத்தில தான் தங்கியிருக்குது. காளி அம்மன் கோயில் திருவிழா சனிக்கிழமை நடக்க இருக்குது? ராராவா நடக்கும். நல்லா இருக்கும். வாறியளா? என்றாள் மைதிலி. அவள் அழைப்பை மணிசேகரன் எதிர்பார்க்கவில்லை. மைதிலி. அவன் குரலில் குழைந்த வாத்சல்யத்தில் அவள் கரைந்து போனாள். படலையைத் திறந்து மூடும் சத்தம் கேட்டது. இருவரும் பார்த்தனர் பவானி உள்ளே வந்தாள். "அவர் வந்திருக்காராக்கும் என்று நினைச்சன்." பவானி வெட்கப்பட்டுச் சிரித்தாள். அவர்களை நிமிர்ந்து பார்க்க அவளால் முடியவில்லை. அண்ணை வரவில்லை பவானி. ஏதாவது சொல்கிறதெண்டால் என்னிடம் சொல்லும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தூது போறன்.என்ற மணிசேகரனின் வார்த்தைகள் அவளை வெட்கப் படவைத்தன. தலையைக் குனிந்து கொண்டாள். நான் போயிட்டுவாறன். என்றபடி மணிசேகரன் எழுந்தான். நேரம் கிடைத்தால் காளி அம்மன் திருவிழாவுக்கு வாறன். வரேக்கை மாணிக்கராசாவைக் கட்டாயம் கூட்டி வாறன். இரு கன்னிகளின் இதயங்களைக் காவிக்கொண்டு ஜீப் விரைவது கேட்டது.வெட்டவெளியின் நடுவில மகிழமரம் செழித்து ஓங்கி வளர்ந்திருந்தது. காளியம்மனின் கோயில் சிறிய கற்கட்டிடத்தால் ஆனது. கர்ப்பக்கிரகமும் ஓடு வேய்ந்த அர்த்த மண்டபத்தையும் கொண்டது. வெள்ளாங்குள மக்களுடன் சுற்றாடலிலிருந்தெல்லாம் வந்திருந்த சனக்கும்பலால் அப்பிரதேசம் களை கட்டியிருந்தது. பூநகரிலிருந்து கொண்டு வந்திருந்த ஒலிபெருக்கிகளும் மின்பிறப்பாக்கியும் அப்பிரதேசத்தைப் பகலாக்கி சத்தத்தால் நிறைத்திருந்தது. ஆலயத்துக்குச் சம்பந்தமில்லாத சினிமாப் பாடல்களால் அப்பிரதேசம் நிரம்பி வழிந்தது. மாலையே வெள்ளாங்குளத்துக் குடும்பங்கள் பொங்கல் பானைகளை முக்கற்களில் வைத்து அடுப்பை மூட்டிவிட்டார்கள்.

பொங்கித் தள்ளுவதற்காகப் பானைகள் கொதித்துக் கொண்டிருந்தன. வில்லுப்பாட்டு மெல்லிசை போன்ற நிகழ்ச்சிகள் பின்னிரவில் நடக்கவிருந்தன. அவற்றுக்குப் பிறகு அம்மன் வீதி வலம் வருவாள். தர்மகர்த்தாத் தலைவர் முருகேசர் வெகு மும்முரமாகக் கோயிலுக்குள் நின்றார். மைதிலியும் பவானியும் கோயில் முற்றத்தில் பொங்கல் பானைகளை வைத்திருந்தார்கள். பொன்னப்பரின் மனைவியும் மகள் பவானியும் தங்கள் பொங்கல் பானை அடுப்புக்குப் பக்கத்தில் மோதகம்

அவிக்கும் வேலையையும் கவனித்தனர். இவர்களைக் கவனித்தபடி இரண்டு இளம் உள்ளங்களும் இருந்தன. மாணிக்கராசா பவானியின் அருகில் நின்றிருந்தான். அவனருகில் மணிசேகரன் மைதிலி பொங்கும் அழகைப் பார்த்தபடி நின்றிருந்தான். தங்கள் மனங்களில் பதிந்தவர்கள் தம் அருகுகளில் நிற்பது அப்பெண்களுக்கு வெகு உற்சாகத்தைக் கொடுத்தது. சொன்னபடி மணிசேகரன் மாணிக்கராசாவையும் அழைத்துக் கொண்டு ஜீப்பில் வந்திருந்தான். அவர்களின் வருகை பொங்கல் விழாவுக்குத் தனிக் கோலாகலத்தைக் கொடுத்தது. ஆரம்பத்தில் அவர்களின் வருகையைப் பராக்கு பண்ணாத மகேந்திரன் மணிசேகரனின் விழிகள் மைதிலியில் அடிக்கடி மொய்ப்பதையும் இடையிடையே மைதிலியின் கண்கள் மணிசேகரனைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் தலைகுனிவதையும் அவதானித்த போது ஆத்திரமடைய வைத்தது. எங்கிருந்தோ வந்தவன் தான் பார்த்திருக்கும் பூவைப் பறித்துக் கொண்டு போவதா? பெற்றோரிடம் சொல்லி விரைவில் கலியாணத்தை ஒப்பேற்ற வேண்டும். மகிழமரத்தின் கீழ் கூடியிருந்த வெள்ளாங்குள இளைஞர்கள் சொன்னவை அதற்குப் பின்னர் மகேந்திரனுக்கு உறைக்கவில்லை. உதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது அடம்பன்குளத்தைக் கட்டி வெள்ளாங்குளத்துக்கு வாற தண்ணியை மறிக்க விடக்கூடாது. இவ்வளவு காலமும் எங்கை போனவை? பரம்பரை பரம்பரையாக நிலவிய ஒழுங்கை மாற்றப் பார்க்கினம். அடம்பன் குளத்துக்குத் தண்ணியைக் கொண்டுவாற கழிவு ஆறுகள் அடம்பன் குளத்தின் ஊடாகத் தான் பாய்கின்றன. இவ்வளவு காலமும் இல்லாமல் புதுநாணயமாக இப்ப செய்யிறதுக்கு மயில் வாகனத்தாரின் சதி தான் காரணம். என ஓர் இளைஞன் பொரிமினான். கால்மை கொழும்பில லேக்கவுஸ் அருகில் குண்டு வெடிச்சிட்டுதாம். பஸ்ஸில் வைச்சிருக்கினமாம். அறுபது பேருக்குமேல் பலியாம். அதனால பதட்டமாம். நேற்று ராத்திரி நெடுந்தீவுக் கடலில் நேவியின்ர டோறாப் படகை பொடியள் தாக்கிட்டினமாம். அதனால் இண்டைக்கு புதுக்குடியிருப்பில பொம்பர் குண்டு வீசியிருக்காம். அழிவு தெரியவில்லை. மணலாற்றிலும் சண்டையாம். இருந்

தாற் போல மெல்லிய இரைச்சல் தெற்கு அடிவானத்தில் கிளம்பியது. அதனைக் கவனித்த மகேந்திரன் பொம்பர்கள் வாறது போலக் கிடக்குது என்று எச்சரித்தான். மெல்லியதாகக் கிளம்பிய சத்தம் கணப்பொழுதில் பெரிய இரைச்சலாகியது. இரண்டு பொம்பர் விமானங்கள் வானத்தின் குறுக்காகக் கோடுகளிட்டன. கடுர இரைச்சலுடன் வடக்காக விரைந்தன. பின்னர் வட்டமிட்டபடி திரும்பின. திருவிழாவுக்கு வந்திருந்த மக்கள் பதற்றம் அடைந்தனர். அல்லோல கல்லோலமாக ஓடத்தொடங்கினர் லைற்றுகளை நிப்பாட்டுங்கோ. என்று ஒருவர் கத்தினார். அதற்குள் குத்தி இறங்கிய பொம்பர் ஒன்றிலிருந்து விடுபட்ட குண்டு ஒன்று அத் திருவிழாச்சனக் கும்பலைநோக்கி விரைந்து விழுந்தது. அடுத்த பொம்பரும் இன்னொரு குண்டைக் கழற்றிவிட்டது. குப்புறப்படுங்கோ. படுங்கோ. என்று மணிசேகரன் கத்தினான். மைதிலியை இழுத்து நிலத்தில் விழுத்திவிட்டான். முதலாவது குண்டு சரியாக காளிஅம்மன் மண்டபத்தில் விழுந்து சிதறியது. மற்றைய குண்டு அதற்கு அப்பால் கிழக்காக வெறும் வெளியில் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தது. குய்யோ முறையோவெனக் கூக்குரல் சத்தம் அவ்விடத்தில் நிரம்பியது. கோயில் மண்டபம் தகர்ந்து சரிந்தது. அவ்விடத்தைவிட்டு பொம்பர் விமானங்கள் அகன்றுவிட்டதை உறுதிப்படுத்திய பின்னர் அதன் அழிவுகள் தென்பட்டன. மண்டபம் எங்கும் இரத்த வெள்ளம். சிதைந்த சடலங்கள சிதறிக்கிடந்தன. கோயில் மண்டபத்தில் நின்றிருந்த எவரும் தப்பவில்லை. ஐயர் உதவி ஆட்கள் முருகேசர் ஆகிய இருபது பேர் காணமற் போயினர் அதைக் குவியல்களாயினர். ஐயோ.. என்றலறினாள் மைதிலி. ஏன் இந்தக் கொடுமை? சாதாரண மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? என்ன கேட்டார்கள்? ஐயோ என்ர ஐயா.. சொந்தங்களை இழந்தவர்களின் ஓலம் அப்பிரதேசமெங்கும் நிறைந்திருந்தது.

-தொடரும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பு

எங்கள் தேசத்தின்..!

"மோனாலிசா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரச்சைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உபாயிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation

Digitized by Noolaham Foundation.
noolaham.org

EXPOAIR

your friend in the skies...

Experience Friendliness . . .

Fly ExpoAir. . .



Discover Jaffna . . .

Expo Aviation (Pvt) Ltd.